
# விந்தன்

மு. பரமசிவம்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்



விந்தன்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோ தனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்கு கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை ஓர் எழுத்தர் எழுதுகிறார். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம். (நாகார்ஜுன மலைச் சிற்பம். கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி: நேஷனல் மியூசியம், புதுதில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# விந்தன்

மு.பரமசிவம்

சாகித்திய அக்காதெமி

*Vindhan*: Monograph in Tamil by Mu.Paramasivam, Sahitya Akdemi, New Delhi.(2001)Rs.25

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு: 2001
ISBN 81-260-1246-3

**சாகித்திய அக்காதெமி**

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டிடம், டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

சி.ஐ.டி. வளாகம், டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி,
சென்னை 600 113.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

விலை: ரூ. 25

ஒளிக் கோப்பு: பிரசிஸ்தா கிராபிஃக்ஸ், சென்னை.

*அச்சகம்: நாகார்ஜுனா பிரிண்டர்ஸ், சென்னை-21.*

# உள்ளே


| | |
|---|---|
| என்னுரை | 6 |
| நானும் விந்தனும் | 7 |
| 1. வாழ்க்கைப் பாதையிலே | 9 |
| 2. சிறுகதைகள் | 22 |
| 3. நாவல்கள் | 51 |
| 4. புதிய வடிவங்கள் | 81 |
| 5 விந்தனின் கவிதை உலகம் | 85 |
| 6. கட்டுரைகள் | 88 |
| 7. பத்திரிகை உலகில் புரட்சி | 92 |
| 8. திரை உலக நாயகர்கள் | 94 |
| 9. மனிதனைத் தின்ற எழுத்துக்கள் ! | 97 |
| பின்னிணைப்புகள் | 100 |

# என்னுரை

பாரதியார் வ ரா கல்கி ஆகியோரின் வழியைப் பின்பற்றியும், அதற்கு மேலே ஏழை எளிய உழைப்பாளி மக்களைப் பற்றி சிந்தித்தும, ''இருப்பவனைப் பற்றி எழுதி அவன் பணத்துக்கு உண்மை இரையாவதை விட இல்லாதவனைப் பற்றி எழுதி அவன் அன்புக்கு உண்மை இரையாவதே மேல்!'' என்னும் கொள்கையுடன் நாற்பது ஆண்டுகள் எழுதி எழுதியே பலரின் தூற்றுதலுக்கும், சிலரின் போற்றுதலுக்கும் ஆளான விந்தனின் இலக்கியப்பணி குறித்து இந்திய இலக்கிய சிற்பிகள் வரிசையில் நூல் எழுதுமாறு பணித்த சாகித்ய அகாதெமி நிர்வாகிகளுக்கும், என் எழுத்து பணிக்கு உதவியாக இருந்து வரும் எனது மருமகள் 'மகி' எனும் திருமதி உமாரமேசுக்கும் என் மனமார்ந்த வணக்கமும் பாராட்டும்

தோழமையுள்ள
மு பரமசிவம்

# நானும் விந்தனும்

1950-ஆம ஆண்டு ‘கல்கி’ பத்திரிகையில் விந்தன் எழதிய ‘பாலும் பாவையும்’ நாவலின் கையெழுத்துப்பிரதியைப் படித்தது முதல் அவர் பேரில் மதிப்பும் மரியாதையும் உண்டானது விந்தனின் ‘முல்லைக்கொடியாள்’ சிறுகதைத் தொகுப்பைத் தேடிப் படித்தேன் ‘முல்லைக் கொடியாள்’ தொகுப்பில் உள்ள கதைகள் அனைத்தும் வித்தியாசமானவை இதுவரை ஏழை எளியவர்களைப் பற்றி உழைக்கும் வர்க்கததைப் பற்றி, எந்த எழுததாளரும் எழுதாத நிலையில விந்தன், அவர்கள் அனுபவிக்கும் துன்பத்துயரங்களை உணர்ச்சித் துடிப்புடன் எழுதியதைக கண்ட போது அவர் மேல் எனககுள்ள மதிப்பு கூடியது அதனால் அவரின கதைகளை தொடர்ந்து படித்தேன்

1954-ஆம் ஆண்டு விந்தன் ‘மனிதன்’ பத்திரிகையை வெளியிட்டார் அச்சமயத்தில் ஒருநாள் என்னைத் தேடி வந்தார், சிறு உதவி கேட்டு! அன்று முதல் விந்தனுக்கும் எனக்கும் நெருக்கம் ஏற்பட்டது

1960-ஆம் ஆண்டு கவிஞர் தமிழ்ஒளி, என்னை விந்தனின் ‘பாலும் பாவையும்’ நாவலை நாடகமாக்கப் பரிந்துரைத்தார் அதன்படி ‘பாலும் பாவையும்’ நாடகமாக 15-7-1964-இல் சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் டாக்டர் மு வரதராசனார் தலைமையில் என் தனி முயற்சியால் அரங்கேறியது

நாடகத்திற்கான பாடல்களை விந்தனும் கவிஞர் தமிழ்ஒளியும் எழுதினார்கள்

1975-இல் விந்தன் மரணம் அடைந்தார் அதன் பின்னர், 1982-இல் ‘விந்தனும் விமர்சனமும்’ என்று பல எழுத்தாளர்கள் விந்தன் பற்றி எழுதிய தொகுப்பு நூலை வெளியிட்டேன 1983-இல் எனக்கும் விந்தனுக்கும் உள்ள நட்பை, அவரின் வாழ்க்கையை ‘மக்கள் எழுத்தாளர் விந்தன்’ என்ற பெயரில் எழுதி வெளியிட்டேன்

இந்த நூலை ‘குமுதம்’, ‘ஆனந்தவிகடன்’ போன்ற பத்திரிகைகள் பாராட்டின

1987-இல் விந்தன் எழுதிய ஆறு நாவல்களையும் விரிவாக ஆய்வு செய்து ‘விந்தன் நாவல்கள்’ என்ற நூலை வெளியிட்டேன்

1999-இல் விந்தன் கட்டுரைகளைத் தொகுத்து 'விந்தன் கட்டுரைகள்' என்ற நூலை வெளியிட்டேன் அதே ஆண்டில் விந்தன் நடத்திய 'மனிதன்' இதழில் வெளியான சிறந்த கதை, கட்டுரைகள், கவிதைகளைத் தொகுத்து 'மனிதன்' இதழ் தொகுப்பு என்னும் நூல் வெளிவர உதவினேன்

2000-இல் 92 விந்தன் கதைகளின் தொகுப்பு இரண்டு நூல்களாக வெளிவந்தது

2001-இல் விந்தனின் பத்து ஆண்டு திரையுலக வாழ்க்கையை எழுதி 'திரையுலகில் விந்தன்' என்ற நூல் வெளிவந்தது

இருபத்தைந்து ஆண்டுகள் விந்தனோடு பழகிய நான், அவரின் மறைவிற்குப் பின்னர் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அவரைப்பற்றி பேசியும் எழுதியும் வருகிறேன்.

# 1
# வாழ்க்கைப் பாதையிலே...

செங்கற்பட்டு மாவட்டம் நாவலூர் என்னும் சிற்றூரில் வேதாசலம் - ஜானகியம்மாள் தம்பதிகளின் முதற் படைப்பு (கோ) விந்தன்.

இப் படைப்பின் சமூகப்பிரவேசம் 22.09.1916-இல் நிகழ்ந்தது.

**வளர்ந்த ஊர்**

அகில இந்திய தொழிற்சங்க வரலாற்றில் சென்னை சூளை பட்டாளம் பகுதிக்குச் சிறப்பான இடம் உண்டு. அந்தப் பகுதியில் உள்ள பி அண்ட் சி ஆலையின் பெருமை எவ்வளவு பெரியதோ அதைவிடப் பன்மடங்கு பெரியது அங்குள்ள தொழிலாளர்களின் போராட்ட உணர்வுகள்.

அந்த மண், போராட்டங்கள் துப்பாக்கிச் சூடுகள், மரணங்கள் இன்னும் பிற சோதனைகளை நிகழ்த்தி தியாகிகளை உருவாக்கிய தழும்பேறிய மண்!

அந்த மண்ணில் தொழிலாளர்கள் சிந்திய உதிரமும் உரத்த குரலும் புகைபோல் வானோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. பஞ்சாலைக் குழாய்களில்.

வீரம் விளைந்த அந்த மண்ணில் விளையாடி வளர்ந்த கோவிந்தன் தான் பின்னர் தாம் விளையாடிய மண்ணின் மாந்தனைப் பற்றி சிந்தித்த புதுமலர்ச்சி எழுத்தாளர் (கோ)விந்தன்.

**கல்வி**

'இளமையில் கல்' என்னும் வாசகத்தின் பயனை வறுமை மிகுந்த வாழ்க்கையில் வாய்க்கப் பெறாத கோவிந்தன், நடுநிலைப் பள்ளி கல்வியைக் கூட முடிக்காமல் தம் தந்தையோடு கருமான் வேலைக்குப் போனார்.

உடல் வலிமை மிகுந்தவர்களுக்கே உரிய கருமான் பட்டறை வேலை நோஞ்சான் போல் இருந்த கோவிந்தனுக்கு ஒத்து வராததால் மீண்டும் படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தோடு, அக் காலத்தில்

தேசிய உணர்வு மிக்க இளைஞர்கள் நடத்திய இலவச இரவு பள்ளியில் சேர்ந்து படித்தார்.

ஓரளவு கல்வியறிவு பெற்ற பின்னர் ஓவியம் கற்க விரும்பி சென்னை ஓவியக் கல்லூரியில் சேர்ந்தார் அங்கு முழுமையாக ஓவியம் கற்க வசதி இல்லாததால் ஓவியத்தையும் பாதியிலேயே விட்டார்.

மீண்டும் ஜெமினி ஸ்டுடியோவில் விளம்பரப் பிரிவில் ஓவியராகச் சேர்ந்தார். அந்தக் காலகட்டத்தில் தான் அவர் குடும்பத்தில் சூழ்ந்திருந்த அறியாமையும் வறுமையும் அவரின் ஓவிய நெஞ்சை அம்பு போல் குத்தின.

பொதுவாக நம்மவர்களுக்கு ஒரு குணம் உண்டு. படைக்கும் தொழில் தரித்திரத்தின் ஊற்று என்று முகம் சுளிப்பார்கள். நம்மைச் சுற்றி ஆயிரம் தரித்திரங்கள் அன்றாடம் நம்மை அலைக்கழித்தாலும் அதற்கெல்லாம் விதியென்று வேதாந்தம் பேசுவார்கள் நம்மிடையே ஒருவன் படைக்கும் பணியில் ஆர்வம் காட்டினால் 'அய்யோ இது தரித்திரமான தொழிலாச்சே!' என முயற்சியை முளையிலே கிள்ளியெறிவார்கள். அப்படிப் பலமாக கிள்ளி கோவிந்தன் ஓவியனாகும் முயற்சியைத் தடுத்த பெருமை கோவிந்தனின் பாட்டனாருக்கே உரியது

வறுமையும் அறியாமையும் மிகுந்த குடும்பத்தில் பிறந்த கோவிந்தன் தமக்கென்று ஒரு தொழிலும் அமையவில்லையே வயதோ இருபது நெருங்கிவிட்டது எதிர்காலம் எப்படி இருக்கும் என்று சிந்தித்தபோது அவரின் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டியாக திகழ்ந்தவர் கல்கி. டி.எம். இராஜாபாதர்.

## பாரதிதாசன் பாடலை அச்சுக்கோர்த்தவர்

டி.எம். இராஜாபாதர் ஓர் அச்சுத் தொழிலாளியின் மகன். இவருடைய தகப்பனார் மாணிக்கம் அக்கால அச்சுத் தொழிலாளர்கள் மத்தியில் 'குடுவை' மாணிக்கம், கூத்தாடி மாணிக்கம் என்று புகழோடு இருந்தவர்.

'ஆனந்த போதினி' அச்சகத்தில் போர்மேனாக இருந்த மாணிக்கத்தை அமரர் வாசன் 'வாத்தியாரே' என்று அழைக்கும் அளவுக்கு மாணிக்கத்தின் பேரில் அன்பு கொண்டவர் வாசன்.

அப்பாவின் செல்வாக்கினால் டாக்டர் மாசிலாமணி முதலியார் நடததிய தமிழரசு அச்சகத்தில் அச்சுக்கோர்க்கும் தொழிலாளியாக வி. கோவிந்தனைச் சேர்த்து விட்டார் இராஜாபாதர்.

கோவிந்தனும் இராஜாபாதரும் நண்பர்களாவதற்குக் காரணமாக இருந்தவை இரண்டு பேரும புளியந்தோப்பில் ஒரே தெருவில்

வாழ்ந்தவர்கள் என்பதைவிட இருவரும் ஒரே வர்க்கத்தில் பிறந்தவர்கள் என்பதே பொருத்தமானது!

இந்த வர்க்க ஒற்றுமை இராஜாபாதருக்குப் புரிந்ததோ என்னவோ கோவிந்தனுக்குப் புரிந்திருக்கும் அதிலும் எதையும் வெள்ளையாகப் பேசும் இராஜாபாதரைப் பிடித்திருக்கும்.

'தமிழரசு' அச்சகத்தில் அச்சுக்கோர்க்கும் தொழிலாளியாகச் சேர்ந்த கோவிந்தன், அச்சுக் கோர்ப்பது போல் புதிய புதிய எண்ணங்களையும் கோர்த்துத் தமிழோடும் தமிழ் அறிஞர்களோடும் பழகும் வாய்ப்பைப் பெற்றார்.

அக் காலத்தில் 'தமிழரசு' இதழின் ஆஸ்தானக் கவிஞராக இருந்து வந்த புரட்சி கவிஞர் பாரதிதாசன் எழுச்சி மிகுந்த கவிதைகள் எழுதினார் அவற்றில் 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்னும் சிறப்பான கவிதையை முதன் முதலில் அச்சுக்கோர்த்த பெருமை பிற்காலத்தில் கவிஞராக, எழுத்தாளராக மலர்ந்த விந்தனுக்கே உரியது. அச்சுத் தொழிலாளி கோவிந்தனுக்கே உரியது.

அந் நாளில் அச்சகத்தில் பணிபுரிந்த பலர் பிற்காலத்தில் பல துறைகளில் சிறந்தவர்களாகப புகழ் பெற்றவர்கள்.

எதிர்காலத்தில் எழுத்தாளராக மலர்வோம் என்று எப்படி விந்தனுக்குத் தெரியாதோ அதேபோல் முன்னாள் அமைச்சர் என்.வி. நடராசன், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. நாட்டியக்கலைஞர் நடராஜ் - (சகுந்தலா) ஆகியோருக்கும் தெரியாது. நாட்டியக் கலைஞர் நடராஜ் 'தமிழரசு' அச்சகத்தில் டிரெடில்மேனாக இருந்தவர்.

அச்சுப் பட்டறை பல அறிஞர்களை, அரசியல்வாதிகளை உருவாக்கியிருப்பது உண்மைதான் என்றாலும், அவர்களில் ரொம்பவும் மாறுபட்டவர் கோவிந்தன் ஆம், ஜீவிப்பதற்கு அச்சுத் தொழிலைப் பயின்றவர், தாம் அச்சுக் கோர்த்த எழுத்துகளில் வனப்பும் வளமையும் மிகுதியாக இருப்பதால் தமிழ் மொழியின் மேல் பற்றுக்கொண்டு வனப்பும் வளமும் மிகுந்த தமிழில் வாழ்க்கையின் யதார்த்த உணர்வுகள் வெளிப்படாதால் பெரு மூச்சும் பெருத்த ஏமாற்றமும் அடைந்தார்

இத்தகைய பாதிப்புக்கு ஆளானவர் சமூகத்தை நேருக்கு நேர் காணத் துடித்தார். அதற்கு அவருடைய சுயவாழ்க்கையே ஆதாரமாக இருந்தது

அச்சுத்தொழில் இன்று நவீன வசதிகளுடன் கூடிய முற்போக்குத் தொழிலாக வெளி உலகத்துக்குக் காட்சியளித்தாலும் இவ் வளர்ச்சிக்கு காரணமான தொழிலாளர்களின் வாழ்க்கை பின்னடைந்த பிற்போக்குத்தனமான நலிந்த வாழ்க்கை என்பதை இன்றும் கண்கூடாகக் காணலாம்

அனைத்திந்திய அளவில் அச்சகங்கள் நிறைந்த மாநிலம் நம் தமிழகம்தான் என்றாலும், அதர்மங்களுக்குக் குறைவில்லாத மாநிலமும் நம் தமிழகமதான்! அன்று ஒரு 'காலி'க்கு ஆறணா வாங்கிய தொழிலாளி இன்று அன்றாடக் கூலியாக ஆறு ரூபாய் பெறுகிறான். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் அச்சகங்களில் 'பீஸ்ரேட்' 'காண்ட்ராக்ட்' முறையே பிரதானமாக இருந்தது. இன்றும் அந்த சுரண்டல் முறை நீங்கவில்லை என்பதைவிட நிலைத்து வேரோடிக் கொண்டிருக்கிறது என்பதே வேதனைக்குரியது.

'பீஸ்ரேட்' 'காண்ட்ராக்ட்' போன்ற அவலங்களுக்கு ஆளாகி அன்றாடக் கூலியாக ஆறணா பெற்றவர்தான் அறிவு ஜீவியான கோவிந்தன்.

தினமும் காலையில் சேர்ந்தே வேலைக்குப்போகும் கோவிந்தனும், இராஜாபாதரும் மாலையிலும் சேர்ந்தே வீடு திரும்புவார்கள். ஒரே மாற்றம் இருவர் கையிலும் காலையில் சோத்து மூட்டை இருக்கும். மாலையில் ஆறணா அவர்கள் பாக்கெட்டில் கனக்கும்.

புளியந்தோப்பிலிருந்த தங்கசாலை தெருவிற்கும் தங்கசாலை தெருவில் இருந்து புளியந்தோப்புக்கும் நடந்தே பழகியவர் நண்பர்கள், காலையில் கண்ணை மூடிக்கொண்டு வேலைக்குப் போவார்கள். மாலையில் நடந்து வருவது நண்பர்களுக்கு சுகானுபவமாகவும் சுய சிந்திப்புக்கு ஏற்றதாகவும் இருந்தது.

விந்தனுக்கு எழுத்து நடைவேகமானது என்றாலும் அவர் சொந்த நடை நிதானமானது. எதையும் நிதர்சனமாக நின்று கவனிக்கக் கூடியது. இந்தக் கவனிப்புடன் சாலையில் வாழ்க்கையை நடத்தும் குடும்பங்களை, போலீஸ்காரன் மிரட்டலுக்கு பயந்து முந்தானையில் உள்ள காசையெல்லாம் அவனுக்கு அவிழத்துக் கொடுத்துவிட்டு தேற்றுவார் யார்? என்று தெருவில் தேம்பி அழும் கூடைக்காரியை, சகலவிதமான இறைச்சிகளுடன் சோத்துக்கடை நடத்தும் நடைபாதை ஓட்டல்களைக் கவனிக்கத் தவறியதில்லை.

காட்சிகள் கண்ணால் கண்டவர் அதற்கான காரணங்களை அறிய ஆவல் கொண்டபோதிலும் அவர்களோடு பேசக் கூச்சப்பட்டு நண்பன் உதவியோடு அவர்களுடன் பேசுவார். சில தினங்களில் பசியைப் போக்க நண்பர்கள் இருவரும் நடைபாதை ஓட்டலில் கையேந்தி சோறு வாங்கித் தின்ற அனுபவமும் உண்டு. கோவிந்தனுக்கும் அச்சுத் தொழில் அறிவுபூர்வமான தொழிலாக இருந்தாலும் அதில் அவருக்கு வாழ்க்கைக்குப் போதுமான வருவாய் கிடைக்காததால், 'தமிழரசு' அச்சகத்திலிருந்து ஆனந்த போதினி, 'தாருல் இஸ்லாம்' போன்ற அச்சகங்களுக்கு மாறி அனுபவமிக்க கம்பாசிட்டராக ஆனந்த விகடன் அச்சகத்தில் சேர்ந்தார்.

விகடன் அச்சகத்தில் கோவிந்தனின் பழைய நண்பர்களான இராஜாபாதர், ராம்லால், சிவலிங்கம் போன்றவர்களோடு வாத்தியார் மாணிக்கமும் இருந்தார் அப்போது விகடன் ஃபோர்மேனாக இருந்தவர் தட்சணாமூர்த்தி தேசபக்தி மிக்க காங்கிரஸ்காரர், கோவிந்தன் மேல் மிகுந்த அன்புடையவர்

## திருமணம் ஆனது

விகடன் அச்சகத்தில் சேர்ந்த பிறகே எழுத ஆரம்பித்தார் கோவிந்தன் பத்திரிகைகளுக்கு கதைகள் எழுதி அனுப்பினார் அக் காலத்து பத்திரிகைகள் 'மேட் ஆர்டர்' கதைகளைப் பிரசுரித்துக் கொண்டிருந்ததால், அச்சுத் தொழிலாளியின் கதைகளை பிரசுரிக்க அச்சம் கொண்ட போதிலும், அக் காலத்திலேயே சுதேசமித்திரன் பத்திரிகைக்கு 'விஷயதானம்' செய்து வந்தவர் கோவிந்தன்

தம் கதைகளை பத்திரிகைகள் பிரசுரிக்காததால் வருத்தம் அடைந்தவர் விகடன் இதழில் பிரதான அம்சமாக இருந்த பகுத்தறிவுப் போட்டியில் மறைமுகமாகக் கலந்துக்கொண்டு வெற்றி பெற்றதும் உண்டு.

இளமையிலே வாழ்க்கையின் சுவையறியாத கோவிந்தன் ஆடம்பரத்தில் பற்றின்றி எளிய வாழ்க்கை வாழ்ந்து கடுமையாக உழைத்ததால் கையில் காசு புரண்டது

மகன் கையில் காசு புரள்வதைக் கண்ட பெற்றோர்கள் கல்யாணப் பேச்சுப் பேச ஆரம்பித்தார்கள். அந்தப் பேச்சு கோவிந்தனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

கோவிந்தன் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார் இந்தச் சமூகத்தில் தனி மனிதன் சுயமரியாதையோடு வாழ்வதற்கு எத்தனைத் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது? இந்த லட்சணத்தில் துணையோடு வாழ்ந்தால் என்னென்ன கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக நேருமோ, எப்படி யெல்லாம் வாழ்க்கை இருக்குமோ என்று அஞ்சினார் அதனாலேயே திருமணத்துக்கு சம்மதம் தெரிவிக்க மறுத்தார் எனினும் பெற்றோர்கள் மேலும் மேலும் வற்புறுத்தியதால் 30 04 1939 அன்று நீலாவதி என்னும் பெண்மணியை மணந்தார்

புதிதாக வாழ்க்கையை ஏற்றவர் தனக்கு ஒரு நிரந்தரமான தொழிலும் வருவாயும் வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தது ஒரு காலகட்டத்தில் புளியந்தோப்பு பகுதியில் 'ராயல் ஓட்டல்' என்னும் பெயரில் மிலிட்டரி ஓட்டல் ஒன்றைத் தொடங்கித் தன்னிடமுள்ள பொன்னான பொருள்களை யெல்லாம் விற்று மூலதனமாக்கினார்

'ராயல் ஓடடல்' சில நாள்களிலேயே மூடுவிழா கண்டு கோவிந்தனை முழுமையாக விழுங்கியது முதல் முயற்சியிலேயே தோல்வி கண்ட மனிதர் அடுத்து என்ன செய்வது என்று யோசிபபதற்குள் மனைவியும் குழந்தையும் அம்மை நோய்க்கு ஆளாகிப் பாயும் படுக்கையுமானார்கள்

என்றும் தன் கையே தனக்கு உதவி என்றும் நம்பிக்கையோடு வாழ்ந்தவர் வேதனையால் மனம் உடைந்து நோயுற்ற மனைவியையும் குழந்தையையும் பொன்னேரியில் உள்ள தன் மாமனார் வீட்டில் விட்டு விட்டுக் கையில் காசு ஏதும் இல்லாமல் நெஞ்சில் சுமையோடு கால் போன போக்கில் நடந்தார்

போன வழி புதிய வழி என்றாலும் நாலு பேர் நடந்து நைந்த வழி என்பதால் நடந்த வழியே நல்ல வழி என்று தொடர்ந்தார் நடை தளர்ந்து நின்ற வழி ஆண்ட நவாபுகள் அழிந்து பரமபக்கிரிகள் வாழும் வேலூர் என்று அறிந்து வேதனையை மறந்தார்

வேலூரில் சில உறவினர்கள் உண்டு என்பதைவிட இந்த ஊர் அச்சகங்கள் நிறைந்த ஊர் என்பதாலேயே அவருக்கு நிம்மதி கிடைத்தது

வேலூரில் சில மாதங்கள் தங்கி விக்டோரியா பிரசில் வேலை பார்த்தபோது மனைவியையும் குழந்தையையும் பார்க்க ஆசை கொண்டு, கூடவே நண்பன் நினைவு வரவே நண்பர் இராஜாபாதருக்கு கடிதம் எழுதினார் நண்பனிடம் இருந்து நல்ல பதில் வரவே சென்னைக்குத் திரும்பினார்

1941-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் நாள் சென்னை எழும்பூர் ரயில் நிலையம் எதிரில் உள்ள வசந்த விகாரை அடுத்துள்ள கட்டடத்தில் இருந்து 'கல்கி' முதல் இதழை வெளியிட்ட கல்கி நிறுவனத்தார் சில மாதங்களுக்குள் கீழ் பாக்கத்தில் சொந்தமாக வாங்கிய பழைய கட்டடம் ஒன்றில் மாறினர்

கல்கி-யின் மேல் பக்தியும் அவர் எழுத்தில் மதிப்பும் வைத்திருந்த டி எம் இராஜாபாதர் பேரில் கல்கியும் அன்பு வைத்திருந்தார் அந்த செல்வாக்கினால் தான் கோவிந்தனை கல்கி அச்சகத்தில் அச்சுக் கோர்ப்பாளராகச் சேர்த்தார்

கல்கி தீபாவளி மலர் ஒன்றுக்கு பேராசிரியர் கல்கி அவசர அவசரமாக எழுதிய 'வீணை பவானி' என்ற நீண்ட சிறுகதையை, எனக்கும் கடவுளுக்கும் தான் புரியும் என்று சொன்ன கல்கியின் கையெழுத்தை, கோவிந்தன் ஓர் எழுத்துகூட பிழையில்லாமல் அச்சுக்கோர்த்து ஆசிரியரை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார் ஒருநாள் பேராசிரியர் கல்கி இந்த விவகாரத்தை இராஜாபாதரிடம்

விசாரித்தபோது, இராஜாபாதர் கோவிந்தனை பேராசிரியர் முன் நிறுத்தினார் கோவிந்தனுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது 'இத்தோடு தொலைந்தோம்' எனும் அச்சத்தோடு இருந்தார்

எதையும் யதார்த்தமாகப் பேசும் இராஜாபாதர் 'இவன்தான்' என்று அதிகாரியின் தோரரணையில் சொல்லி நிறுத்தாமல் 'இவன் நல்லா கதையெல்லாம் எழுதுவான் சார்' எனப் பெருமிதத்தோடு கூறி தன் நண்பனை ஒரு படைப்பாளியை அறிமுகப்படுத்தினார்.

பேராசிரியர் கல்கி பார்வையை உயர்த்தி கோவிந்தனை வியப்போடு பார்த்து ''அப்படியா பேஷ்! ஒரு கதை எழுதி கொண்டு வா பார்க்கலாம்'' என்றதும் ஏற்கெனவே நடுங்கிக் கொண்டிருந்த கோவிந்தனின் உடம்பு மேலும் நடுங்கியது. நாம் எங்கே நிற்கிறோம் என்று புரியாத நிலை. இராஜாபாதருக்கோ ஒரு மகிழ்ச்சி. நண்பர்கள் இருவரும் அன்று மாலை கீழ்ப்பாக்கத்திலிருந்து புளியந்தோப்பு வரை ஆசிரியர் கதை கேட்ட விஷயத்தைப் பற்றியே பேசிக்கொண்டே நடந்தார்கள்.

அன்று இரவு கோவிந்தனால் நிம்மதியாக தூங்க முடியவில்லை. நள்ளிரவில் எழுந்து தகர விளக்கு வெளிச்சத்தில் கதை எழுத ஆரம்பித்தார். எழுதியதைப் பலமுறை படித்துப் பார்த்ததில் ஓரளவு நம்பிக்கை உண்டானபோது ஆலைச் சங்கு முழங்கியது.

இரவெல்லாம் கண்விழித்து எழுதிய கதையைப் பேராசிரியர் கல்கியிடம் கொடுக்க அச்சம் கொண்ட கோவிந்தனின் கதை போர்மேன் டி.எம்.இராஜாபாதர் மூலம் துணையாசிரியர் சோமாஸ்காந்தனுக்குப் போய் அவர் வழியாகவே கல்கியின் பார்வையில் பட்டது.

தேசியவுணர்வும் முற்போக்குச் சிந்தனையையும் கொண்டிருந்த கல்கி தம் பேனாவை மட்டுமே நம்பி கல்கி பத்திரிகையை ஆரம்பித் திருந்த காலகட்டத்தில் கோவிந்தனின் கதையில் காணப்பட்ட மாற்றத்தை எளிய தமிழ்நடையை கவனித்து இதயபூர்வமாக வரவேற்று ''சபாஷ் ரொம்ப நன்னாயிருக்கு தொடர்ந்து எழுது!'' என்று பாராட்டினார்.

கோவிந்தன் ஆரம்பத்தில் கல்கி பாப்பா மலர் பகுதிக்கு வி.ஜி. என்னும் பெயரில் கதைகள் எழுதினார் அரைப் பக்கம் ஒரு பக்கம் அளவில்.

வி.ஜி என்னும் பெயரை கண்ட கல்கி ''என்னப்பா! இங்கிலீஷ்காரன் மாதிரி வி.ஜி.ன்னு பெயர் வைச்சிருக்கே. 'விந்தன்'ன்னு சுருக்கமா வைச்சுக்கோ கவர்ச்சியாய் இருக்கும்'' என்றார்

விந்தன் என்னும் பெயரை மாற்றியதோடு அவரின் வாழ்க்கையையும் மாற்றியமைத்த பெருமை கல்கிக்கு உண்டு.

பேராசிரியர் கல்கியால் பாராட்டப்பெற்ற விந்தன் எழுதுவதற் கென்று நேரத்தையும் காலத்தையும் எதிர்பார்த்து கொண்டிருக்காமல் நேரம் கிடைத்தபோதெல்லாம் எழுத ஆரம்பித்தார். சில கதைகளை 'கேஸ்'களுக்கிடையே அமர்ந்து எழுதியதும் உண்டு.

ஒருநாள் அச்சகத்தில் ஓய்வான நேரத்தில் 'ஸ்டோன்' பக்கத்தில் சக தொழிலாளிகளின் பேச்சுக்களுக்கிடையே இரண்டு கால்களையும் சுகமாக நீட்டிக் கொண்டு விந்தன் எழுதிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராமல் ஏற்பட்ட ஒரு சம்பவத்தால் அச்சகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

கல்கி இதழ் காங்கிரஸ் சார்புடைய இதழ் ஆனதால் அக் கட்சி சார்புடைய அரசியல்வாதிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் அடிக்கடி கல்கி அலுவலகத்துக்கு வருகை தந்து அச்சகத்தைப் பார்வையிடுவதுண்டு. சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் இந்தியாவின் முதல் பிரதமரான பண்டிட் ஜவகர்லால் நேரு அவர்கள் சென்னைக்கு வந்த பொழுதெல்லாம் ஒரு நிமிடமாவது கல்கி அலுவலகத்திற்கு வந்துவிட்டுதான் போவார். இதைப்போலவே காந்தியார் குடும்பத்துக்கும் கல்கி இதழோடு நெருக்கம் உண்டு.

ஒரு காலத்தில் கல்கி இதழ் 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்னும் ஆங்கில ஏட்டுடன் இணைந்து உலகச் சிறுகதை போட்டி நடத்தியதுண்டு. இவ்வேட்டின் ஆசிரியரும் காந்தியாரின் மூத்த புதல்வருமான தேவதாஸ் காந்தி கல்கி அச்சகத்துக்கு வருகை தந்தபோது திரு. சதாசிவம் வந்தவருக்கு அச்சகத்தை காட்டிய நேரத்தில் விருந்தாளி யார் எவர் என்று தெரியாவிட்டாலும் உடன் வந்தவர் தம் முதலாளி என்பதை அறிந்த மாத்திரத்தில் தொழிலாளிகள் எழுந்து நின்று மரியாதை காட்டியபோது சிந்தனை உலகத்தில் இருந்த விந்தன் யார் எவர் என்பதையெல்லாம் மறந்து அவர் போக்கில் எழுதிக் கொண்டிருந்ததைக் கண்ட சதாசிவம், மிகவும் கோபம் அடைந்து அடுத்த கணம் விந்தனை வெளியில் அனுப்பிவிட்டார்.

அன்று லீவில் இருந்த இராஜாபாதர், அடுத்த நாள் அச்சகத்துக்கு வந்தபோது, விந்தன் கண்கலங்கியவாறு கேட்டுக்கு வெளியே நின்றிருந்ததைக் கண்டு செய்தி கேள்விபட்டு வருத்தமடைந்தார். ''ஏன்டா! கதையெல்லாம் எழுதறியே உனக்கு தேவதாஸ் காந்தி தெரியாதா? இப்போ என்னடா பண்ணப்போறே? அய்யா ரொம்பக் கோவக்காரர்ன்னு உனக்குத் தெரியாதா?''

நண்பரிடம் உரிமையோடு கோவித்துக் கொண்ட இராஜாபாதர் நண்பனை எப்படியாவது உள்ளே இழுத்துக் கொள்ள வேண்டும் என்பதை மனத்தில் வைத்துக் கொண்டு, பேராசிரியர் கல்கியிடம் சமயம்

கிடைதத போதெல்லாம் விந்தனின் குடும்ப நிலையை எடுத்துச் சொல்வார். கல்கி மௌனமாக இருப்பதை அறிந்து, அம்மாவிடம் (எம்.எஸ்)கண்கலங்க நின்று, 'உன்னையும் சேர்த்து அனுப்பி விடுவேன்' என்று கோபப்பட்ட சதாசிவத்தின் மனத்தை நெகிழ வைத்து விந்தனை - விபத்திலிருந்து மீட்டு ஒரு புதிய உலகத்தைக் காட்டிய பெருமை இராஜாபாதருக்கே உரியது.

எதிர்பாராமல் நடந்து விட்ட இந்தச் சம்பவத்தால் ஒரு வார கால சம்பளத்தை இழந்த விந்தன் இதன் தன்மைகளை ஆழமாக நோக்கி ஓர் எச்சிரிக்கையாக எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் அவரின் படைப்புகளின் அதன் பாதிப்புகள் பலமாக ஒலித்தன. 'ஏமாந்துதான் கொடுப்பீர்கள்?' என்னும் சிறுகதை தொகுப்பின் முன்னுரையில் 'வாழ்ந்தால் லோ சர்க்கிளோடு வாழ்வேன்; செத்தாலும் லோ சர்க்கிளோடு சாவேன்!' என்று தெளிந்த தீர்மானத்தோடு கூறினார்.

## துணையாசிரியர் ஆனார் தொழிலாளி விந்தன்!

விந்தன் எழுத்தில் நம்பிக்கை கொண்ட பேராசிரியர் கல்கி, விந்தன் ஒரு தொழிலாளி என்றாலும் அவர் துணையாசிரியராக இருப்பதற்கு தகுதி வாய்ந்தவர் என்பதை உணர்ந்து அவரை கல்கி ஆசிரியர் குழுவில் இணைத்துக் கொண்டார்.

இந்த இணைப்பு ஆசிரியர் குழுவில் ஒரு போராட்டத்தை உருவாக்கிச் சிலரை போர்க்கொடி உயர்த்தவும் செய்தது. அப்பொழுது கல்கி இதழின் ஆசிரியர் குழுவில் திரு. எம்.எல். சபரிராஜன், சோமாஸ்காந்தன், ராமசாமி (துமிலன்), இராமகிருஷ்ணன், (வசந்தன்), வேங்கடராமன் (நாடோடி) ஆகியோர் பணியாற்றினர்.

இவர்களில் காலஞ்சென்ற வசந்தன் எழுத்தும் பத்திரிகையும் படித்தவர்க்கத்தின் ஏகபோகச் சொத்து என்று தவறாக நம்பிய முன்கோபி, பலமுறை கல்கியிடம் சண்டைபோட்டுக் கொண்டு பிரிந்து சென்று 'பாரிஜாதம்' என்ற மாத இதழைச் சில மாதங்கள் நடத்திச் சிரமங்களுக்கு ஆளாகி அகால மரணம் அடைந்த அனுதாபத்துக்குரிய எழுத்தாளன்.

இந்த வசந்தன்தான் விந்தன் 'கல்கி' ஏட்டின் ஆசிரியர் குழுவில் சேர்ந்தபோது துள்ளியெழுந்து ஆசிரியர் குழுவிற்குத் தீட்டு பட்டுவிட்டது போல் ஆர்ப்பரித்து ''எனக்குச் சமமாக ஒரு தொழிலாளி துணையாசிரியராக இருப்பதா? ஒன்று நான் இருக்க வேண்டும்... அல்லது அந்தத் தொழிலாளி இருக்க வேண்டும்!' என்று பேராசிரியர் கல்கியிடம் போராட்டம் நடத்தினார். நாடோடியின் துணையுடன்.

வாழ்க்கையில் பல போராட்டங்களைக் கண்டு முன்னேறியவரான கல்கி அப்போது இலக்கிய உலகில் தம் போராட்டத்தைத் துவங்கியிருந்ததால் வசந்தனின் போராட்டத்தைக் கண்டு அச்சம் கொள்ளாமல் அதன் பின்னணியைப் புரிந்து கொண்டு விந்தனுக்குத் தனியறையை ஒதுக்கினார்.

விந்தன் தனிமைப்பட்ட போதும் வசந்தனின் நண்பர்கள் சும்மாயிராமல் தம் சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்தனர். ''சார்! அவர் பீடி குடிக்கிறார்; முரட்டுத்தனமாகப் பேசுகிறார்!'' என்றெல்லாம் 'கோள்' சொன்னார்கள். இத்தனைக்கும் விந்தன் தம் பக்கத்தில் இருந்த கழிவறையைப் பயன்படுத்தாமல் தொழிலாளிகளுக்கென்று பொதுவாக இருந்த கழிவறையைத்தான் பயன்படுத்தினார். இவையெல்லாம் கவனித்து வந்த கல்கி கொஞ்சமும் ஆத்திரப்படாமல் அமைதியாக, ''அவர் ரொம்பவும் நல்லா கதை எழுதுறாரே!'' என்று சொல்லி பொறாமையால் பொங்கிக் கொண்டிருந்த தீயைப் 'பொக்'கென்று அணைத்தார்.

சாதியின் பேராலும் பணத்தின் பேராலும் சமத்துவம் இழந்து சீர்கெட்டுப் போயிருந்த சமூகத்தைக் கண்டு கொதித்துக் கொண்டிருந்த விந்தன் அந்தத் தீமைகள் தமக்கு எதிராகவே பேயாட்டம் ஆடுவதைக் கண்டு ஆசிரியர் கல்கி போல் கொஞ்சமும் ஆத்திரப்படாமல் அமைதியாக அவர்களிடமிருந்து தனித்து நின்று, எழுதுவதும் சிந்திப்பதுமே தம் இலட்சியமென எண்ணிச் சிறந்த இலக்கியங்களைப் படைத்து இலக்கிய உலகில் முன்னணியில் நின்ற போது காழ்ப்புகளும் வர்க்க பேதங்களும் அழிந்து அடையாளம் தெரியாமல் போய்விட்டன.

விந்தனுக்கு ஆசிரியர் குழுவில் இருந்த தொடர்பைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்த பேராசிரியர் கல்கி, விந்தன் பேரில் தனிக் கவனம் செலுத்தலானார். சில மாதங்களாக விந்தன் கதைகள் கல்கியில் வெளிவராததைக் கண்ட கல்கி, ''என்னப்பா! நீ எதுவும் எழுதறதில்லே?'' என்று கேட்டபோது விந்தன் மௌனமாக நின்றார். ''இனிமேல் கதைகளை என்னிடமே கொடு'' என்று கல்கி சொன்ன போதிலும் விந்தன் கல்கி ஆசிரியர் குழுவில் இருந்தபோது சில கதைகளை தவிர பல கதைகள் அச்சகத்துக்கு நேராக போனதுண்டு அந்த அளவுக்கு விந்தனின் சுயமரியாதைக்குச் சுய சிந்தனைக்கு மதிப்பு அளித்தவர் மாமனிதர் கல்கி

## இரண்டாவது திருமணம்

இரண்டு குழந்தைகளை விட்டு விட்டு முதல் மனைவி இறந்தபோது, அடுத்து இரண்டாவது கல்யாணத்தை பற்றி பேச்சு

எழுந்தது. அப்போது ஆசிரியர் கல்கி சொன்னார் ''இரண்டு குழந்தைகளை நல்ல விடுதியாகப் பார்த்து சேர்த்துவிடு; அவர்கள் பாதுகாப்பு தானே முக்கியம்!'' என்று ஆசிரியர் சொன்னதை கேட்காமல் அவரின் பாட்டனார் போல தந்தையைப் போல் இரண்டாம் கல்யாணத்தை முடித்தார். 13.07.1944 அன்று சரஸ்வதி என்னும் பெண்மணியை மணந்தார்.

சரஸ்வதி அம்மையாருக்கு ஆறு குழந்தைகள் பிறந்து அவற்றைக் காப்பாற்ற கஷ்டப்பட்டபோதுதான் 'அன்றே கல்கி சொன்னார், அன்றே கல்கி சொன்னார்' என்று ஆசிரியர் சொன்னதை நினைத்துக் கொண்டார் விந்தன்.

## முதல் எழுத்தாளர் விந்தன்

1946-இல் விந்தனின் 'முல்லைக் கொடியாள்' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் வெளி வந்தது. அதே ஆண்டிலேயே தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. கழகம் அளிக்க முன்வந்த முதல் பரிசைப் பெற்ற முதல் எழுத்தாளர் விந்தன் அவர்களேயாவர்.

1947இல் முற்போக்குச் சிந்தனையாளர் முருகு சுப்பிரமணியம் புதுக்கோட்டையிலிருந்து 'பொன்னி' என்னும் இலக்கிய இதழை வெளியிட்டார். 01.03 1947 அன்று. 01.05.1948இல் பொன்னி இதழில் நக்கீரன் என்னும் பெயரில் 'கண் திறக்குமா?' என்ற தொடர்கதையை எழுதினார் விந்தன்.

இடதுசாரி இலக்கியவாதிகள் பலரும் கண் திறக்குமா என்ற நாவலைப் படித்து விந்தனைப் பாராட்டினர். அப்படிப் பாராட்டிய வாசகர்களில் ஒருவர் 'விந்தன் ஏன் கல்கியில் தொடர்கதை எழுதக்கூடாது!' என்று கேட்டு கல்கிக்குக் கடிதம் எழுதினார். அதன் தொடர்பாக விந்தனை விசாரித்த கல்கி விந்தனை கல்கியில் தொடர்கதை எழுதும்படி கேட்டுக் கொண்டார். அதன் பிறகுதான் விந்தன் கல்கியில் 'பாலும் பாவையும்' என்ற தொடர் கதையை எழுதினார்.

## கல்கி ஆசிரியர் குழுவில் இருந்து விலகல்

பிறர் எழுத்தை நான் படிப்பதில்லை என்று பேசிய பல எழுத்தாளர்களைப் பலமுறை படிக்க வைத்த நாவல் விந்தனின் 'பாலும் பாவையும்'. சொல் புதிது, சுவை புதிது என்று படித்தவர்கள் பாராட்டிய இந் நாவலை எழுது என்று சொன்ன ஆசிரியர் கல்கி, 'எப்போது நிறுத்தப் போகிறாய்!' என்று கேட்கும் அளவுக்கு வாழ்த்தியும் வசைபாடியும் வந்து குவிந்தன கடிதங்கள்

'பாலும் பாவையும்' நாவலின் மூலம் விந்தனுக்கு கிடைத்த பாராட்டுக்களைவிட பாதிப்புகளே அதிகம்.

இந்த நாவலைப் படித்த சினிமாக்காரர்கள் விந்தனை எப்படியாவது சினிமாவுக்கு இழுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பினர். விந்தனுக்கும் சினிமா மயக்கம் இருந்ததால் அந்த ஆசையில் அவர் கல்கியில் இருந்து விலகினார்.

## சினிமாவுக்குப் போனார் விந்தன்

ஏ.வி.எம்.மின் கதை இலாகாவில் சேர்ந்த விந்தனுக்கு அந்த நிறுவனம் எழுத்தாளனுக்குக் கொடுத்த ஊதியத்தை மதிப்பைக் கண்டு அதிர்ச்சியடைந்து அங்கிருந்து விலகினார். 1953-ஆம் ஆண்டு டி.ஆர். ராமண்ணாவின் அழைப்பின்பேரில் ஆர்.ஆர்.பிக்சர்ஸ் தயாரித்த, 'வாழப்பிறந்தவள்' என்ற படத்துக்கு வசனம் எழுதினார். அதே ஆண்டில் எம்.நடேசன் தயாரித்த 'அன்பு' என்ற படத்துக்கு கதை - வசனம் எழுதியதோடு கருத்துள்ள ஒரு பாடலையும் எழுதினார். அன்பு ஒரு வெற்றிப் படமாக விந்தனுக்கு அமைந்தது.

1954-ஆம் ஆண்டு ஆர்.ஆர். பிகசர்ஸ் 'கூண்டுக்கிளி' என்ற படத்துக்கு வசனம் எழுதியதோடு மூன்று பாடல்களையும் எழுதினார். 'கொஞ்சுங் கிளியான பெண்ணை' என்ற பாடல் மிகவும் புகழ் பெற்றது. எம்.ஜி. ராமச்சந்திரனும் சிவாஜி கணேசனும் இணைந்து நடித்த இப் படம் ஒரு திருப்புமுனை என்று சினிமா உலகில் பேசப்பட்டது.

மூன்று படங்களுக்கு வசனம் எழுதிய விந்தனுக்கு கையில் கொஞ்சம் காசு புரண்டது, அவ்வளவு தான். சொந்தமாக 'மனிதன்' என்ற இதழை வெளியிட்டார். 1954 ஆகஸ்ட் மாதத்தில்.

## மனிதன் பிறந்தான்

விந்தனின் 'மனிதன்' புதுமையும் புரட்சியும் இணைந்த பொன்னேடாக மலர்ந்தது. பக்கத்துக்குப் பக்கம் கருத்துக் குவியல் வாசகர்களின் ஆதரவு அமோகமாக இருந்தது. ஒன்பது இதழ்களே வெளி வந்த மனிதன் நின்று போனது விந்தனுக்கு பேரிழப்பாகும்.

மனிதனில் வெளிவந்த ஒவ்வொரு கட்டுரையும் மேல்தட்டு வர்க்கத்தின் கீழான குணங்களை வெளிப்படுத்தியது.

மனிதனில் வெளிவந்த தெருவிளக்கு தொடர்கதை சினிமா உலகில் பரபரப்பாகப் பேசப்பட்டது. சினிமா உலகம் விந்தனை எதிரியாகப் பார்த்தது. எனினும் விந்தன் சினிமா உலகை கைவிடவில்லை.

சில நண்பர்களின் துணையுடன் விந்தன் சொந்தமாக சினிமா கம்பெனி ஆரம்பித்து சிவாஜி கணேசன் பத்மினி ஆகியோரை நடிக்க வைத்தார். பின்னர் படம் நின்று விட்டது. சிறிது இடைவெளிக்குப் பின்னர் 'மணமாலை', 'சொல்லு தம்பி சொல்லு', 'பார்த்திபன் கனவு',

'குழந்தை கண்ட குடியரசு' ஆகிய படங்களுக்கு வசனமும் சில பாடல்களும் எழுதினார்.

பத்து ஆண்டு சினிமா வாழ்க்கையில் விந்தன் கண்ட பலன்? குடியிருக்க ஒரு மனை வாங்கியதுதான்.

**புத்தகப் பூங்கா**

'மனிதன்' மறைந்தவுடன் விந்தன் சோர்ந்து போனார். அப்போது அவருடைய நண்பர்கள் விந்தன் எழுதிய சிறு கதைகள் தொடர்கதைகள் ஆகியவைகளை நூல்களாக வெளியிட்டார்கள். கையில் கொஞ்சம் பணம் புரண்டது. 'புத்தகப் பூங்கா' என்ற பதிப்பகத்தை ஆரம்பித்தார். சாண்டில்யன், இளங்கோவன், சு.நா.சுப்பிரமணியம், ஜெயகாந்தன் ஆகியோரின் எழுத்துகளை வெளியிட்டார். புத்தகப் பூங்காவின் முதல் வெளியிடு 'சாவே வா!' இளங்கோவன் எழுதியது. இந்தப் புத்தகம் வெளி வந்தவுடன் எல்லோரும் விந்தனை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள். முற்போக்குச் சிந்தனையாளரான விந்தன் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை.

ஜெயகாந்தனின் கதைகளைத் தொகுத்து 'ஒரு பிடி சோறு' என்ற பெயரில் வெளியிட்டார். அந்தப் புத்தகம்தான் ஆனந்த விகடனுக்கு ஜெயகாந்தனை அடையாளம் காட்டியது. அந்த வகையில் 'புத்தகப் பூங்கா'வின் சாதனை இன்றும் நினைக்கப்படுகிறது.

**தினமணி கதிர் ஆசிரியர் குழுவில் சேர்ந்தார்**

வாழ்க்கையில் தமக்கென்று சொந்தமாக ஒரு தொழிலை அமைத்துக் கொள்ள முயன்று தோல்வி கண்டவர், எட்டு குழந்தைகள் உடைய தன் குடும்பத்தைக் காப்பாற்றப் பல போராட்டங்களை நடத்தி தினம் தினம் செத்துச் செத்துப் பிழைத்தவர், கடைசியில் 'தினமணி கதிர் ஆசிரியர் குழு'வில் சேர்ந்தார்.

கதிரில் பல தொடர்களை எழுதினார் விந்தன். அவற்றில் ஓ மனிதா!, பாட்டில் பாரதம், எம்.கே.டி. பாகவதர் கதை, எம்.ஆர்.ராதா சிறைச்சாலை சிந்தனைகள் ஆகும்.

விந்தனின் நண்பர்கள் அவருக்கு மணிவிழாக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தபோது திடீரென்று மாரடைப்பில் 30.06.1975 அன்று மரணமடைந்தார். மணிவிழாக் காணவிருந்த நேரத்தில் மனிதர் மண்டையைப் போட்டு விட்டார் என்று நண்பர்கள் ஆதங்கப்பட்டார்கள்.

# 2
# சிறு கதைகள்

தமிழில் விந்தன் எழுதிய காலம் படித்த மேல்தட்டு வர்க்கத்தினருக்கே எழுத்தும் பத்திரிகையும் ஏகபோக உரிமை என்று எண்ணிய காலம்

இந்தியாவில் இடதுசாரிகள் ஆட்சி புரிந்த மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும் பாட்டாளி வர்க்கத்தில் இருந்து படைப்பாளிகள் தோன்றியதாக வரலாறு இல்லை! ஆனால் தமிழகத்தில் அந்த அதிசயம் நிகழ்ந்தது நிகழ்த்தியவர் விந்தன், அவர் ஒரு அச்சுத் தொழிலாளி!

விந்தன் கதைகளைப் பற்றி பேராசிரியர் கல்கி கூறுகிறார்

'' ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் சிறிய கதைகளும் பெரிய கதைகளும் பெரும்பாலும் ஒரு சாதியாரைப் பற்றியே வந்து கொண்டிருந்தன எழுதுகிறவர்களும் படிக்கிறவர்களும் பெரும்பாலும் பிராமணர்களாவே யிருந்தபடியால் அந்தச் சாதியினரைப் பற்றியே கதைகள் எழுதப்பட்டன அந்தக் கதைகளில் கையாளப்பட்ட தமிழ் நடை, பிராமணக் குடும்பங்களில் வழங்கும் தமிழாகவே இருந்தது பிராமண எழுத்தாளர் கஷ்டப்பட்டு வேறு சாதியினரைப் பற்றிக் கதை எழுதும்போது அவர்கள் வர்ணிக்கும் நடை, உடை பாவனைகள் அவ்வளவு சரியாக இருப்பதில்லை இந்தச் சமயத்தில் நவயுக புதுமலர்ச்சி எழுத்தாளர்கள் தோன்றினார்கள். ருஷ்யக் கதைகளையும் மற்ற மேனாட்டுக் கதைகளையும் படித்தார்கள். அந்தக் கதைகளைப் போல் இந்த நாட்டு ஏழை எளியவர்களையும் உழைப்பாளி மக்களையும் பற்றிய கதைகள் எழுதத் தொடங்கினார்கள். விந்தன், உழைப்பாளி மக்களிடையே பிறந்து வளர்ந்து உழைத்துப் பண்பட்டவர் ஏழை எளியவர்கள் தொழிலாளிகள் பாட்டாளிகளின் சுக துக்கங்களை இதயம் ஒன்றி அனுபவித்து உணரும் ஆற்றல் பெற்றவர் அந்த உணர்ச்சிகளை இலக்கியப் பண்பு வாய்ந்த சிறுகதைகள் பலவற்றை அவர் திறம்பட எழுதியிருக்கிறார் அவருடைய கதாபாத்திரங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் நாம்தான் காரணமோ என்று எண்ணி எண்ணி தூக்கம் இல்லாமல் தவிக்க நேரும் '' ('முல்லைக் கொடியாள்' முன்னுரையில் கல்கி)

**உள்ளத்தை உலுக்கும்**

''முகத்தைச் சுளிக்காது எதிர் கொண்டழைக்கத் தகுந்தவைகளில் விந்தன் தரும் புத்தகம் சேர்க்கப்பட வேண்டியதே ஆழ்ந்த மனச்சூழல்களில் நம்மைச் செருகும் தன்மை பெற்றவை இங்குள்ள கதைகளில் சில ஒரு முறைக்கு இருமுறையாக அவற்றின் கருத்து நம்மை துழாவவைப்பதற்குக் காரணம் அதுவே அபிப்பிராயத்தின் தொனி விஷேசம் சில சமயம் நம் உள்ளங்களைத் தொட்டு விடுகிறது சில வேளைகளில் உலுக்கியும் விடுகிறது இதற்குச் சான்று தேற்றுவார் யார்? என்ற சிறுகதை'' (சமுதாய விரோதி, முன்னுரையில் கி சந்திரசேகரன்)

'செட்டியார் கடைக்கு வந்து இறங்கும் அரிசி சர்க்கரை மூட்டை முதலியவைகளை எல்லாம் சின்னசாமி கடை வாசலிலிருந்து தன் முதுகில் சுமந்து கொண்டு போய்க் கடைக்குள் அடுக்குவான் மூட்டைக்குக் காலணா வீதம், எந்தக் காலமாயிருந்தாலும் சரிதான், சமாதான காலமாயிருந்தாலும் சரிதான், எண்ணி கொடுத்து விடுவார் செட்டியார் ஆனால் என்றைக்காவது ஒருநாள் சின்னசாமி அறுபத்திநாலு மூட்டைக்கு மேல் தூக்கி அடுக்கிவிட்டு ஒரு ரூபாய்க்கு மேல் கூலி வாங்க வந்துவிட்டால் செட்டியாரின் கண்களிலிருந்து ஏனோ இரண்டு சொட்டுக் கண்ணீர் கீழே விழும்

செட்டியாருக்குக் கண்ணீர் வருகிறது நமக்கோ, கோபம் கோபமாக வருகிறது ஆத்திரம் பொங்கி வருகிறது! (கல்கியின் முன்னுரை)

'ஏழையின் குற்றம்' என்ற கதையில் செட்டியாரின் குணங்களை முதலாளித்துவ கொடுமைகளை மேற்கண்டவாறு சித்திரிக்கும் விந்தன், கதையின் உச்சகட்டமாக இவ்வாறு சித்திரித்து காட்டுகிறார்

வழக்கம்போல் அன்று இரவு பத்து மணிக்குப் பிறகு நான் போயிட்டு வரேனுங்க!' என்றான் சின்னசாமி

'என்னடா இவ்வளவு சீக்கிரம்!' என்று கேட்டார் செட்டியார்

'இனிமேதான் என் கூலியை எடுத்துக்கிட்டுப் போய் ஏதாச்சும் வாங்கிக் கஞ்சி காய்ச்சிக் குடிக்கணும் அவ வேறே காத்துக்கிட்டுக் கிடப்பா குழந்தைகள் வேறே அழுதுக்கிட்டு இருக்கும் '

'அதற்கு நீ வேலை பார்க்கக் கூடாது வீட்டிலேயே அடைந்து கிடக்கணும்'

'கோவிச்சுக்காதீங்க சாமி இன்னும் ஏதாச்சும் வேலையிருந்தா சொல்லுங்க செஞ்சிட்டு போறேன்'

'சரிதான் இந்த அரிசி மூட்டையை எடுத்துகிட்டுப்போய் நம் வீட்டுலே போட்டுவிட்டுப் போடா!' என்று சொல்லி அன்றைய கூலி ஆறணாவை எடுத்து அவனிடம் கொடுத்தார் செட்டியார்

இப்படிக் கூலி கொடுக்கும் போதெல்லாம் செட்டியார் தினசரி நம் வீட்டு வேலை ஏதாவது ஒன்றைச் சின்னசாமிக்கு இடுவது வழக்கம் இந்த வேலைக்குக் கூலி கிடையாது கூலி கொடுக்கும் வேலைக்கு இவையெல்லாம் கொசுறு வேலைகள்

சின்னசாமிக்குச் செட்டியார் இப்படி எத்தனையே கொடுமைகளை கொடுத்தபோதிலும் அவன் அவர் முன் வாய் திறந்து ஒரு வார்த்தை பேசியதில்லை இதைக் கண்ட டாக்டர் மு வரதராசன் கூறுகிறார் (ஒரே உரிமை முன்னுரை)

''விந்தன் எய்யும் சொல்லம்புகள் குறி தவறாமல் பாய்கின்றன சமூகத்தை அவர் சிற்சில இடங்களில்தான் நேராகத் தாக்குகிறார். பல இடங்களில் அவர் அம்பு தொடுப்பதே இல்லை இன்றிருக்கும் நிலைமையை எடுத்துக் காட்டி பேசாமல் கதை சொல்லுகிறார். அவர் படைக்கும் பாத்திரங்கள் பெரும்பாலும் அப்பாவிகளே அவர்களுக்குச் சமூகத்தின்மேல் வயிற்றெரிச்சல் தோன்றுவதேயில்லை ஆனால் நமக்கு மட்டும் வயிற்றெரிச்சல் தோன்றுகிறது; ஆத்திரம் பொங்குகிறது!''

''விந்தன் நோக்கம் என்ன என்பதை அவருடைய வாழ்க்கைக் கண்ணோட்டத்திலிருந்தும் இலக்கிய நோக்கிலிருந்தும் நாம் கண்டு கொள்ள முடிகிறது வாழ்வின் கசப்பான அனுபவங்களை முழுவதுமாகப் பெற்றவர் என்ற காரணத்தினால் அவர் வாழ்வு நோக்கு என்பது மிகத் தெளிவாக உருவாகியுள்ளது அவர் சாதாரண மனிதனுக்காக இலக்கியம் படைக்க புகுந்தவர். இவர் அடிப்படையில் உலக இயக்கங்களை மிகப் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காணும் மனப்போக்கு அவரிடம் உள்ளது உழைப்பவனுக்கும் வீணில் உண்டு களித்திருப்பவனுக்குமான போராட்ட உலகைக் காண்கிறார் விந்தன் அவர் கூறுகிறார்:

ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் நம் உழைப்புக்கேற்ற மதிப்பு - அந்த மதிப்பைப் பெறுவதற்குத்தான் இன்று கடவுளுடன் போராடுகிறோம்; மதத்துடன் நாம் போராடுகிறோம், நாம் கலையுடன் போராடுகிறோம்

இந்தக் கடுமையானப் போராட்டத்தில் நாம் வீழ்ந்தாலும் சரி, நம்முடைய சந்ததியாவது வாழவேண்டும். ''(எஸ் தோதாத்ரி எம்.ஏ 'தாமரை' 1978)

சோற்றுக்காக நாயுடன் போராடும் சோலையப்பனுக்கு ஒரு ரொட்டிக் கடை வைத்துக் கொடுத்து அவன் பிழைப்புக்கு வழி காட்டுகிறார் ஒரு பொதுநலவாதி

கிராமத்தில் தீண்டாமை எவ்வளவு தீவிரமாகச் செயல்படுகிறது என்பதை உணர்ந்து பட்டணத்திலிருந்து பொதுநலவாதியை அழைத்து

அவர் வைத்துக் கொடுத்த கடையை அவரே எடுத்து கொள்ளுமாறு சொல்லுகிறான் பொதுநலவாதி கடையைப் பார்த்து திடுக்கிடுகிறார். 'ஏன் வியாபாரம் நடக்கலியா?'

''பறையன் கடையிலே யாருங்க ரொட்டி வாங்கிச் சாப்பிடுவாங்க அதோ முதலியார் கடையிலே நல்லா வியாபாரம் நடக்குது எங்க ஆளுங்க கஞ்சிக்கே கஷ்டப்படறவங்க, ரொட்டி வாங்க எப்படி வருவாங்க என்ன இருந்தாலும் நான் பறையன் பறையன் தானுங்களே''

''என்னடா திரும்ப திரும்ப பறையன் பறையன்னு சொல்றே?''

''நானாங்க சொல்றேன் ஊரு சொல்லுது, உலகம் சொல்லுது''

''ரொட்டி கடை, மிட்டாய் கடை வைத்து பிழைக்கக் கூடவா உனக்கு உரிமை இல்லை?''

''எனக்கு இருப்பது ஒரே உரிமைதானுங்க. அதுதான் தற்கொலை செய்து கொள்வது!''

அதுக்குக்கூட அவனுக்கு உரிமையில்லை என்பது அவனுக்குத் தெரியாது போலும்!

கிராமத்தில் தீண்டாமை என்னும் கொடிய நோய் ஏழை எளிய உழைக்கும் மக்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது என்பதையும் அரிசனங்களுக்கு ஆலயப் பிரவேசம் நடக்கிறது. அதில் கூட அவன் கலந்து கொள்ளாமல் ஒருநாள் வேலை கிடைத்ததே தெய்வ தரிசனம் என்று எண்ணும் மக்களின் மனோபாவங்களையும் உள்ளம் உலுக்கும் வகையில் சித்திரிக்கிறார் 'ஒரே உரிமை' என்னும் கதையில் விந்தன்.

## பெண்கள் நிலை

பொதுவாக விந்தன் காதல் கதைகள் எழுதியதில்லை. அப்படி சில கதைகள் எழுதியிருந்தாலும் அக் கதைகளில் பாலுணர்வைத் தூண்டும் வகையில் பச்சையாக எழுதியதில்லை.

விந்தனின் காதல் கதைகளில் பண்பும், பாசமும் பரிவும் பிணைந்திருக்கும். வளரும் சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வு சாதி பேதங்கள், வர்க்க உணர்வுகள் இன்னும் பிற தடைகற்களாக இருக்கின்றன பொதுவாகச் சொன்னால் காதலுக்குக் குறுக்கே நிற்பது பொருளாதார ஏற்றத் தாழ்வே என்பது விந்தனின் தெளிவான திடமான கொள்கை.

'அதிகாரபூர்வமான சட்டதிட்டங்களால் மனித வர்க்கத்தை அடக்கி ஆண்டுவிட முடியும் என்று நம்புவது அறியாமை மனிதன் நினைத்தால் அந்தச் சட்ட திட்டங்களை மீறிவிட முடியும் ஆனால் அன்பின்

ஆக்கினைகளை மீறுவதற்கு மனிதன் சக்தியற்றவன் ஆகையால்தான் நமது நாட்டில் அவ்வப்போது தோன்றி மறைந்த மகான்கள் அன்பே ஆண்டவன் என்று கூறியிருக்கிறார்கள் வாழ்க்கையில் அன்புக்கு இடமில்லை என்றால் இன்பத்துக்கு இடம் ஏது?'' (விந்தன் - மாட்டுத் தொழுவம்)

அன்புள்ளத்தோடு மகளைப்போல மருமகளைப் பார்க்க வேண்டியவள் அதிகாரத்தோடு அவளை அடக்கி ஆள நினைக்கும் மாமியார். அம்மாவின் பேச்சை தட்டாமல் 'ஆமாம் சாமி' போடும் கணவன், அண்ணியின் மேல் 'கோள்' சொல்வதற்கு சந்தர்ப்பத்தை தேடிக் கொண்டிருக்கும் நாத்தனார் இவர்களுக்கு மத்தியில் வாழும் மருமகள்

பிறந்த வீட்டில் பெற்றோர்களின் அன்பில் திளைத்து, ஆசைக் கனவுகளுடன் வளர்ந்தவள் புகுந்த வீட்டில் அன்பாகப் பேச ஆளின்றி, கடுமையான ஏசல்களுக்கு ஆளான கசப்பான உணர்வுகளை மென்றுமென்று விழுங்கி வாழ்க்கையே கசந்து ஜடமாய் ஒரு ஜந்துவாய் வாழ்ந்து வந்தாள்

''தினசரி என்னுடன் சண்டையிடுவதற்கு அவள்தான் எத்தனை சந்தர்ப்பங்களைச் சிருஷ்டி செய்து கொள்கிறாள் சந்தர்ப்பங்களை நோக்கி நான் காத்திருக்க மாட்டேன் நானே வேண்டும்போது அவற்றைச் சிருஷ்டி செய்து கொள்வேன்!' என்று சொன்ன வீராதிவீரன் நெப்போலியன் கூட இராஜ தந்திரத்தில் இவளிடத்தில் பிச்சை எடுக்க வேண்டும் போலிருக்கிறதே'' மாவீரன் நெப்போலியனுக்கு நிகரான மாமியார்கள் ராஜ்ஜியத்தில் புதுமலர்ச்சியே ஏற்படவில்லையா?

இல்லை என்பதற்கு அடையாளம்தான் மனிதன் மாட்டோடு சேர்க்கப்படுகிறான் அதனால்தான் அவள் கேட்கிறாள், நான் வாழ்வது மனிதத் தொழுவமா? மாட்டுத் தொழுவமா? என்று ''அதனுடைய நிலைதான் என்னுடைய நிலையும் வீட்டுக் காரியங்களையே என்னால் இப்பொழுது செய்யமுடிவதில்லை பின் ஏன் வெட்டிச் சோறு?''

ஆச்சு, மாடும் இப்பொழுது சினையாய்த்தான் இருக்கிறது நாளைக்கு அதைக் கிராமத்துக்கு ஓட்டி வைக்கப் போகிறார்கள் பெற்றுப் பிழைத்தால் திரும்பி வரும் செத்தொழிந்தால் வேறு மாடு வாங்கிக் கொள்வார்கள்

நானும் நாளைக்குப் போகிறேன் பெற்றுப் பிழைத்தால் திரும்பி வருவேன் செத்தொழிந்தால் என்ன பிரமாதம் அவர் வேறு கல்யாணம் செய்து கொள்வார்! இப்பொழுது நீங்கள் சொல்லுங்கள் நான் வாழ்வது மனிதத் தொழுவமா? இல்லை மாட்டுத் தொழுவமா? (மாட்டுத்தொழுவம்)

ஏழை எளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவரான விந்தன் ஐந்து ரூபாய் தண்டல் வாங்கி மாம்பழம் வியாபாரம் செய்யும் அம்மாயியின் கனவுகளைக் கற்பனைகளை யதார்த்தமாக சித்திரிக்கிறார்

''அந்தப் பழத்தை வாங்கி ஒரு பழம் ஓரணா என்று விற்றால்கூட ஒன்றேகால் ரூபாய் லாபம் கிடைக்கும் அங்கே நிற்காதே, இங்கே உட்காராதே என்று அடிக்கடி வந்து மிரட்டும் போலீஸ்காரன்களுக்கு நாலணா தண்டக் காசு அழுதாலும்கூட ஒரு ரூபாய் கட்டாயம் மிஞ்சும் ஊராரில் சிலர் தம் குழந்தைகளுக்கு பலூன் வாங்கி கொடுத்தாலும் கொடுத்து விடுகிறார்கள். அதைப் பார்த்து நம்ம குழந்தைகளும் தமக்கும் பலூன் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று மூன்று நாளாக ஒற்றை காலில் நிற்கின்றன நம்ம நிலைமை குழந்தைகளுக்கு எங்கே தெரிகிறது நாமும் எத்தனை நாளைக்குத்தான் அவற்றை ஏமாற்றிக் கொண்டு வருவது? இன்றைக்கு எப்படியாவது இரண்டணாவுக்கு இரண்டு பலூன்கள் வாங்கி குழந்தைக்கு கொடுத்திட வேண்டியதுதான் அப்புறம் மீதி நாலணா மிச்சம் இருக்கும் அந்த தருமராஜா நாயுடுவுக்கு அசலில் இரண்டரையணாவும் வட்டி ஒன்றே காலணாவும் கொடுத்து விடவேண்டும் கடைசியில் பத்தே காலணாதான் கடைசியில் மிச்சம் இருக்கும் அதிலும் வெற்றிலை பாக்கு புகையிலைக்கு ஓரணா போனால் பாக்கி ஒன்பதே காலணாதான் இது போதாதா ராத்திரி சாப்பாட்டுக்கு?'' (தேற்றுவார் யார்?)

படிக்காத பழக்காரியின் வரவு செலவு பட்ஜெட் கனவு பலித்ததா? இல்லையே?

வியாபாரத்தில் அம்மாயி, ''மனைவியை அடகு வைத்து காலகண்டய்யரின் கடனை அடைத்துவிட்ட அரிச்சந்திரனைப் போல் இருக்கிறாள். பின்னர் அரிச்சந்திரனைக் கைவிட்டு விடுகிறாள்!

நகரத்தில் 'காலரா' நோய் பரவி விட்டதால் அதைத் தடுக்க சுகாதார அதிகாரிகள் நகரைச் சுற்றிக் கொண்டே இருக்கிறார்கள் ஒருநாள் அம்மாயியை மிரட்டி அவள் விற்றுக் கொண்டிருந்த பழக்கூடையை லாரியில் தூக்கிப் போட்டுக்கொண்டு போய் விட்டார்கள்

அதோ, அம்மாயி தெருவில் தேம்பி தேம்பி அழுகிறாள் அவளைத் தேற்றுவார் யார்?

இதுதான் அம்மாயி போன்ற ஆயிரம் ஆயிரம் ஏழைகளின் - அபலைகளின் அவலம்

முற்போக்கு எழுத்தாளரான விந்தன் காதல் கதைகள் அதிகம் எழுதாதது போல் 'மறுமணம்' போன்ற விஷயங்களிலும் அவருக்கு உடன்பாடு இல்லை என்றே தெரிகிறது

'பாலும் பாவையும்' என்ற நாவலில் பெண் கெட்டு விட்டாள், பாலும் திரிந்து விட்டது, எனவே 'பாலும் பாவையும்' ஒன்று என்று எண்ணினார்

காலம் காலமாக இருந்து வரும் தமிழ்ப் பண்பாட்டில் - மரபில் அழுத்தமான நம்பிக்கை உள்ளவர் விந்தன் என்பது தெரிகிறது

'தாம்பத்ய வாழ்க்கையில் மனித வாழ்க்கையைவிட மணிப்புறாக்கள் எவ்வளவோ மேலானவையாகத் தோன்றுகின்றன. அவை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏகபத்தினி விரதத்தைக் கைவிடுவது இல்லையாம் ஆண் புறா, பெண் புறாவை விட்டுப் பிரிந்தால் ஊண்உறக்கமின்றி உயிரை விட்டு விடுமாம், பெண் புறா ஆண் புறாவை விட்டுப் பிரிந்தால் உயிர் போகும் வரை உண்ணாவிரதம் இருக்குமாம் நாமும் அவற்றை பின்பற்றுவது சாத்தியமா? அது எப்படி சாத்தியமாகும்' (மறுமணம்)

''இவன் என்னமோ சமூகத்தைச் சீர்திருத்திவிடப் போகிறானாம்; விதவைகளின் துயரத்தைத் தீர்த்துவிடப் போகிறானாம் அதற்காக இரண்டாம் தாரம் கல்யாணம் செய்து கொள்வதென்றால் இவன் எவளாவது ஒரு விதவையைத்தான் கல்யாணம் செய்து கொள்வானாம் இன்னும் என்னவெல்லாமோ சொல்லுகிறான் அவற்றையெல்லாம் வெளியில் சொல்லுவதென்றால் எனக்கு வெட்கமாகயிருக்கிறது''

மனைவியை இழந்த இரண்டு குழந்தைகளின் தந்தையின் மனநிலை இது

'எந்த விதவை இவரைக் கல்யாணம் செய்து கொள்வதற்குக் காத்திருக்கிறாளாம்? இந்த புருஷர்கள்தான் விதவா விவாகம், விதவா விவாகம் என்று எப்போது பார்த்தாலும் அடித்துக் கொள்கிறார்கள் எந்தப் பெண்ணாவது அப்படி சொல்கிறாளா?' பைத்தியம்தான்

கணவனை இழந்த ஒரு பெண்ணின் மனநிலை இது

''வணக்கம்,

மறுமணம் செய்து கொண்டால் விதவைகளின் துயரம் தீர்ந்துவிடும் என்று சிலர் சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா? என்னால் அதை நம்பமுடியவில்லை அதற்காக வழி வழியாக வாழ்ந்து வரும் காதலையும் கொன்று விடவும் நான் விரும்பவில்லை

எனவே என்னைப் பொறுத்தவரையில் நான் பூசிக்கொண்ட மஞ்சளும் வைத்துக் கொண்ட குங்குமத் திலகமும், சூடிக்கொண்ட மலரும், அணிந்த வளையலும் அவருக்காகத்தான்

வேறொருவருக்காக அவற்றை மீண்டும் அணிந்து கொள்வது என்பது இந்த ஜென்மத்தில் முடியாத காரியம் - மன்னிக்கவும்''

''பெண்கள் சபலச் சித்தம் உள்ளவர்கள் என்று சொன்ன மேதாவிகளின் மேதைமையை எண்ணி சிரித்தான் வைர நெஞ்சுடன் அவள் வாழும் முறைமையை எண்ணி எண்ணி வியந்தான் அப்போது காற்றில் வந்த கீதம்.

**கற்புநிலை என்று சொல்லவந்தார் - இரு**
**கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்**

என்று இசைத்தது மறுமணம் அல்ல திருமணம் ஒருமனமே திருமணம் என்று முடிவுக்கு வந்தான்'' (மறுமணம்)

இதற்குமேல் இந்தக் கதையைப் பற்றி என்ன சொல்ல விருக்கிறது? இப்படி வேண்டுமானால் சொல்லலாம்

இது ஒரு மனவியல் ரீதியான கதை. முதல் திருமணத்தில் உண்டான காதல். கற்பனைகள் எதிர்பார்ப்புகள் எல்லாம் மனத்தில் பதிந்துவிட்ட ஓவியங்கள்! அந்த அழியாத ஓவியங்களை அழிக்கலாமா? - மேலும் வாழ்வொழுங்கில் விந்தன் காந்தியவாதி; காந்தியார் பெண் முன்னேற்றத்தை வற்புறுத்தினாலும், மறுமணத்தை ஏற்கவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்

'மனிதன்!' எவ்வளவு கம்பீரமான சொல்!

ரஷ்ய எழுத்தாளர் மாக்சிம் கார்க்கியின் எழுத்தில் மரியாதை உள்ளவர் விந்தன். அதன் பொருட்டே அவர் படைக்கும் படைப்புகளில் மனிதனை மனித நேயத்தை வளர்ப்பதில் ஆர்வம் உள்ளவர். காணுமிடம் எங்கும் அவன் கை வண்ணத்தைக் கண்டு வியந்து போற்றுபவர் நானில மேன்மையெல்லாம் மானிடமேன்மைதானே.

மயிலைக் காளைகள் இரண்டு கோமாரி நோயினால் இறந்து போனதைக் கேட்டு 'ஆ' என்று அலறுகிறார் மாணிக்கம் பிள்ளை அச் சமயத்தில் அவர் மனைவி 'சேரிக்கு ஆள் அனுப்பட்டுமா?' என்று சொல்லிக் கொண்டே வருகிறார்கள். ''சரிதான் போடி ஆள் விடுகிறாளாம் ஆள்!' என்றார் எரிச்சலுடன் 'என்னங்க முப்பது வருஷம் வேலை பார்த்த முனுசாமியே போயிட்டான் மாடு போனா போகுது!'' ''மனுஷன் முதல் இல்லாம வருவான்; மாடு வருமா?'' என்றார் (மாடும் மனிதனும்)

முதல் இல்லாமல் கிடைக்கும் மலிவான பொருளாகப் பணக்காரர்களால் மாற்றப்பட்ட மனிதன், எவ்வளவு மகத்தான சக்தி படைத்தவன் என்பதை முதலாளித்துவம் எவ்வாறு மறைத்து விட்டது என்பதை மனக்கொதிப்புடன் சித்திரிக்கிறார் விந்தன்.

ஒரு மிஷின் வேலை செய்வதற்கு லாயக்கில்லாமல் போனால் அதைப் பழுது பார்க்க ஆயிரம் ஆயிரம் வேண்டுமானாலும் எந்த முதலாளியும் செலவழிக்கத் தயாராயிருக்கிறார்கள் ஆனால் வாழ்நாள்

முழுவதும் தன்னிடம் நாயாயுழைத்த ஒரு ஏழைத் தொழிலாளி வேலை செய்வதற்கு லாயக்கில்லாமற் போனால் அவனுக்காக ஒரே ஒரு ரூபாய் செலவழிக்கக்கூட மனம் வருவதில்லை மனிதன் என்ன யந்திரத்தைவிட அவ்வளவு மட்டமானவனா! இரும்பு யந்திரத்தை வேண்டுமானால் மனிதன் நினைத்தால் சிருஷ்டித்துவிடலாம், மனிதன் யந்திரத்தை மனிதன் நினைத்தால் சிருஷ்டித்துவிட முடியுமா?'' (மனித யந்திரம்)

இதுதான் ஆயிரம் ஆயிரம் ஏழைத் தொழிலாளிகளின் இன்றைய நிலை

''ஒரு வர்க்க சமூகத்தில் இடம் பெற்றுள்ள இரு வேறு பகைமை வர்க்கங்களை விந்தன் பல சிறுகதைகளில் எடுத்துக் காட்டுகிறார் 'எத்தனை பேர்? என்ற சிறுகதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு சின்னசாமி, பெரியசாமி என்ற இருவர் வைரவன் செட்டியாரின் வீட்டுக் காவற்காரர்கள், இவர்களை வைரவன் செட்டியார் நாயை விடக் கேவலமாக நடத்துகிறார் வைரவன் செட்டியார் பெரியசாமியின் பிணம் இருக்கும் பொழுதே வேறு ஒரு வேலைக்காரனுக்கு ஏற்பாடு செய்கிறார் கஸ்தூரி பவனத்தின் உரிமையாளரான வைரவன் செட்டியாரைக் கிண்டல் கலந்த யதார்த்தமான முறையில் அறிமுகப்படுத்துகிறார் (எத்தனை பேர்?)

''கஸ்தூரி பவனம் அவருடைய சொந்தப் பங்களாதான் இகவாழ்க்கையில் உள்ள சுகங்களை அனுபவித்து அனுபவித்து அவர் அலுத்து போனவர். ஆனால் அதற்காகப் பரலோகம் சென்று விடவும் அவர் விரும்பவில்லை இத்தனைக்கும் இந்த லோகத்தை விட பரலோகம் எத்தனையோ விதத்தில் சிறந்தது என்று அவர் அறிந்திருந்தார். தான் அறிந்த உண்மையை பிறருக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டு வந்தார் ஆனால் அவர் மட்டும் அந்த வழியை பின்பற்றவில்லை '' வைரவன் செட்டியாரை உணர்வுபூர்வமாக இந்த முறையில் அறிமுகப்படுத்தும் ஆசிரியர் உழைப்பின் வர்க்கத்தின் அவலநிலையை உருக்கமாக அதே கிண்டல் கலந்த யதார்த்த முறையில் சித்திரிக்கிறார். அவர் கூறுகிறார்

''நாய்க்கு என்ன தெரியும்? எசமானைக் கண்டால் வாலைக் குழைக்கவும், அன்னியரைக் கண்டால் குரைக்கவும்தான் தெரியும் எசமானர் காரில் ஏறும்போதும் இறங்கும் போதும் கதவைத் திறந்துவிட முடியுமா? ஹாரன் சத்தம் கேட்டதும் அலறியடித்துக் கொண்டு வந்து ஓடி பங்களாவின் கேட்டைத் திறந்து விட தெரியுமா? இரவில் உறங்குகிறாயே உன்னை வேலையிலிருந்து தூக்கிவிடுவேன் என்றும், நின்ற இடத்திலேயே நிற்காமல் போறாயோ விரட்டி விடுவேன் என்றும் நாயைப் பய முறுத்த முடியுமா? இப்படி பல சௌகரியங்களை முன்னிட்டு தான் பெரியசாமியையும் சின்னசாமியையும் தமது

பங்களாவுக்கு காவல் காக்க வைத்துக் கொண்டார்'' (எஸ தோத்தாத்ரி தாமரை 1978)

## சமூக விரோதிகள்

''விந்தனுடைய கதைகளில் புதுமைப்பித்தனை விட மிக அதிகமான அளவிற்கு ஒரு சத்திய ஆவேசமும் சமுதாய உணர்வும் இருப்பதைக் காண முடியும் 'சமுதாய விரோதி' என்ற கதை இதுவும் மிகச் சிறந்த உதாரணம் சொந்தத் தகப்பனாராக இருந்தாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறான் என்றபடியால் அவனைப் போலீஸ் வசம் ஒப்படைக்கும் புஷ்பராஜி கதை இது புஷ்பராஜிக்கு ஏற்படும் தர்மாவேசம் விபீஷ்ணனுக்கு ஏற்படும் ஆவேசத்தைப் போன்றது நியாயம் நிலை நாட்டப்பட வேண்டும் சமூக விரோதிகள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் மிக உறுதியான கதாபாத்திரமாக புஷ்பராஜ் விளங்குகின்றான் இங்கு புஷ்பராஜ் அதர்மத்தை எதிர்த்துப் போராடும் ஒரு இதிகாசத்தின் தன்மையுள்ள பாத்திரமாக விளங்குவதைக் காண முடிகிறது. புஷ்பராஜிக்கு வேறு ஒருவருக்கும் நிகழும் உரையாடல் இதைத் தெளிவாக உணர்த்துகிறது

''அவர் எனக்கு விரோதியில்லை''

''பின்னே யாருக்குத் தம்பி விரோதி?''

''சமூகத்துக்கு விரோதி''

''சொந்த அப்பனைவிடச் சமுதாயம் பெரிதா?''

''அப்பனைவிட அரசாங்கத்தைவிடப் பெரிது!'' (சமுதாய விரோதி)

இந்த வரிசையில் உள்ள பல கதைகளை விந்தன் எழுதி யுள்ளார் சமுதாயத்தை ஏமாற்றித் திரியும் ஒரு கதாபாத்திரமாக எங்கள் ஏகாம்பரம் என்ற கதையில் ஏகாம்பரம் என்ற பாத்திரம் இடம் பெற்றுள்ளது. காந்தியவாதி என்ற கதையில் இன்று உலவி வரும் போலி காந்தியவாதியை விந்தன் அம்லப்படுத்துகிறார் 'காந்தியவாதி' என்ற அவருடைய கதையில் கதாநாயகன் துளசிங்க ராயர் ஊர்க் குழந்தைகளுக்குப் பட்டாசு தானம் செய்கிறேன் என்று அவருடைய வைப்பாட்டி குழந்தைகளுக்குக் கொடுக்கிறார் அத்தனை வைப்பாட்டிகள் அவருக்கு அவருடைய சுயரூபத்தை குப்புலிங்கம் என்ற கதாபாத்திரம் மூலம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் விந்தன்

''நான் எட்டிப் பார்த்தேன் என்ன ஆச்சரியம் ஏழெட்டுப் பெண்களுக்கு நடுவே எங்கள் ஊர் காந்தி எழுந்தருளியிருந்தார் மேலே ஒரு துண்டும் கீழே ஒரு துண்டும் வழக்கமாக இருக்கும் பாருங்கள், அவற்றைகூட மறந்து அவர் எளிமையின் உச்சிக்கே போய்

வாய்மையையும் தூய்மையையும் பண்பையும், பாரம்பரியத்தையும் அங்கே வளர்த்துக் கொண்டிருந்தார்''

## சுற்றமும் நட்பும்

'குழந்தையைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு பாலூட்டும் தன் தாய் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு மாற்றும் போது அது வீறிட்டு அழுகிறது. மீண்டும் தனக்கு பாலுட்டுவதற்காகத்தான் அன்னை அவ்வாறு செய்கிறாள் என்பதை அது அறிவதில்லை அந்தக் குழந்தையின் அழுகையைப் போன்றுதான் மனிதன் மரணத்தைக் கண்டு மனம் பதைப்பதும்'' என்றார் கவியரசர் தாகூர்.

நண்பன் இறந்து விட்டான் துக்கம் விசாரிக்கப் போனேன். அங்கே ..

''ஆமாம், என்ன அநியாயம் பாருங்கள். இன்னும் அவர் மறைந்துவிட்ட மாதிரியே எனக்குத் தெரியவில்லை. அடடா என்ன தங்கமான குணம்! கேட்கும் போதெல்லாம் நூறும் இருநூறுமாகக் கொடுத்துக் கொண்டேயிருப்பார் இனிமேல் எனக்கு அவரைப்போல் யார் உதவி செய்யப் போகிறார்கள்?'' என்றார் நண்பர்

''ஒரு விஷயம் கேளுங்கள். என்னிடம் அவர் எதைச் சொன்னாலும் மற்றவர்களைபோல் நான் அவ்வளவு எளிதில் ஒப்புக்கொள்வதேயில்லை இல்லாத விதண்டா வாதம் எல்லாம் செய்வேன். அவர் கொஞ்சமாவது கோபித்துக் கொள்வார் என்கிறீர்களா? மாட்டவே மாட்டார். குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கொண்டே 'டேய் விநாயகம்! உனக்கு வாதம் செய்வதில் நல்ல திறமை இருக்கிறது. நீ வக்கீல் வேலைக்குத்தான் படிக்க வேண்டும்' என்பார் நானும் இப்பொழுது படிக்கும் பி ஏ யை முடித்து அப்படியே படிக்கலாம் என்று எண்ணியிருந்தேன். என்னுடைய எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டு அவர் போயே போய்விட்டார்'' என்றார் மகன்.

''ஐயோ, மஞ்சள் குங்குமத்தோடு போய்ச் சேரலாம்னு இருந்தேனே! என்னுடைய தலையெழுத்து இப்படி ஆகிவிட்டதே. இந்தப் பாவிக்குத் தலைவலி காய்ச்சல் என்றால் அவர் என்ன பாடுபடுத்துவார், அங்கேயும் இங்கேயுமாக குட்டி போட்ட பூனை மாதிரி ஓடி ஓடி வருவாரே! இனிமேல் அப்படி யார் எனக்காக அலையப் போகிறார்கள்!'' என்றாள் மனைவி

''என்ன இருந்தாலும் அந்தப் பாழும் தெய்வம் என்னை இப்படி அனாதையாக்கி விட்டிருக்க வேண்டாம் என்னமோ இத்தனை நாளும், என் கையைப் பிடித்தவர் என்னைப் பாடாய் படுத்திய போதெல்லாம் அண்ணா இருக்கிறார் என்று கொஞ்சம் தைரியமாய் இருந்தேன் இப்போது அதுவும் போய்விட்டது!'' என்றாள் தங்கை

அப்படியானால் இந்த உலக வாழ்வை நீத்த அந்த அரங்க நாதன் பற்றி வருந்துவது யார்?

சுற்றமும் நட்பும் சூழ இருப்பதே சுயநலத்துக்காகத்தானே! (சுற்றமும் நட்பும்)

ஒரு சிலர் எவ்வளவுதான் முற்போக்குத்தனமாகப் பேசினாலும், அவர்களுக்கென்று ஓர் ஊர், உறவினர்கள் இருப்பதை மறப்பது இல்லை ஆனாலும் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்!'' என்று முழங்குவார்கள்

இத்தகைய போலிகளைக் கண்டு பொங்கி எழுவார் விந்தன் உறவினர் எதற்கு? என்ற கதையில்

''அவனின்றி ஓரணுவும் அசையாது!'' என்கிறார்கள். அப்படி யானால் இந்த அகாண்டாகார உலகத்தில் அவ்வப்போது நடக்கும் அநீதி, அக்கிரமங்களுக்கெல்லாம் அவனே ஜவாப்தாரி ஆகி விடுகிறான் அல்லவா? ஆனால் தண்டனை மட்டும் அவனுக்கு இல்லையாம் அவனால் ஏவப்பட்ட மனிதனுக்குத்தானாம் இதென்ன வேடிக்கை! இப்படி அதிசயத்துக்கு ஆளாகி ஆண்டவனைப் பற்றி ஒன்றுமே அறிந்து கொள்ளமுடியாமல் தவிப்பவர் களுக்குக் கிடைக்கும் பதில் இதுதான்:

அவனுடைய லீலா வினோதங்கள் அற்பர்களாகிய நமக்கு புரியாதவை!

நான்கு பெண்களின் தந்தையான அவர் உறவினர்களைப் பற்றி எடுக்கும் முடிவு கசப்பான மருந்தாக இருந்தாலும் இன்றைய யதார்த்த வாழ்கைக்கு நல்ல மருந்தாகும்

இரண்டு பெண்கள் வயோதிகர் ஒருவருக்கும் இருமல் நோயாளி ஒருவருக்கும் மணமுடித்தார்; இரண்டு திருமணங்களையும் பார்த்துதான் செய்தார்

மூன்றாவது பெண்ணுக்கு உறவுக்காரப் பையனை மண முடிக்க எண்ணி தங்கை வீட்டிற்கும் மைத்துனர் வீட்டிற்கும் அழையாத விருந்தாளியாகச் சென்று அவமானப்பட்டு வந்தது தான் மிச்சம் அப்பொழுதுதான் உறவினர்களின் உண்மை சுயரூபத்தைத் தெரிந்துக் கொண்டார். அதே கால கட்டத்தில் உண்மையான தேசபக்திமிக்க இளைஞன், சிறையில் இருந்து விடுதலையாகி மாலை போட்டு வரவேற்க ஆளின்றிப் பெரும் மழையில் அவர் வீட்டு வாசலில் நின்றான், அவனுக்கு உணவு படைத்து உபசரித்தார் நாள்கள் நகர்ந்தன அவனிடமிருந்து கடிதம் வந்தது கடிதத்தில் ''நான் அவனுக்குப் போட்ட தண்ணீர்விட்ட சாதத்தைப் பற்றிப் பிரமாதமாக எழுதியிருந்தான் நானும் என் வாழ்நாளிலே எத்தனையோ

உறவினர்களுக்கு விருந்து வைத்திருக்கிறேன் கடன் வாங்கியாவது விதவிதமான கறி வகைகளுடன பலகாரம் பட்சணங்களுடன் பரிமாறியிருக்கிறேன் அவர்களில் ஒருவராவது இதுவரை என் விருந்தை மெச்சி ஒரு வார்த்தை பேசியது கிடையாது ஆனால் இவனோ? கேவலம் தண்ணீர்விட்ட சாதத்தை இவ்வளவு பிரமாதப்படுத்தி எழுதியிருக்கிறானே? ஆமாம், வாழ்க்கையில் யாருமே தமக்கு மேற்பட்டவர்களை உபசரிப்பதற்கும், தமக்குக் கீழ்பட்டவர்களை உபசரிப்பதற்கும் உள்ள வித்தியாசம் இது!''

அவன் ஒரு கிறித்தவன் என்றும், தேசபக்தியை விலைக்கு விற்று விட்டு இந்திய விமானப் படையில் வேலையில் இருப்பதாகவும் கடிதத்தில் கண்டது பெண்ணைப் பெற்றவர் அவனைப் பற்றி எண்ணலானார்

''இப்போது மட்டும் என்ன? இந்த இந்து சமூகத்தில் இருந்து கொண்டு நாம் என்ன வாழ்ந்து விடப்போகிறோம்? வேண்டுமானால் ரங்காவையும் இன்னொரு இருமல்காரனாகப் பார்த்து கொடுக்கலாம் அவ்வளவுதான்! அப்பப்பா யார் சொன்னாலும் சரி, முதல் இரண்டு பெண்களுகுகு நேர்ந்த கதி மட்டும் இந்தப் பெண்ணுக்கு நேரவே வேண்டாம் ஆண்டவனே! ஆமாம் அவளுடைய சௌகரியத்துக்காக நாம் இந்த இந்து சமூகத்திற்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டால் என்ன? அந்தப் பிள்ளையாண்டான் மட்டும் ஒப்புக் கொள்வதாயிருந்தால் நாமும் ரங்காவின் நலத்திற்காகக் கிறித்துவ மதத்தையே வேண்டு மானால் தழுவி விடலாமே!''

''அப்பா! நீங்கள் சொல்வது சரி ஆனால் ஒன்று; பிரபலஸ்தர்களும், பிரமுகர்களும் கலப்பு கல்யாணம் செய்தால் அவர்களை சமூக முன்னேற்றத்துக்காகவும் சர்வ சமய சமரசத்திற் காகவும் அப்படிச் செய்வதாக புகழ்வார்கள் இது அவர்களுக்குச் சிறுமையளிப்பதற்கு பதிலாக பெருமையளிக்கும் ஆனால் நம்மைப்போன்ற ஏழைகள் செய்தாலோ அப்படிப் புகழ மாட்டார்கள் அப்பா!' கையாலாகாதவன் என்றும் கழுதைக் கெட்டால் குட்டிச் சுவர் என்றும் இகழ்வார்கள் அப்பா!''

'அவர்கள் புகழ்ந்தாலும் புகழட்டும் இகழ்ந்தாலும் இகழட்டும் அம்மா! அதைபற்றி எனக்குக் கவலையில்லை எப்படியாவது நீ சுகமாகயிருந்தால் அதுவே போதும் எனக்கு வேடுமானால் நீ கலப்பு மணம் செயது கொள்ள வேண்டாமே! அந்தப் பிள்ளையாண்டனும் பிறக்கும்போதே கிறுத்துவனாகப் பிறந்துவிடவில்லையாம் நடுவிலதான் மாறினானாம் அவனுடைய மதத்தை நாமும் தழுவி விடுவோமே? நீதான் நேரில் பார்த்திருக்கிறாயே, உனக்கு அவனைப் பிடிததிருககிறதோ இல்லையோ?''

அவன் சம்மதம் கேட்டு கடிதம் எழுதினார் அவன் நல்ல பதிலை தந்தான் அடுத்து, 'ஜேம்ஸ் தாம்சனுக்கும் ரங்கா என்னும் மேரி ரோசிக்கும் விவாகம் சிறப்பாக நடைபெற்றது!''

இந்தச் செய்தியைக் கேட்ட உறவினாகள் அவன் இறந்து விட்டதாகக் கருதி புண்ணிய ஸ்நானம் செய்து கொண்டார்களாம் செத்தால் தலை முழுகத்தான் அவர்கள் இருக்கிறார்கள். பின்னர் உறவினர் எதற்கு? (உறவினர் எதற்கு?)

## குழந்தைக் கதைகள்

எழுத்தாளர்கள் பலரும் குழந்தைகளைப் பற்றி கதைகள் எழுதியிருக்கிறார்கள் ஆனால் விந்தன் குழந்தைகளைப் பற்றி எழுதியுள்ள கதைகள் வித்தியாசமானவை, மனசை உலுக்கக் கூடியவை 'கல்கி' சொன்னார் ''விந்தன் கதைகளைப் படித்தால் இரவில் தூக்கம் வராமல் தவிக்க நேரும்!'' என்று, அந்த அளவுக்கு விந்தன் கதைகள் அமைந்தன

'மவராசாக்கள்', என்னும் கதையில் வரும் ஓர் ஏழை மரமேறும் தொழிலாளி தன் குழந்தை பசியில் அழுதபோது அதற்கு பால் கொடுக்க வழியில்லாமல் 'அபின்' கொடுத்து தூங்க வைக்கிறான் 'அபின்' அந்த குழந்தையின் உயிரைப் போக்கிவிடுகிறது!

ஊர் குழந்தைகளுக்கெல்லாம் அட்சராப்பியாசம் செய்து வைத்த ஆசிரியர் தம் பிள்ளைக்கு 'ஆபீசாப்பியாசம்' செய்து வைக்கிறாா

சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் கடையில் இருந்தபடியே கண்டு காலம் கழித்தவர் மாணிக்கம் அதனாலே அவர் முகத்தைக் காணும் பாக்கியம் அவருடைய மகனுக்கு கிடைக்கவில்லை அதனால் அப்பாவைக் காணத் துடித்துக் கொண்டிருந்தவன் ஒருநாள் காலையில் தாடி மீசையுடன் விகாரமான முகத்துடன் ஓர் உருவம் அவனைக் கட்டிப்பிடிக்கிறபோது, அவன் அலறுகிறான் அப்போது வந்த அவன் அம்மா 'இவர்தான் உன் அப்பா!' என்று சொன்னபோது குழந்தை குதூகலம் அடைகிறது, (குழந்தையின் குதூகலம்) என்ற கதையில்

சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வு ஒரு மனிதனை எவ்வளவு கொடியவனாக தான் பெற்ற செல்வத்தை அபின் கொடுத்து கொல்லத் தூண்டுகிறது என்பதை மிகவும துணிச்சலுடன் சித்திரித்து காட்டுகிறார் விந்தன்

ஏழை எளியவர்களின் துன்பத்துயரங்களை நேரில் கண்டு அனுபவித்தவர் என்பதற்குச் சாட்சியமாக இக் கதை அமைந்துள்ளது

''சமுதாயத்தையும் அதன் உள்ளோட்டத்தையும் உணராமல் கதைகள் படித்து கதைகள் எழுதுவோர் பலர், சமூகத்தைக் கண்டும்

கண்டதைக் கதையாக்காமல், பணத்தின் மேலும் பாராட்டின் மேலும் கடைக்கண்ணை ஓட்டுபவர்களும் பலர், பொருளாதார பிரச்சனையா? அதைபற்றி எழுதுவது பிரச்சாரமன்றோ? என்று தீண்டாமை பாராட்டும் பெருமக்களும் பலர் உண்டு

விந்தனின் கதைகள் புதிய சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் பல்வேறு வடிவங்கள் நிலவிவரும் சீர் கேடுகளை உடன்வைத்துக் கொண்டே நாகரிக வாழ்வு வாழ்வதாகப் பேசி வரும் பெரிய மனிதர்களின் கூட்டத்தில் தைரியமாக எழுந்து நின்று,

''நீங்கள் வாழ்வது நாகரிகத்தின் மேலல்ல

நரகத்தின் மேல்!''

என்று இடித்துரைக்கும் சொற்கணைகளே விந்தன் கதைகள் ஆனால் டாக்டர் மு வ கூறியுள்ளதுபோல் 'விந்தன் படைக்கும் பாத்திரங்கள் பெரும்பாலும் அப்பாவிகளே, ஆயினும் அவர்களைப் பற்றிப் படிக்கும் மனங்கள் புரட்சி மனங்களாகவே மாறுகின்றன'

இந்த அப்பாவிகளில் ஒருவர்தான் வாத்தியார் வைத்தியலிங்கம் அவரைப் படம் பிடிப்பதுதான் 'ஆபீசாப்பியாசம்' (டாக்டர் சாலை இளந்திரையன் சிறுகதைச் செல்வம்)

''கோயிலுக்குக் கோயில் நின்று தொழுது சென்ற வாத்தியார் பூலோகத்தில் நரகத்தைக் கண்டார், தொழாமலே சென்றவர்களோ சொர்க்கத்தைக் கண்டார்கள்'' (விந்தன்)

மனிதனுக்குப் படிப்பைச் சொல்லிக் கொடுத்து அவன் அறிவை, பண்பை வளர்த்த வாத்தியார் வைத்தியலிங்கம், பொருளாதார ரீதியில் பெருத்த தோல்வியைக் கண்டார். அதனாலேயே இந்தச் சமூகத்துக்குப் பாடம் புகட்ட சவால் விட நினைத்தார் அதன் பலன் தான் தன் மகனுக்கு 'அட்சாரப்பியாசம்' செய்து வைக்காமல் 'ஆபீசாப்பியாசம்' செய்து வைத்தார்

'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற வாசகத்தை வாத்தியார் கற்காதவரா? அவர் படித்ததனைத்தும் அவர் பசியைப் போக்க வில்லையே! அதனால்தான் அவர் தம் மகனுக்கு 'ஆபீஸாப்பியாசம்' செய்து வைத்தார் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் பதினாறு மணி நேரம் வேலை, இப்படி ஒரு வருஷமா இரண்டு வருஷமா, முழுதாக முப்பது வருஷம் வேலை பார்த்தார் மாணிக்கம், கதிர்வேல் நாடார் கடையில் மாணிக்கத்தின் வாழ்க்கை முழுவதும் கடையிலேயே கழிந்து விட்டது ஒருநாள் நாடார் சக்கையாகி விட்ட மாணிக்கத்தை வீட்டுக்கு அனுப்பி விட்டார் ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்த மாணிக்கத்திடம் நாடார் ''இத்தனை நாள் உனக்கு வேலை கொடுத்ததற்கு நீதான் எனக்கு ஏதாவது கொடுக்கணும்'' என்று சொல்லிவிட்டார்

'பாடுபட்டு அறியாதவன் பாட்டாளியின் துயரத்தைப் பற்றியும், சேற்றில் இறங்கி அறியாதவன் குடியானவனுடைய கஷ்டத்தைப பற்றியும் என்னதான் கண்ணீரில் பேனாவைத் தோயத்துக் கொண்டு எழுதினாலும், அந்தக் கதைகளில் மற்ற எல்லாச் சிறுகதை இலட்சணங்கள் எல்லாம் இருக்கலாம் உள்ளத்தை ஊடுருவி வதைக்கும் படியான இதயம் ஒன்றிய ஈடுபாடு இருப்பதில்லை! (கல்கி முன்னுரை)

அன்றாடக் கூலியாக ஆறணா பெற்ற அச்சுத் தொழிலாளி விந்தன், தான் பெற்ற அனுபவத்தை, முதலாளித்துவக் கொடுமையை வர்க்கவுணர் வோடு சித்திரிக்கிறார்

### சுயநலவாதிகள்

பொதுநலவாதியான விந்தன் சுயநலவாதிகள் சிலரைப் பற்றி சுறுக்கென்று மனத்தில் தைக்கும்படியாக எழுதியுள்ளார்

''அரசியலை நிர்வகிக்கும் ஒவ்வொரு அதிகாரிக்கும் மூன்று வித மனப்பான்மைகள் இருக்கின்றன முதலாவது அவனுடைய சொந்த மனப்பான்மை இது சுயநலத்தை நாடுகிறது இரண்டாவது ஆள்கின்ற மனப்பான்மை இது சர்க்கார் நலத்தை நாடுகிறது மூன்றாவதாகத்தான் மக்களுடைய மனப்பான்மை இருக்கிறது, இது மக்களுடைய நன்மையை நாடுகிறது!'' என்ற அறிஞர் ரூசோவின் வாசகத்தைப் படித்தவன் ''அடேய்! அதிகப் பிரசங்கி! நான் யாருக்குப் பிரதிநிதி என்றா கேட்கிறாய்? சொல்கிறேன் கேட்டுக் கொள்! நான் எனக்குப் பிரதிநிதி, என் மனைவிக்கும் பிரதிநிதி, என் மக்களுக்கு பிரதிநிதி, என் வீட்டுக்குப் பிரதிநிதி, உனக்கில்லை பிரதிநிதி இல்லை, உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதி இல்லை, போ!'' என்று கத்தினார் '' (யாருக்குப் பிரதிநிதி)

கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்யும் கறார் கருப்பையாவிடம் மனசாட்சி உள்ள மனிதன் எவனும் வேலை செய்யமாட்டான் என்பதற்கு சாமிக்கண்ணு நல்ல சாட்சி கறார் கருப்பையாவின் திருவிளையாடல் களைத் - திருட்டுத்தனங்களைச் சித்திரிக்கும் (வேதாந்தம்)

''நண்பா! சாப்பிட்டு நான்கு நாட்களாகிவிட்டன! இன்றும் கூட ஒரு பருக்கைகூட கிடைக்கவில்லை'' என்றான் பெருமூச்சுடன்!

''கவலைப்படாதே நண்பா, நாளை நம்முடையது!', 'கட்டத் துணியில்லை வாங்கக் காசில்லை!'

''கவலைப்படாதே நண்பா, நாளை நம்முடையது!''

''படுக்கப் பாயில்லை இருக்க நமக்கென்று ஒரு இடமில்லை!''

''கவலைப்படாதே நண்பா, நாளை நம்முடையது!''

நிகழ் காலத்தை மறந்து எதிர்காலததை நம்பி வாழும் ஏழைகள் கண்ணீா கதை 'நாளை நம்முடையது'

''என் கடன் பணி செய்து கிடப்பதே!'' என்பதே எங்கள் ஏகாம்பரத்தின் கொள்கை! அந்தக் கொள்கையில் அவர் எந்த அளவுக்கு நியாய தர்மத்தோடு நடந்து கொண்டார் என்பதை சித்திரிப்பதே. (எங்கள் ஏகாம்பரம்)

''சமூகம் என்பது நாலு பேர்!'' என்பார்கள் அந்த நாலுபேரின் மனநிலையை சரியான சமூகக் கண்ணோட்டத்துடன் சித்தரிப்பதே மேலே கண்ட கதைகள்

உருவம் உளளடககம் என்று சொல்லிக் கொண்டு உப்பு சப்பு இல்லாமல வெறும் நிகழ்ச்சித் தொகுப்புகளே சிறந்த சிறுகதைகளாகும் போது வாழ்க்கையில் போலிகளை - பொய்யர்களைப் புறக்கணித்து விட்டு, உணமைகளை - மக்களின் நன்மைகளைத் தேடி இலக்கியம் படைப்பதே தமது இலட்சியமாகக் கொண்ட விந்தன் ஒரு சுயநல அரசியல்வாதியின் சுயரூபத்தை நிசத்தன்மையுடன் சித்திரிக்கிறார் அந்தச் சித்திரிப்பில் உருவம், உள்ளடக்கம் அனைத்தும் இணைந்து விடுகின்றன

''அடடே, நமக்கு மனசாட்சி வேற இருக்கிறதா? இந்த விஷயம் முதலிலேயே எனக்குத் தெரிந்திருந்தால் உம்மை வேலையிலேயே வைத்திருக்க மாட்டேன்!''

''எனக்கும் தங்களுக்கும் மனசாட்சி இல்லை என்ற விஷயம் முதலிலேயே தெரிந்திருந்தால் உம்மிடம் வேலையிலேயே சேர்ந்திருக்க மாடடேன்!''

இந்த உரையாடலின் உச்சகட்டம் சாதாரண சாமிக்கண்ணு 'சத்யகீர்த்தி சாமிக்கண்ணு!' என்ற பெயருடன் வேலை நீக்கம் செய்யப்பட்டார்

'மனசாட்சி உள்ளவனே மனிதன்' என்பார்கள் ஆனால் கறார் கருப்பையா மனசாட்சி இல்லாத மனிதர், அரசாங்கத்தை, அப்பாவி மக்களை வேரடி மண்ணோடி சுரண்டும் ஒரு கொள்ளைக்காரன் அவனுடைய கதையை ஒளிவு மறைவு இல்லாமல் உள்ளது உள்ளபடி சித்திரிக்கிறார் மனசாட்சி உள்ளவர் மனிதர் விந்தன் 'நாளை நம்முடையது!' என்பது ஒரு கோழையின் குரல், 'இன்றே நம்முடையது ஆகவேண்டும்!' என்பது ஒரு வீரனின் குரல்

இன்றைய நாளை தமதாக்கிக் கொண்டிருந்த காண்ட்ராக்டர் கந்தையா சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏழைகளுக்கு கஞ்சி வார்த்தார். ஓர் ஏழைச் சிறுமி ஒருமுறை கஞ்சி வாங்கிவிட்டு மறுமுறை கஞ்சி வாங்க வந்தாள் தன் அம்மாவுக்கு அதைக்கண்ட கந்தையா சிறுமியின்

கன்னத்தில் அறைந்து கீழே தள்ளினாா சிறுமியும் கோபத்துடன் கஞ்சியை அவா் முகத்தில் ஊற்றாமல கீழே ஊற்றினாள அதைப் பார்த்துக கொண்டிருந்த அந்த இருவர் அதான் 'நாளை நமமுடையது' என தாங்கள் வரிசையில் நின்று வாங்கிய கஞ்சியை அந்த சிறுமிககும் அவள தாயக்கும் கொடுத்து விட்டு இன்று ஐந்தாவது நாள பட்டினி என்றான் கவலைப்படாதே நாளை நம்முடையது எனறான்

''கூடாது நண்பா! கூடாது நாளை அவர்களுடையதாக இருக்கட்டும் இன்றை நம்முடையதாக்கிக் கொள்வோம் இந்த உறுதிமொழியைக் கேட்டதும் அநதச் சிறுமியின் கண்களில் ஒளி வீசியது.

இந்தச் சமூகத்தின் போக்குகளை மறந்து நாளை நம்முடையது என்று கண்மூடிக் கிடந்த மக்களை இன்றே நம்முடையது என்று உணர வைத்தன கந்தையாவின் சமூக விரோதப போக்குகள்

'என் கடன் பணி செய்வதே!' என்று மக்கள் முன் கூறி, நகரத்தில் நடந்துள்ள பல சாதனைகளுக்குச் சொநதக்காரர், இதோ பட்டியல் 'ஏகாம்பரம் எம்போரியம்' 'ஏகாம்பரம் ஜூவெல்லர்ஸ்' 'ஏகாம்பரம் மருந்துகடை' 'ஏகாம்பரம் பவனம்' இவையெல்லாம் அடையாளம் காட்ட 'என் கடன் பணி செய்வதே!' என்ற விளம்பரப் பலகை தொங்கும்

அரசியல் அந்தஸ்து ஒரு மனிதனை எப்படியெல்லாம் உயர்த்தும என்பதை அமைதியாகக் கதை சொல்லுகிறார் விந்தன் ஆனால் டாக்டர் மு வ சொன்னது போல ''இக் கதையைப் படிக்கிற மனங்கள் தான் புரட்சி மனங்களாக மாறுகின்றன!''

## இதோ ஒரு சுயமரியாதைக்காரர்!

விந்தன் வெளியிட்ட மனிதன் இதழில் வெளியான 'இதோ ஒரு சுயமரியாதைக்காரர்!' என்ற பகுதியைப் பலரும் பாராட்டினார்கள் அவர்களில் குறிப்பிடத்தக்கவர் பேராசிரியர் கல்கி, அவர் எழுதினார் 'இதோ ஒரு சுயமரியாதைக்காரர்' என்னும் தலைப்பை உடைய பகுதி பத்திரிகை உலகத்துக்கே ஒரு புதுமை என்று சொல்லும்படி இருக்கிறது

இளம் பிராயத்தில் ஒரு காலை இழந்துவிட்ட ஒரு மனிதர் வாழ்க்கையில் நிராசை அடைந்து விடாமலும், பிறரை அண்டிப் பிழைக்காமலும் சுயமாகத் தொழில் செய்து சுயமரியாதையை நிலை நாட்டிக் கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறார் இந்த உண்மை வாழ்க்கைக் குறிப்பு மிக்க உயர்தரமான பத்திரிகை அம்சமாகும், மனிதகுலத்தை எப்படி உயர்த்தலாம் என்பதற்கு மிகச்சிறந்த உதாரணமாகும் (1 10 1954 கல்கி)

இத்தகைய சுயமரியாதை சிந்தனையோடமைந்த கதைதான் 'அவன் ஏன் திருடவில்லை'

ஒரு ஜவுளிக் கடையின் முன் அமர்ந்து கூடை, முறம் பின்னிக கொண்டிருந்தான் வெறும் கோவணத்துடன் ஒரு கிழவன் அவன் மேல் பச்சாதாபப்பட்டு அந்த ஜவுளிக் கடை ஊழியன் கிழவனுக்கு ஒரு போர்வை இருந்தால் நன்றாயிருக்குமே என்று கருதி சக ஊழியனுடன் ஜவுளிக்கடையில் இரண்டு போர்வையைத் திருடி கிழவனுக்கு ஒரு போர்வையைக் கொடுத்தான் அதைப் பார்த்த கிழவன் சிரித்தான்

''ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்றான் அவன

''ஒன்றும் இல்லை எனக்குப் போர்வை இல்லை என்று நீ சொன்னாயே, அதற்காகச் சிரித்தேன்'' என்றான் கிழவன்

''அப்படியானால் உங்களிடம் போர்வை இருக்கிறதா? என்ன?''

''இருக்கிறது தம்பி, இருக்கிறது ஆனால் அதை உன்னால் பார்க்க முடியாது அந்தக் கணபதியாலும் பார்க்க முடியாது!''

''அது என்ன போர்வை தாத்தா அப்படிப் பட்ட போர்வை!'' என்றான் அவன்

''அதுதான் மானம், தம்பி மானம், அந்த போர்வை உள்ளவன் இந்த போர்வையை விரும்பமாட்டான்'' என்றான் கிழவன்

## திருந்தியவன் கதை

திருடன் திருந்தி வாழ நினைத்தால் அவனை நம்ப மறுக்கும் சமூகம், பணக்காரன் போடும் பகல் வேஷங்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது போலீஸ்காரன் திருந்தியவனை மீண்டும் திருடத் தூண்டுகிறான் உழைப்பவனுக்கு காலணா கொடுக்க மறுப்பவன் நானூறு ரூபாயைப் பறிகொடுக்கிறான் எல்லாம் ஏமாந்துதான் கொடுப்பார்களா! ஆம் என்கிறது 'சிறைப் பறவை' என்ற கதை

ஏமாந்து கொண்டிருக்கும் வர்க்கத்தை மேலும் ஏமாற்றிக் காலங்காலமாக ஏமாந்து கொண்டிருக்கிறது ஒரு வர்க்கம் அந்த வர்க்கத்தை மேலும் மேலும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது மற்றொரு வர்க்கம் இந்த இரு வேறு வர்க்கத்துக்கிடையே நடை பெறும் போராட்டத்தில் உணர்ச்சி வசப்பட்டு சிறைசெல்வோரும், செத்து மடிவோரும் ஏழை எளிய அப்பாவிகளே! அவர்கள் திருந்தி வாழ வழியில்லையா? என்றும் அவர்கள் சிறைப் பறவைகள்தாமா?

## மூடப்பழக்கங்களே மூலதனம்

ஏழை எளியவர்களின் மூலதனம், பெருஞ்சொத்து மூடப்பழக்க வழக்கங்களே, தலையெழுத்து என்னும் தத்துவமே

அந்தத் தத்துவத்தில் தலைசாய்ந்து கிடக்கும் மக்கள் எதற்கெடுத்தாலும் தலையெழுத்து என்று சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்கள்

அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேண்டாமா? வேண்டுமெனில் ஐந்து ரூபாயக்கு விற்க வேண்டிய மீனை மூன்று ரூபாய்க்குக் கொடுக்காதீர்கள் முன் பணம் கொடுத்து உங்களை முடக்கி விட்ட முதலாளியின் முகத்தில் பணத்தை வீசியெறியுங்கள்

பின்னர் சுதந்திரமாக மீன் வியாபாரம் செய்யுங்கள் கூட்டுறவு சங்கங்களைக் கட்டுங்கள் அப்போது தேடுங்கள் உழைக்காமல் உண்டு கொழுத்து உல்லாசமாக வாழும் நைனா முகம்மதுவின் தலையெழுத்து எப்படி இருக்கிறது என்று? அப்போது புரியும் தங்கம் செய்யாததை சங்கம் செய்யும் என்பதை! இந்தக் கதையைப் படித்தபோது (தலையெழுத்து) எழுந்த சிந்தனை இது

## ஒன்றே குலம்

'ஒன்றே குலம்' எழுத்தில் உள்ளதை நிஜ வாழ்க்கையிலும் நிரூபித்து காட்டினார் தர்மலிங்கம்.

தர்மலிங்கம் தன் ஜாதிக்காரன் என்ற தைரியத்தில் அவன் வீட்டுத் திண்ணையில் இடம் கேட்டான் பொன்னையா. தர்மலிங்கம் மனைவியின் ஆலோசனைப்படி ஐம்பது ரூபாய் கொடுத்துக் குடிசையைப் புதிப்பிக்குமாறு சொன்னான்.

ஐம்பது ரூபாய் கையில் கிடைத்தவுடன் அகமகிழ்ந்து போனார்கள், பொன்னையனும் அவன் மனைவியும் ஆனால் பணத்தின் மறுபக்கத்தை அவர்கள் மறந்து போனார்கள் ஏழை என்றும் ஏழையாகவே குடிசையில் இருக்கவேண்டும்; பணக்காரன் என்றும் பணக்காரனாகவே மாடமாளிகையில் வாழ வேண்டும் என்பதே அதன் அர்த்தம் என்பது ஏழை பொன்னையாவுக்கு எப்படித் தெரியும்? (பொன்னையா)

## பொதுமை மலர்ந்தது

''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' என்று புரட்சி குரல் கொடுக்காமல், ''நீங்கள் சாகப் பிறந்தவர்கள் அல்ல, வாழப் பிறந்தவர்கள்! இங்குள்ள தோட்டம் துறவுகள் அனைத்தும் இங்கு வேலை செய்பவர்கள் அனைவருக்கும் சொந்தம் என்று இளையதலை முறையைச் சேர்ந்த இளைஞன் சொன்னபோது, முந்தைய தலை முறையைச் சேர்ந்த அவன் அப்பா வேலைக்காரர்களுக்கு இழைத்த இன்னல்கள், கொடுமைகள், அவமானங்கள் அனைத்தும் மறந்து போகின்றன

பழைய தோட்டம் இப்போது சமத்துவம் மிகுந்த சுதந்திர பூமியாகி விட்டது! (வாழ்ப் பிறந்தவன்)

## பேச்சே பேராயுதம்

சிலருக்கு அவர்கள் பேச்சே பேராயுதமாகும் அத்தகைய பேராயுதத்துக்குப் பலியானான் ஏழைத் தொழிலாளி வேலப்பன்; அவனுடைய சோகக்கதையைச் சொல்லுகிறது 'சுயநலம்' என்ற கதை

சில பணக்காரர்கள் தம் பழைய வாழ்க்கையை எண்ணிப் பார்க்காமல், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று நடந்து கொள்வார்கள் ஆனால் நினைத்துப் பார்க்கும்போது அதற்காக வருந்துவார்கள் ஆனால் அந்த வருத்தத்துக்குப் பலன் இல்லாமல் போய் விடுகிறது (கவலை இல்லை) ஒரு மாந்தோப்பில் பிரம்பு கட்டிலைப் பின்னி சுயமாகத் தொழில் செய்து சுயமரியாதையுடன் வாழ்ந்து வந்தார்கள் அவனும் அவன் மனைவியும்

அன்றாடம் அதைப் பார்த்து வந்த மாதவராவ் தம் பேச்சாற்றல் மிக்க பேராயுதத்தைப் பயன்படுத்தினார் மாந்தோப்பை அழித்து அங்கே அழகானக் கட்டடம் ஒன்று கட்டி அதில் பிரம்பு கட்டில் பின்னும் வேலையை ஆரம்பிக்கலாம் உன்னிடம் பணம் இல்லாவிட்டால் நான் போடுகிறேன். உன்னிடம் தொழில் இருக்கிறது என்னிடம் பணம் இருக்கிறது லாபத்தில் இரண்டு பேரும் சம பங்கு எடுத்துக் கொள்ளலாம் என்றார்.

காலம் கரைகிறது. மாதவராவ் கனவு பலிக்கிறது தொழில் நல்ல முறையில் நடக்கிறது வேலப்பன் மாதச் சம்பளத்தில் வேலை பார்க்கிறான் ஒருநாள் அவன் குழந்தைக்கு உடம்பு சரியில்லாமல் போனதால் வேலைக்குப் போகவில்லை மறுநாள் வேலைக்குப் போனவன் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றான். மாதவராவிடம் முறையிடுகிறான் அவன் அதிகாரி சொன்னது சொன்னதுதான் என்கிறான்

சுயவேலையை சுயமரியாதையை இழந்து மாதச் சம்பளத்துக்கு வேலை செய்யும் அவன் செய்த தவறுதான் என்ன? தவறு இதுதான்

'பெருமைக்கு ஆசைப்படாத மனிதன் யார்? ஒருவனும் கிடையாது அதற்கு வேலப்பன் மட்டும் விதி விலக்கா என்ன? அவன் 'முதலாளி இவ்வளவு பெரிய மனிதரானதற்குக் காரணம் நான்தான்!'' என்று தன்னுடன் வேலைசெய்பவர்களிடம் அடிக்கடி சொல்லிக் கொள்வது வழக்கம் இது மாதவ ராவின் காதுக்கு அடிக்கடி எட்டிக்கொண்டிருந்தது அவன் அப்படிச் சொல்லிக் கொள்வது அவருடைய சுயமரியாதைக்குப் பங்கம் விளைவிப்பதா யிருந்தது

ஆனாலும் என்ன செய்வது என்று தெரியாமல் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்

மனவேதனையுடன் வேலப்பன் வெளியேறிபோது காற்றில் கலந்துவந்த அந்தக் கீதம் அவன் காதில் ஒலித்தது

**''விழலுக்கு நீர் பாய்ச்சி**
**மாயமாட்டோம் - வெறும்**
**வீணருக்கு ழைத்துடலும் ஓயமாட்டோம்!''**

## வாழ்க்கைச் சித்திரங்கள்

தமிழில் விந்தன் நூற்றுக்கு மேற்பட்ட கதைகள் எழுதி யுள்ளார் அவற்றில் பெரும்பாலும் ஏழை எளிய பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி எழுதியுள்ள கதைகள்தாம் அதிகம்.

நடுத்தர வர்க்கத்தைப்பற்றி அவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் சீரழிவுகள் பற்றியும் கதைகள் எழுதியுள்ளார்; அந்தக் கதைகளைப் பற்றி முன்னாள் 'கல்கி' துணையாசிரியர் எஸ் வேங்கட்ட சுப்பிரமணியம் (எஸ் வி எஸ்) சொல்லுவார் ''விந்தன் கதைகள் மகாகவி தாகூர் கதைகள் மாதிரி இருக்கின்றன'' என்று எடுத்துக் காட்டிற்குச் சில கதைகள்

'முதல்தேதி' நடுத்தரவர்க்கத்தில் ஒரு நம்பிக்கையான சொல். ஒரு மாதம் முழுவதும் கடன் வாங்குபவன் கடன்காரனுக்குச் சொல்லும் ஒரே பதில் 'முதல் தேதி தருகிறேன்' என்பதுதான் குடும்பத்தில் ஏற்படும் சிறு சிறு பிரச்னைகளுக்கெல்லாம் தீர்வாக அமைவது முதல்தேதி தான்.

பிரசவத்துக்கு வந்திருக்கும் தங்கையை ஊருக்கு அனுப்புவது முதல், பிள்ளைகள் கேட்கும் நாடகம், சினிமா முதற்கொண்டு அனைத்துக்கும் ஒரே பதில் முதல்தேதிதான்

சிக்கனமாக குடும்பம் நடத்த வேண்டும் என்பது மனைவியின் ஆசை

''பார்க்கப்போனால் நம்மைக் காட்டிலும் வாழ்க்கையில் குறைந்த அளவு தேவையுடன் திருப்தியடைபவர்கள் வேறு யாருமே இருக்கமாட்டார்கள்!''

''ஏன் இல்லை? எத்தனையோ பேர் இருக்கிறார்கள் முனியன், மூக்கன், தொப்பை, சப்பை என்று இல்லையா?''

''அவர்கள் எங்கே வாழ்கிறார்கள்? பிறர் வாழ்வதற்காக நிமிஷத்துக்கு நிமிஷம் செத்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது பிரெஞ்சு அறிஞன் ஒருவன் ஜனங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறான் மேல் வகுப்பு, கீழ் வகுப்பு, மத்திய வகுப்பு என்று அவன் பிரித்திருக்கிறான்

மேல் வகுப்பினர் சுதந்திரத்தை விலைக்கு வாங்குகிறார்கள்! கீழ் வகுப்பினர் சுதந்திரத்தை விலைக்கு விற்கிறார்கள் என்று அவன் சொல்கிறான் இந்த இரு வகுப்பினர்களுக்கும் இடையில் இரண்டும் கெட்டானாக இருந்து கொண்டு அவதிப்படுபவர்கள்தாம் நம்மைப் போன்றவர்கள் நம்முடைய சூழ்நிலை வேறு, அவர்களுடைய சூழ்நிலை வேறு இவையனைத்தையும் கூட்டிக் குழப்பி ஒன்று சேர்க்க முயல்கிறார்கள் அரசியல்வாதிகள் ''

அவன் எதிர்பார்த்த முதல் தேதியும் வந்தது வாங்கிய சம்பளத்தைக் கடன்காரர்களுக்குக் கொடுத்து விட்டு மிச்சம் இருந்த ஒரு ரூபாயை - முழுசாகக் கொடுத்தான் இந்த மாதக் குடும்பச் செலவு என்று மனைவியிடம்

பின்னர் பிள்ளைகள் சர்க்கஸ், சாக்லெட், சைக்கிள் என்றார்கள் அனைவருக்கும் ஒரே பதில், முதல் தேதி!

இந்த முதல் தேதிக்கு முடிவே கிடையாதா? அவர்கள் வாழ்வு முடியும் வரையில் அதற்கு முடிவே கிடையாது! (முதல் தேதி)

நினைத்தது நடக்கவில்லை, நினைக்காதது நடந்து விட்டது! அதுதான் மனிதனை மீறிய செயல்

நாளை வரும் தீபாவளியைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு குறுக்கே நிற்கும் நோயாளியான சம்மந்தி என்று அவரை சபித்துக் கொண்டிருந்தாள் சம்மந்தியம்மாள் அவளின் சபித்தலைக் கேட்டு மனமுடைந்து சம்மந்தி தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார் கையில் இருக்கும் வைரமோதிரத்தின் உதவியை நாடுகிறார் மின்சாரத்தின் துணையைத் தேடுகிறார் கடைசியில் அவரின் முயற்சிகள் வெற்றி பெறவில்லை எதிர்பாராமல் சம்மந்தி அம்மாள் மண்டையைப் போட்டு விடுகிறாள் (ஈசன் விட்டவழி)

பொருளாதார ஏற்றத்தாழ்விற்கும், சாதி சமத்துவத்துக்கும் ‘கலப்பு மணம்’ ஏற்றது என்று கருதும் விந்தன், எந்த நிலையிலும் மறுமணத்தை ஏற்றுக் கொள்வதேயில்லை ஏற்கெனவே ‘மறுமணம்’ என்ற கதையில் இந்தக் கருத்தைத் தவிர்த்தவர், மேலும் ‘மறுபடியும்’ ‘வணக்கத்துக் குரியவள்’ என்றும் கதைகளின் மறுமணம் நிகழ்வதற்கு வாய்ப்புகள் பல இருந்த போதிலும் அதை முற்றாக மறுக்கிறார்

ஒவ்வொரு குடும்பத்திலும் ‘மருமகள்’ என்பவள் நேற்று வந்தவள்தான் இந்த நடப்பியல் உண்மையைப் புரிந்துக் கொண்டனர் இரு வீட்டு மருமகள்கள் பின்னர் பிரச்னை தீர்ந்தது, மகிழ்ச்சி பொங்கியது (நேற்று வந்தவள்)

கதைகளை எதைப்பற்றி வேண்டுமானாலும் எப்படி வேண்டு மானாலும் எழுதலாம் ஆனால் சொல்லும் விஷயத்தை சுவையாகச்

சொல்லவேண்டும் என்பதே சிலரின் கருத்து ஆனால் விந்தன், கதைகள் வாழும் மக்களைப் பற்றி எழுதவேண்டும், அன்றாடம் அவர்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களைப் பற்றி எழுதவேண்டும், மொத்தத்தில் மனிதனின் வாழ்க்கைப போராட்டங்களைப் பற்றி எழுதிப் படிப்பவர்கள் மனத்தில் பரிவு ஏற்படும்படி எழுதவேண்டும் என்னும் கொள்கையுடையவர் அத்தகைய நோக்குடன்தான் இந்த ஐந்து கதைகளையும் எழுதியுள்ளார்

ஒவ்வொரு கதையிலும் நடுத்தர வர்க்கத்தின் நடப்பியல் வாழ்க்கையை அவருக்கே உரிய தன்மையுடன் விவரிக்கிறார்

கீழ்தட்டு மக்களின் போராட்டங்கள் கோபங்கள் ஆகியவைகளை அறிந்துள்ளது போலவே, நடுத்தர வர்க்கத்தின் நியாயமான கோரிக்கைகளைத் திறம்பட வலியுறுத்துகிறார் முற்போக்கு சிந்தனை யாளரான விந்தன் மறுமணத்தை ஏனோ வெறுக்கிறார் அந்தக் கருத்தைத் தன் கதைகளில் வெற்றி பெறுவதற்கு மாறாக தோல்வி அடையவே செய்கிறார் அவரின் இந்த ஒரு கருத்தில் எனக்கு உடன்பாடில்லை!

முஸ்லிம் சமுதாயத்தைப்பற்றி இரண்டு கதைகள் எழுதியுள்ளார் விந்தன், அவை 'தங்க வளையல்' 'அன்பும் அதிகாரமும்' ஆகியவை

சரித்திர, புராண கதை மாந்தர்களைப் பற்றி கதைகள் எழத விரும்பாத விந்தன், கற்பனையில் எழுதிய முஸ்லிம் அரசரின் கதைதான் 'அன்பும் அதிகாரமும்'

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' ஆனால் அன்பை அதிகாரத்தால் அடையப் பார்க்கிறான் அரசன் அன்பை விலை பேசுகிறான் விற்பதற்கும், வாங்குவதற்கும் யாருக்கும் உரிமையில்லை என்பதை அறிந்து அரசன் ஆத்திரப்படுகிறான்.

பாதுஷா முல்லாவின் பிறந்த நாள் அரசவை கூடுகிறது அரசப் பிரதானியர்கள் அனைவரும் வருகிறார்கள் கடைசியில் கவி இசா வருகிறான், ஒரு மான் குட்டியுடன்,

அந்த மான் குட்டியின் மேல் ஆசைபடுகிறாள் ராணி ஜிஜியா. தன் விருப்பத்தை அரசனிடம் சொல்லுகிறாள் அரசன் ராணியின் விருப்பத்தை கவி இசாவிடம் தெரிவிக்கிறான் "ராணி மான் குட்டி யிடம் மனத்தைப் பறிகொடுத்தாள் சரி மான் குட்டி ராணியிடம் மனத்தைப் பறி கொடுத்ததா?" பின்னர், அன்பும் அதிகாரத்துக்கும் விவாதம் நீடிக்கிறது கடைசியில் கவி சிறையிலும், மான்குட்டி அரசு உத்தியானவனத்திலும்

கவியைத் துறந்து உயிர் வாழ முடியாத மான் உணவை உறக்கத்தை, மறந்து ஒரு நாள் உயிரை விட்டது அதை அறிந்த கவியும் தானும் பறந்து செல்வதாகக் கூறி பறந்து சென்றான்

மான் இறந்து விட்டதை அறிந்த அரசன் அன்பின் மகிமையை வியந்து கவியிடம் மண்டியிட்டு மன்னிக்கும்படி வேண்டுகிறான் அல்லா உன்னை ஒரு நாளும் மன்னிக்கமாட்டார் என்கிறான் மனம் நெகிழும்படியான இக் கதையை உணர்ச்சி பூர்வமான உரையாடல்கள் மூலமும் முஸ்லிம் சமுதாயத்தின் மொழியாலும் சிறப்பாக எழுதியுள்ளார்

சிறுகதைகளைக் கேலியும் கிண்டலும் கலந்த நடையில் படைக்கும் படைப்பாளரான விந்தன் முழுமையான நகைச்சுவைக் கதைகளையும் எழுதியுள்ளார் சான்றுக்கு ஒரு கதை

கவிதைத் துறையில் கவிதைகள் எழுதி தம்மை கவிஞர் என்று அடையாளப்படுத்தி கொள்வதற்கு மாறாக, தாகூர் மாதிரி தாடி வளர்த்துக் கொள்வது, குர்தா அணிவது, இப்படி உடையால் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட கவிஞர் ஒன்பாற்சுவையாரை எவரும் கவிஞர் என்று அழைக்கவில்லை அதுவே அவருக்கு கௌரவக் குறைவாகப்பட்டது

'நமக்குத் தொழில் கவிதை' என்று அவரே முழுநேரக் கவிஞராக ஆகிவிட்டார் ஆனால் காசுதான் அவரை நெருங்கவில்லை.

கவிஞருக்கு கவிதை பிறந்ததோ இல்லையோ கவிதாதேவி என்னும் பெண்குழந்தை பிறந்தது

கவிஞர் ஒன்பாற்சுவையாரின் இல்லத்தரசி இன்பவல்லி அம்மையார் இட்லி வடை கடையை நடத்தி வாழ்க்கைக்குக் காசு வேண்டும் என்ற எண்ணத்தில் நடத்தினார்

இட்லி கிடைத்ததும் சட்னி கிடைக்காததால் ஆத்திரத்தில் கவிஞர் பாடினார்.

**வேதனை வேதனை வேதனை**
**வேதனை போயின்**
**சோதனை சோதனை சோதனை**
**இட்லி இட்லி**
**இட்லிக்கும் வேண்டும்**
**சட்னி சட்னி சட்னி**

அச் சமயத்தில் வீட்டு வாசலில் கார் ஒன்று நின்றது. அதிலிருந்து இறங்கியவர் ஐநூறு ரூபாய்க்கு செக் ஒன்றை எழுதி கவிஞர் ஒன்பாற்சுவையாரிடம் கொடுத்துவிட்டு நாளை ஸ்டுடியோவுக்கு வரும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். அவ்வளவுதான் ஒன்பாற்சுவையார் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார்

மறுநாள் ஸ்டுடியோவிற்குச் சென்றார் அங்கே உம்மை பாட்டு எழுத அழைக்கவில்லை பின்னணி பாடத்தான் அழைத்தோம் என்று

சொன்னதைக் கேட்டவுடன் மீண்டும் மயக்கம் போட்டு விழுந்து விட்டார்

### இக் கதையில் நகைச்சுவைக்குச் சில எடுத்துக்காட்டு:

''இத்தனைக்கும் நான் அப்படியொன்றும் கேட்டு விடவில்லை ஆனானப்பட்ட கம்பனே தன்னைத்தானே 'கவிஞன்' என்று அழைத்துக் கொள்ளாதபோது நீங்கள் ஏன் உங்களை நீங்களே 'கவிஞன்' என்று அழைத்துக் கொள்கிறீர்கள்? என்று தான் கேட்டேன் அவ்வளவுதான் பாலர் பாடம் படித்திருக்கிறீரா? இல்லை, நீர் பாலர் பாடமாவது படித்திருக்கிறீரா, என்று அவர் என்மேல் பாய ஆரம்பித்து விட்டார். ''அதில் என்ன தெரிய வேண்டும் உங்களுக்கு? தெரியாவிட்டால் கேளுங்கள் சொல்கிறேன் என்றேன் அடக்க ஒடுக்கமாக, ''நன்று, நவிலும் 'அ' என்ற எழுத்துக்குக் கீழே என்ன போட்டிருக்கிறது?

'அணில் படம் போட்டிருக்கிறது'

'அதற்குக் கீழே'

'அணில் என்று எழுத்தில் போட்டிருக்கிறது'

'நன்று 'ஆ' என்ற எழுத்துக்குக் கீழே என்ன போட்டிருக்கிறது?

'ஆட்டின் படம் போட்டிருக்கிறது'

'அதற்குக் கீழே?

'ஆடு என்று எழுத்தில் போட்டிருக்கிறது'

'அணிலையும் ஆட்டையும் அறியாதார் அவனியில் உண்டோ?'

'இல்லை'

'அங்ஙனம் இருந்தும் சித்திர விளக்கத்தோடு அதற்குரிய எழுத்து விளக்கமும் சேர்ந்து நிற்பது ஏற்றுக்கு?

எடுத்துக்காட்டும் பொருள் பள்ளிச் சிறுவர்கள் கண்ணில் பதிவதோடு எழுத்திலும் பதியவேண்டும் என்பதற்காக இருக்கணும் என்று என் சிற்றறிவுக்குப் படுகிறது'' அம் முறையைத்தான் யாமும் கையாண்டு வருகிறோம் எனவே பிறவிக் கவிஞரே என்று முகம் மலர அகம் குளிர எம்மை விளிப்பாரைக் கண்டிலோம், கண்டிலோம்

இவ்வாறு நகைச்சுவை ததும்ப நயமுடன் எழுதியுள்ளார் விந்தன்

### விந்தன் காட்டும் சிறுகதை உலகம்

தமிழ்ச் சிறுகதை உலகில் விந்தன் காட்டும் காட்சியும் களமும் வித்தியாசமானவை ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே ஏழை எளிய பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி பரிவுடனும் வர்க்கப்பாசத்தோடும் சிறுகதைகள் எழதிய எழுத்தாளர்களில் முன்னணியில் நிற்பவர்.

மேல்தட்டு இடைநிலை மககள் மட்டுமே கதைக்குரியவராகப் பெரிதும் காதல் அல்லது குடும்பக் கசப்புணர்வுகள் கதைகளாயின ஆனால சிறுகதைகள் எழுதுவதற்கு விந்தன் வகுத்துக் கொண்ட இலக்கு உன்னதமானது; உயர்ந்த மனித நேயமிக்கது. ''இருப்பவனைப் பற்றி எழுதி அவனுடைய பணத்துக்கு உண்மை இரையாவதைவிட இல்லாதவனைப் பற்றி எழதி அவன அன்புக்கு உண்மை இரையாவதே மேல்!'' என்பதே அவரின் இலக்கு

'விந்தன்' மணிக்கொடி காலத்திலேயே கதைகள் எழுத ஆரம்பித்தார் ஆனால் அவர் இலக்கியத்தை இந்திர சபையின் ஊர்வசியாகக் காணவில்லை என்கிறார் எஸ் தோத்தாத்ரி ஆம், இந்த மண்ணில் பிறந்து மழையில் நனைந்து குளிரில் நடுங்கி உதிரம் உறைந்து போன மனிதர்களிடையே வாழ்வின் சிக்கல்களில் உண்மை இலக்கியத்தைக் கண்டார் அதனால்தான் அவர் எழுத்துகள் மக்கள் இலக்கியமாகப் பாராட்டப்படுகின்றன

விந்தன் கதைகளில் வரும் நிகழ்வுகள் பல நிசத்தன்மைக்கு மிகையானவை என்று கருதும் மேல்தட்டு வர்க்கத்தினர் விந்தன் காட்டும் உலகத்தைப் பற்றித் தெரியாதவர், புரியாதவர்கள் இதைத்தான் பேராசிரியர் கல்கி சொன்னார்

''பாடுபட்டு அறியாதவன் பாட்டாளியின் துயரத்தைப் பற்றியும், சேற்றில் இறங்கி அறியாதவன் குடியானவனின் கஷ்டத்தைப் பற்றியும் என்னதான் கண்ணீரில் பேனாவைத் தோய்த்துக் கொண்ட எழுதினாலும்; அந்தக் கதைகளில் மற்ற எல்லாச் சிறுகதை லட்சணங்களும் இருக்கலாம் உள்ளத்தை ஊடுருவித் தைக்கும் படியான இதயம் ஒன்றிய ஈடுபாடு இருப்பதில்லை!''

விந்தன் ஏழை எளிய மக்களிடையே பிறந்து வளர்ந்து பண்பட்டவர் அவருக்கு ஏழைகளின் கண்ணீரும் அதற்கான காரணமும் பிரச்னையும் தெரியும்.

அந்தப் பிரச்னையை ஒளிவு மறைவு இல்லாமல் உடைத்துச் சொல்கிறபோது படிப்பவர்களுக்குச் சங்கடமாகயிருக்கும் சான்றுக்கு சில காட்சிகள்

பசியால் துடித்து அழும் குழந்தைக்கு பால் கொடுக்க வழியின்றி 'அபின்' கொடுத்து வைத்துத் தூங்க வைக்கிறான் அது ஒரேயடியாகத் தூங்கி விடுகிறது இத்தகைய கொடுமைகளை யாதர்த்தங்களை விந்தன் கதைகளில் தான் காணமுடியும்.

சூரியன் உதிக்கும்முன் வேலைக்குப் போய் சூரியன் மறையும் வரை வேலை பார்த்தார் மாணிக்கம். இப்படி ஓராண்டு அல்ல இரண்டாண்டு அல்ல முப்பது ஆண்டுகள் முழுசாக, ஒருநாள் காலையில்

வீடு திரும்புகிறான் வயதாகிவிட்டது என்று அனுப்புகிறான். பலநாள் அப்பாவைக் காணத்துடித்துக் கொண்டு இருந்த குழந்தை, தாடி மீசையுடன் அப்பாவைக் கண்டவுடன் அலறி அழுதுகொண்டு "அம்மா! பூச்சாண்டி" என்று ஓடுகிறது. இத்தகைய முதலாளித்துவ சுயரூபத்தை விந்தன் கதைகளில்தான் காணமுடியும்

சோற்றுக்கு நாயுடன் போராடும் சோலையப்பனை சுதந்தரமாக வாழ விடப்படுகிறது ஆனால் சாதிப் பேய் விரட்டுகிறது. தற்கொலை செய்து கொள்ளும் அந்த 'ஒரே உரிமை' கூட அவனுக்கு இல்லையென்பதை விந்தன் கதைதான் சொல்லுகிறது.

கள்ளச் சாராயம் காய்ச்சும் தன் தந்தையைக் காட்டி கொடுக்கும் புஷ்பராஜ் "அவர் எனக்கு விரோதியில்லை!"

"பின்னே யாருக்கு தம்பி விரோதி!"

"சமுதாயத்துக்கு விரோதி"

"சொந்த அப்பாவைவிட சமுதாயம் பெரிதா?"

"அப்பாவைவிட அரசாங்கத்தைவிடப் பெரிசு!" இத்தகைய உரையாடலை விந்தன் கதையில்தான் காணமுடியும்

"மனைவியை அடகு வைத்து காலகண்டய்யரின் கடனை அடைத்துவிட்ட அரிசந்திரனைப் பின்பற்றி வியாபாரம் செய்த அம்மாயி கடைசியில் தன் முதலை இழந்து தெருவில் தேம்பி அழும் அம்மாயியைத் தேற்றுவார் யார்? இத்தகைய அம்மாயின் அழுகுரலை விந்தனின் கதைகளில்தான் கேட்க முடியும்.

"சந்தர்ப்பங்களை நோக்கி நான் காத்திருக்கமாட்டேன்; நானே வேண்டும்போது அவற்றைச் சிருஷ்டி செய்துக் கொள்வேன்" என்று வீராதி வீரன் நெப்போலியன் போல் முழக்கிடும் மாமியாரிடையே வாழும் மருமகள் பேசும் பேச்சை விந்தன் கதையில் கேட்க முடியும்

"மாடு இப்போது சினையாய்த்தான் இருக்கிறது நாளைக்குக் கிராமத்துக்குப் போகும் பெத்து பிழைத்தால் வீடு திரும்பும். இல்லையென்றால் வேறு மாடு வாங்கிக் கொள்வார்கள். நாளைக்கு நானும் தாய் வீட்டுக்கப் போகிறேன். பெத்து பிழைத்தால் வீடு திரும்புவேன் இல்லாவிட்டால் என்ன வேறு கல்யாணம் செய்து கொள்வார்

"இப்போதும் நீங்களே சொல்லுங்கள் நான் வாழ்வது மனிதத் தொழுவமா அல்லது மாட்டுத் தொழுவமா?"

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி எழுதுவதற்கு பலர் அஞ்சிய போது, விந்தன் "அய்யோ! பொய்யும் புரட்டும் இல்லாத லோ

அவர்கள் செத்தால் நானும் சாவேன்!'' என்று உறுதியோடு எழுதினார் இல்லாதவர்களே இல்லாதவர்களைப் பற்றி எழுதுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது விந்தன் எழுதினார்

''போலிகளைச் சுட்டெரிக்கும் புதுமைகளை, வாழ்க்கையை அலசி அலசிப் பரிசீலிக்கும் 'ரசாயனங்களை, சமுதாயத்தின் புற்றுநோய்களுக்கு 'மின்சார சிகிச்சை'யளிக்கும் புத்தம் புதுமுறைகளை குரூர வசீகரங்களைப் படம் பிடித்துக் காட்டி மனித உள்ளத்திலே எங்கோ ஒரு மூலையில் செய்வதறியாது ஏங்கிக் கொண்டிருக்கும் மனிதாபிமானத்தைத் தட்டி எழுப்பும் உணர்ச்சிமிக்க அன்றாட வாழ்வின் உயிரோவியங்களை, அந்த அபிமானத்துக்கு விரோதமாயிருந்த - இருந்து வருகின்ற 'மனித மிருக'ங்களின் மேல் வெறுப்பைக் கக்க உங்கள் நல்வாழ்க்கைக்கு வழி தேட முயலும் நவயுகக் கதைகளை இன்று போல் என்றும் வரவேற்று வாழ்த்தித் தமிழை வளப்படுத்த வேண்டும் தமிழ்நாட்டை மேம்படுத்த வேண்டும் இதுவே என் எண்ணம் ''

இதுவே விந்தன் கதைகள் பற்றி தெளிந்த தீர்மானமான முடிவு!

'இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தலே' எழுத்தாளர் கடமை என்று கருத்தை கருவாகக் கொண்டவர் அவர்.

# 3
# நாவல்கள்

## கண் திறக்குமா?

விந்தன் ஆறு நாவல்களை முழுமையாக எழுதியுள்ளார். மனிதன் இதழில் வெளிவந்த தெருவிளக்கு முற்றுப்பெறவில்லை. ‘வாழ்க்கை ஒரு விளையாட்டு’ என்று கல்கியில் எழுதவிருந்த தொடர் எழுதவில்லை மோகத்தைக் கொன்றுவிடு என்று ‘உலகம்’ பத்திரிகையில் வெளி வந்த விளம்பரத்தோடு சரி.

விந்தன் நாவல்கள் எண்ணிக்கையில் சிறியதாக இருந்த போதிலும், அந்த நாவல்கள் எத்தனை விதமான எழுச்சிகளை, எண்ணக் கிளர்ச்சிகளை உண்டாக்கியுள்ளன என்பதெல்லாம் இலக்கிய உலகம் நன்கு அறிந்த செய்தியாகும்.

சுதந்திரத்திற்குப் பின்னால் இந்தத் தேசத்தில் குறிப்பாகத் தமிழகத்தில் கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் பெருத்த மாறுதல்களும் மகத்தான சாதனைகளும் ஏற்பட்டு இருப்பதாக மக்களிடையே ஒரு மயக்கம் பரவலாக இருப்பதை நாம் அறிவோம் ஆனால், அந்த மயக்கமும், அதை வரவேற்கின்ற போக்கும் விந்தன் நாவல்களில் சிறிதும் காணப்படாதது. மேலும் மேலும் அவர் எழுத்துகளை ஆய்வதற்குத் தூண்டுகிறது

இலக்கியத் துறையில், நடப்பியல் முறையில் நோக்கும் முற்போக்குச் சிந்தனைப்போக்கும் கொண்டிருந்த விந்தன் இச் சமூகத்தில் சகல துறைகளிலும் மாறுதல்களும், மறுமலர்ச்சிகளும் வர வேண்டும்; வளரவேண்டும் என்று மெய்யாக நம்பியவர் அதே நேரத்தில் ஏற்படுகின்ற மாறுதல்களும், எழுகின்ற சிந்தனைகளும் ஏழை எளிய உழைக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கு எதிரியாக இல்லாமல், அவர்கள் சுரண்டப்படாமல் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ வழிகாட்டவேண்டும் என்று எண்ணியவர்

பொதுவாக விந்தன் மாறுதல்கள், மறுமலர்ச்சிகள் என்றால் எளிதில் மயங்காதவர், எதையும் பிற்போக்கு என்று புறக்கணித்து, முற்போக்கு என்றும் முத்திரை குத்தி மூடி மறைக்காதவர்

இத்தகைய நோக்கும் போக்கும் விந்தனுக்குத் தொடக்க காலத்திலிருந்தே அவர் மனத்தில் அழுத்தமாக இருந்ததனால்தான் சுதந்திரத்திற்கப் பின்னால் நாட்டில் ஏற்பட்ட மாறுதல்களும், புதுமலர்ச்சிகளும் விந்தனுக்கு மயக்கத்தையோ, மருட்சியையோ தராமல் மறு சிந்தனையை எரிமலைபோல் உண்டாக்கின.

சிறுகதைகளில் பலரின் முகமூடியை கலைத்து வீதியல் நிறுத்திக் குற்றவாளிகளாக அறிமுகப்படுத்திய விந்தன், முதன் முதலில் நாவல் எழுத முனைந்தபோது 'நக்கீர'னாக மாறிப் பேராசிரியர் 'கல்கி'யின் முன்னால் குற்றவாளியாக நின்றார் என்பதெல்லாம் வேதனைக்குரிய நிகழ்ச்சியே!

எந்தவிதமான அரசியலுக்கும் அப்பாற்பட்ட இலக்கியவாதியான விந்தன், ஒரு பேரியக்கத்தின் பெயரால் நடைபெற்ற மோசடிகளைக் காணப் பொறுக்காமல் அந்தப் பேரியக்கத்திற்குப் பெருமை தேடும் வகையில் தவறுகளைச் சுட்டிக்காட்ட அரசியல் தொடர்பான நாவலை எழுதத் துணிந்தார்.

'கண் திறக்குமா?' என்னும் இந் நாவலை அக் காலத்தில் காங்கிரசு சார்பு பத்திரிகையாக இருந்த 'கல்கி' இதழில் எழுதத் தயங்கிச் சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்பும் பணியில் தீவிரமாக ஈடுபட்ட 'பொன்னி' இதழில் 'நக்கீரன்' என்றும் பெயரில் எழுதினார்.

இந்த இதழின் ஆசிரியராக இருந்த காலஞ்சென்ற முருகு சுப்பிரமணியம் அவர்களே விந்தனின் புதுச் சிந்தனையைக் கை நீட்டி வரவேற்ற முதல் புதுமலர்ச்சி பத்திரிகையாளர் ஆவார். இவருக்கு நன்றி உணர்வுடன் 'கண் திறக்குமா?' நாவல் நூலாக வெளிவந்தபோது காணிக்கை ஆக்கியுள்ளார் விந்தன்.

**கதைச் சுருக்கம்**

''தவறுகளை வெளியே நிறுத்திக் கதவைத் தாளிடுவாயானால், உண்மையும் வெளியே நின்றுவிடும்!'' என்னும் மகாகவி தாகூரின் மணிவாசகத்தோடு தொடங்குகிறது இந்நாவல்.

தேசத்தின் விடுதலைக்காக நடைபெற்றப் போராட்டத்தில் கலந்துகொண்டு தடியடி பட்டு இரத்தம் சிந்தி சிறை புகுந்து, தாய் தங்கையைப் பிரிந்து நம்மிடம் இருந்ததையெல்லாம் இழந்து அனாதையாக நிற்கும் செல்வம், போலியான அரசியலும் பொய்யான தத்துவங்களும் நாட்டில் வரவேற்கப்படுவதைக் கண்டு வேதனையுற்றுக் கடைசியில் பொய்யெல்லாம் மெய்யென்றும், போலியெல்லாம் அசல் என்றும் நம்பி அதற்குத் தம்மையே ஈடுபடுத்திக்கொள்ளும் அவலம் ஒரு பக்கம்.

நாட்டில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்களைக் ‘கலகங்கள்’ என்றும், காத்தியைக் ‘கலகக்காரன்!’ என்றும் பச்சையாகப் பேசிவரும் பாரிஸ்டர் பரந்தாமனார் ஒரு நாள் திடீரென்று ‘தியாகி’யாக அவதாரம் எடுத்து, ‘விக்டோரியா பவன’மாக இருந்த தம் இல்லத்தைக் ‘காந்தி பவன’மாக மாற்றிக் காந்தி பக்தர்களை யெல்லாம் தம் முன் வாய்பொத்திக் கைகட்டி நிற்கும்படிச் செய்யும் அற்புதம் மற்றொரு பக்கம்

ஏழை எளிய பெண்களின் கற்பைச் சூறையாடிய கயவன் சிவகுமார் ஒருநாள் வீராங்கனை ஒருத்தியால் கொலை செய்யப்பட்ட போதிலும், சிவகுமார் இந்தத் தேசத்தின் விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்தான் என்று போகுமிடமெல்லாம் பொறி பறக்கப் பேசி, செத்தவனுக்குச் சிலை வைத்துத் தன் மகனைத் ‘தியாகி’யாக்கிய தியாகச் செம்மல், குணத்தாலும் கொள்கையாலும் ஒன்றுபட்ட பாரிஸ்டர் பரந்தாமனாரின் நண்பர் குற்றாலலிங்கத்தின் ‘அறப்போர்கள்’ பிறிதொரு பக்கம்!

இத்தகைய போக்குகளுடன் ஒத்துப்போக முடியாமலும், ஒதுங்கி நிற்க முடியாமலும், உறவுகளால் பிணைக்கப்பட்ட பாரிஸ்டர் பரந்தாமனாரின் ஒரே மகள், மருத்துவக் கல்லூரி மாணவியான சாந்தினி, தன் தந்தையிடம் பயிற்சிபெறும் செல்வத்தை, போராட்ட உணர்வுமிக்க காந்தியவாதியான இளைஞனை, விரும்புகிறாள். அதன் பொருட்டே அவன் போராட்டத்தில் ஈடுபட்டுத் தடியடிபட்டு இரத்தம் சிந்தி மருத்துவமனையில் துடித்துக் கொண்டிருந்தபோது, அவனைக் கண்டு அனுதாபப்படுகிறாள். அதோடு அவன் சகோதரி சித்ராவுக்குத் துணையாகவும் இருக்கிறாள். இறுதியில்... இவளும் பாரிஸ்டர் பரந்தாமனாரின் கோஷ்டியில் சேர்ந்து விடுகிறாள் - நரிக்கு நரிதான் பிறக்கும் என்று நம்பும்படியாக!

இந்த நரிக்கூட்டத்தில் நல்லமணம் படைத்த இளைஞர்களான பாலுவும், கண்ணனும் புரட்சிச் சிந்தனையுடையவர்கள். பிராமண சமூகத்தில் பிறந்த பாலு பூணூலை அறுத்தெறிகிறான்; தன் தந்தையின் காதலியான கீழ்சாதிப் பெண்ணைச் சிற்றன்னையாகவும் ஏற்றுக் கொள்கிறான். அத்துடன் தங்கை செங்கமலத்தை ஏமாற்றிய சிவகுமாரனைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருப்பவனுக்கு, முடிவு வேறு விதமாக மாறுகிறபோது சித்தம் கலங்கித் திரிகிறான்.

சிவகுமாரனின் லீலைகளுக்குப் பயந்து ஓடிவரும் சித்ராவைக் கதராடை அணிந்த கண்ணன் ஆதரிக்கிறான். எனினும் கண்ணனின் கதராடை சித்ராவுக்கு அச்சத்தை உண்டாக்குகிறது. இறுதியில் உண்மைக்கும் தியாகத்துக்கும் பெயர் பெற்ற கதரைப் போலவே கண்ணனையும் நம்பித் திருமணம் செய்து கொள்கிறாள்.

சிவகுமாரனின் ஆசைக்கு இரையாகிக் கையில் குழந்தையுடன் ஆதரவற்று நிற்கும் செங்கமலம், அவனை நிறைவாகவே நினைக்கிறாள்; நெஞ்சத்தில் வைத்துப் போற்றுகிறாள் ஒரு நாள் சிவகுமாரனை ஒருத்தி கொலை செய்து விட்டாள் என்ற செய்தியைக் கேட்டு மறுகணமே செங்கமலம் தற்கொலை செய்து கொள்கிறாள்.

இவ்வாறு காந்தியின் பேரால், பணத்தின் பேரால், சாதியின் பேரால் நடைபெறும் கொடுமைகளை - மோசடிகளைக் கண்டும் காணாமல் கண்மூடிக் கிடக்கும் சமூகமே! 'உன் கண் திறக்குமா?' என்று கேட்கிறது இந் நாவல்!

## திறனாய்வு

''எதை எழுதினாலும் அதில் உயிர் இருக்க வேண்டும்; உணர்ச்சி இருக்க வேண்டும் என்பது, நான் எழுத ஆரம்பித்தபோதே எடுத்துக் கொண்ட பிரதிக்ஞை. இவையிரண்டும் இல்லாமல் எழுதுவதில்தான் என்ன பயன்? படிப்பதில் தான் என்ன பயன்?''

'நாவல் பிறக்கிறது' என்னும் கட்டுரையில் இவ்வாறு கேள்வி எழுப்பும் விந்தன், தம் முதல் நாவலான இக்கதையை மிகவும் உணர்ச்சியோடும் உயிர்த் துடிப்போடும் எழுதியுள்ளார்.

பொதுவாக இத்தகைய நாவல்களைப் படைக்க முனைகின்ற படைப்பாளிகள் ஏதேனும் ஓர் அரசியல் இயக்கத்தோடு சார்ந்து நின்று, தம் எதிர்ப்பு உணர்ச்சிகளை எழுதிக் குவித்து, வாசகனைத் தம் இயக்கத்திற்குத் தோழனாகவும் தொண்டனாகவும் வேஷம் போடும்படி தூண்டுவார்கள். ஆனால், இந் நாவலாசிரியரோ அரசியலுக்கு அப்பாற்பட்ட பொதுநோக்குடைய முற்போக்குவாதி; தேசத்தில் எல்லோரும் சமத்துவமாகவும், சகோதரத்துவமாகவும் வாழவேண்டு மென்று மெய்யாக நம்பிய மனிதாபிமானி; பாதிப்புகளைக் கண்டு அஞ்சாத படைப்பாளி!

இத்தகையச் சார்புகளோடு இந்நாவல் எழுதப்பட்ட போதிலும் வெளிவந்த காலமும், வெளியிட்ட பத்திரிகையின் போக்கும் விந்தன் ஓர் அரசியல் சார்புடைய எழுத்தாளர் என்கிற எண்ணத்தை மக்கள் மத்தியில் பரப்பின

இந்நாவல் வெளிவந்த 1948-49-ஆம் ஆண்டு தமிழ்நாட்டு அரசியலில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலம். ஒரு பக்கத்தில் பொதுவுடைமை இயக்கம், முதல் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் ஆட்சியை எதிர்த்துப் போராட்டங்களைத் தொடங்கிபோது, அந்த இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்களையும், தொண்டர்களையும் பலவகையில் துன்புறுத்திச் சொத்துகளைச் சூறையாடி, இந்தத் தேசத்தின்

விடுதலைக்காகப் போராடிய தலைவர்களையெல்லாம் சிறையில் அடைத்துக் கதர் கட்டிய காங்கிரஸ்காரர்களே - உண்மை ஒன்று இருக்கப் பொய் பலவாறு பேசிய போலி அரசியல்வாதிகளே 'தியாகிகள்' என்று மக்கள் நம்பிய காலமது!

மற்றொரு பக்கத்தில் பெரியார் ஈ.வே.ரா.வின் திராவிடர் கழகம் பிளவு பட்டு, அண்ணாவின் திராவிட முன்னேற்றக் கழகம் உருவாகி, 'வெள்ளையரின் ஏகாதிபத்தியம் ஒழிக!' 'எல்லோரும் இந்தியர்களே!' 'இந் நாட்டு மன்னர்களே!' என்கிற முழக்கங்களைக் கேட்டுக் கேட்டு விரைத்துப்போன தமிழர்களின் செவியில், 'வடஇந்திய ஏகாதிபத்தியம் ஒழிக!' 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது!' என்பன போன்ற தீந்தமிழ் வாசகங்கள் தமிழர்களின் செவியில் தென்றலாய்ப புகுந்து, தேனாக நெஞ்சில் இனித்துத் தமிழகத்தின் பட்டிதொட்டிகள் முதல் பட்டணங்கள் வரையில் புயல் போல் பரவி தி.மு.க.வின் முழக்கங்களும், கொள்கைப் பிரகடனுங்களுமே காங்கிரசுக்குச் சரியான எதிர்ப்பு என்னும் மயக்கம் மக்கள் மத்தியில் மேலோங்கியபோது, காங்கிரசின் முதலாளித்துவப் போக்குகளும், ஏழை எளியவர்களை அடக்கி ஒடுக்கி என்றும் அவர்களை இல்லாதவர்களாக்கிய தொழிலாளர் விரோத நடவடிக்கையும் மூடிமறைக்கப்பட்டு எங்கும் பகுத்தறிவுக் கொள்கையும் பழந்தமிழ்ப் பற்றும் வேகமாகப பரவிச கொண்டிருந்த காலமது.

இருள் சூழ்ந்த இக்காலத்தில் தான் வெள்ளி முளைப்புப் போல் விந்தன் நாவல் வெளிவந்தது. வெளியிட்ட பத்திரிகையான 'பொன்னி' இதழ் சிறந்த தமிழ்ப் பத்திரிகையாக விளங்கிய போதிலும், அதனோடு தொடர்பு கொண்டவர்கள், கருத்து வழங்கியவர்கள் தி.மு.க சார்ந்த எழுத்தாளர்களாக இருந்ததாலும், கதையின் கருத்துகள் காங்கிரஸ் இயக்கத்திற்கு எதிர்ப்பாக உண்மையாக இருந்ததாலும், விந்தன் ஒரு தி.மு.க. சார்பு எழுத்தாளராகக் கருதப்பட்டார் அதே போன்று கதையில் சொல்லப்பட்ட பல கருத்துகள் மனிதாபிமானத்தோடு மாறுதல்களைப் படைக்கும் நோக்கத்தோடும் சொல்லப்பட்டிருப்பதால் விந்தன் ஒரு கம்யூனிஸ்ட் என்று நம்பப்பட்டார்.

இவ்வாறு ஒவ்வொருவரின் போக்கிற்கும், நோக்கிற்கும் ஏற்பவும், இசைவாகவும் இலக்கியம் படைத்து 'எல்லோருக்கும் நல்லவ'ராக வாழவும், 'நண்பனாக' நடிக்கவும் விந்தன் தம் எழுத்தைப் பயன்படுத்தினாரா என்று எண்ணிப் பார்ப்பதைவிட, எல்லோரும் அவர் எழுத்தைப் படித்தபோது, படித்தபின் சிந்தித்தபோது, சிந்தித்தபின் இச்சமூகத்தை நோக்கியபோது, கதையும், காட்சியும், கருத்தும் களமும் அவர்கள் கண்ட காட்சியாகவும், கொண்ட கருத்தாகவும் இருந்ததால் அதனோடு கலந்து, அதுவே அவர்களுக்குரியது என்று நம்பி அதன்பால்

உறவும் உரிமையும் கொண்டாடி, பாசமும் பரிவும் கொண்டுப் பாராட்டினார்கள்.

### பாலும் பாவையும்

1950-இல் 'கல்கி' இதழில் தொடராக வெளிவந்த இந்நாவல் விந்தனுக்குப் பலவிதமானப் பாராட்டுதல்களையும், பாதிப்புகளையும் உண்டாக்கி இலக்கிய உலகில் பெரியதோர் பரபரப்பை ஏற்படுத்தியது.

சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால், வள்ளுவருக்கு ஒரு திருக்குறள், கம்பனுக்கு ஓர் இராமாயணம், இளங்கோவடிகளுக்கு ஒரு சிலப்பதிகாரம், பாரதிக்கு ஒரு பாஞ்சாலி சபதம், பாரதிதாசனுக்கு ஒரு குடும்பவிளக்கு என்று சிறப்படைந்ததுபோல், விந்தனின் எழுத்தாற்றலை எக்காலத்திலும் எடுத்துச் சொல்லக் கூடிய நாவல் 'பாலும் பாவையும்' என்பதே தமிழ் முற்போக்கு இலக்கிய உலகின் ஒட்டு மொத்தமான கருத்தாகும்.

விந்தனுக்கு இவ்வளவு சிறப்புகளைச் சேர்ந்த இந் நாவல், அவருக்கு எத்தகைய பாதிப்புகளைப் பலவீனங்களை ஏற்படுத்தியது என்பதையும் இந்தத் தருணத்தில் கவனிக்கத் தக்கது.

'பாலும் பாவையும்' தொடர்கதை 'கல்கி'யில் தொடராக வெளி வந்தபோது, 'பிறர் எழுத்தை நான் படிப்பதேயில்லை!' என்று கர்வத்தோடு சொல்லிக் கொண்டிருந்த எழுத்தாளர்கள் பலரைப் பலமுறை படிக்க வைத்துச் 'சொல் புதிது, சுவை புதிது,' என்று சொல்ல வைத்த நாவல்.

இந் நாவலைப் படித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் கலைஞர் கருணாநிதி அவர்கள். அவர்தான் இந் நாவலில் வரும் ''ஓடினாள்... ஓடினாள்... ஓடிகொண்டேயிருந்தாள்...'' என்ற வசனத்தை 'பராசக்தி' படத்தில் பயன்படுத்திக் கொண்டார்.

'எந்தப் புத்தகம் ஆக்கியோனின் இரத்தத்தால் ஆக்கப்பட்டிருக் கிறதோ அந்தப் புத்தகமே எனக்கு விருப்பமானது' என்றார் ஜெர்மன் தத்துவ ஞானி நீட்சே!'

'ஆம் ஜெர்மன் அறிஞன் சொன்னதுபோல் பாலும் பாவையும் விந்தனது இரத்தத்தால் ஆன நூல்தான்!' (கலைப்பித்தன், ஆனந்தவிகடன் 1961)

'பாலும் பாவையும்' என்ற (தொடர் கதையாக வெளி வந்த) நாவலை பற்றிய குறிப்பு எதனையும் சிட்டி - சிவபாதசுந்தரம் எழுதிய 'தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்' எனும் நூலில் காண முடியவில்லை.

உயர்கல்வி மட்டங்களில் நடைபெறும் சிற்சில ஆராய்ச்சிகளிற் காணப்படும் - செல்வாக்குகளுக்கு ஆட்படாத ஒரு விமர்சன நூல் என்ற வகையில் இந்த நூலின் ஆசிரியர்களின் கவனத்தைப் 'பாலும் பாவையும்' ஈர்க்க ஏன் தவறியது என்பது ஒரு முக்கியமான வினாவாகும்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி காலத்திலும் அவருக்குப் பிந்திய காலத்திலும் ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் எழுதிய பல்வேறு ஜனரஞ்சக எழுத்தாளர்கள் பத்தோடு பதினொன்றாக எண்ணப்படும் அளவுக்கு மாத்திரமே இலக்கிய மதிப்பு உள்ள ஆசிரியரா விந்தன்? என்னும் வினா தவிர்க்க முடியாதபடி எழுகின்றது.

விந்தனுக்கு நிலைத்தப் புகழைத்தேடிக் கொடுத்ததே 'பாலும் பாவையும்' தான் என்று கூறப்படுவதுண்டு. கல்கியில் தொடர் கதையாக வெளிவந்து பின் நூலாக வெளிவந்த இந் நாவல் 1968 ஜுலைக்கு முன் ஒன்பது பதிப்புகள் பெற்றிருந்தது. 1969-க்கு முன்னரே கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது.

தமிழ் நாவலின் நூற்றாண்டு வளர்ச்சியில் முக்கியமானவர்கள் என்று தாம் கருதிய இலக்கிய ஆர்வலர்களுக்கு அதுவரை தெரியாதிருந்த பலரை எடுத்துக் கூறிய சிடடி, சிவபாதசுந்தரம் ஆகிய இருவரும் விந்தனை, அதுவும் அவர்கள் மிகவும் போற்றும் கல்கியால் சிறப்பாகப் பாராட்டப் பெற்றவர், காட்டாமல் மறைப்பது என்பது சுவாரசியமான ஒரு வினாவாகும். (தற்கால தமிழ் இலக்கியத்தில் விந்தன் பெறும் இடம் விந்தனும் விமர்சனமும் 1982)

எழுத்தாளர் அகிலன் சொன்னார் 'பாலும் பாவையும்' என்ற நாவலின் வாயிலாகத் தமிழ் வாசகர் உலகையே வியப்புறச் செய்து 'யார் இந்த விந்தன்?' என்று கேட்க வைத்த நாவல் அது. கதையின் கருப்பொருள், எழுத்து, நடை, உருவம் எல்லாவற்றிலும் ஒரு புதுமை தெரிந்தது. அந்த நாவலின் இலக்கியப் படைப்புக்கு வேண்டிய உயிர்த் துடிப்புகள் காணப்பட்டன!'' (விந்தனும் விமர்சனமும், 64-65)

இவரைப் போலவே வல்லிக்கண்ணன் எழுதுகிறார்; ''இந்தக் கதையை விந்தன் வளர்த்திருக்கிற விதம் புதுமையானது; கதை மாந்தரை அறிமுகப்படுத்துகிற வகை புதுமையானது, அவர்களைப் பழக விட்டு, உரையாட வைக்கிற போக்கு ரசமானது, சுவையானது. இடை இடையே அவர் சுட்டிக் காட்டுகிற உண்மைகள் சிந்தனைக்கு உணவு அங்கங்கே அவர் பொறித்துள்ள சிந்தனை மணிகள், அறிவின் அனுபவத்தின் ஒளிச்சுடர்கள்'' (விந்தனும் விமர்சனமும் 46-47) இவ்வாறு பலரும் புகழ்ந்தனர். தமிழ்ப்புதின உலகில் இருந்திருப்பதைத் தெரிந்தனர்.

இவர்களைப் போலவே திரைப்படத் துறையைச் சேர்ந்த சிலர் 'இந் நாவல் புரட்சிகரமான கருத்துடைய புதுமையான நாவல்' என்று பாராட்டியதோடு விந்தனையும் சினிமா உலகிற்கும் அழைத்துப் போனார்கள். சினிமாவில் விந்தனுக்குப் புகழோடு பணமும் கிடைத்தது. அந்தப் பணமும், அவருக்கு ஒரு முதலாளித்துவ மனநிலையை உண்டாக்காமல் பரந்து பட்ட இந்தச் சமூகத்தைப் பார்க்கவும், புதிய புதிய அனுபவங்களைப் பெறவும் வாய்ப்பளித்தது. தன் எழுத்தின் வன்மையையும் திண்மையும் அவர் உணர்ந்தார்.

ஆம், அந்தப் பணம் 'மனிதன்' என்னும் பத்திரிகையைச் சொந்தமாக நடத்துவதற்கும், அவ்வாறு நடத்தியதின் மூலம் தொல்லை களைத் தோல்விகளை அனுபவிப்பதற்கும் தூண்டுதலாக இருந்தது!

இதன் பிறகு விந்தனுக்கு இலக்கியம் பிறக்கவில்லை; பெரு மூச்சுத்தான் பிறந்தது!

விந்தனை இத்தகைய சோதனைகளுக்கு ஆளாக்கிய 'பாலும் பாவையும்' கதையின் தோற்றமே ஒரு சோகக்கதையாகும். அதை ஆசிரியரே கூறுகிறார்:

''ஒருநாள் அமரர் கல்கி அவர்கள் என்னைத் தம் வீட்டுக்கு வருமாறு பணித்தார்கள்; சென்றேன், கையில் திறந்த பத்திரிகை யொன்றை வைத்துக் கொண்டு ஏதோ யோசித்த வண்ணம் அப்படியும் இப்படியுமாகத் தம் அறையில் அவர்கள் நடைபோட்டுக் கொண்டிருந்தார்கள்

''அழைத்தீர்களாமே?'' என்றேன்.

''கல்கி காரியாலயத்தில் வேலை பார்க்கும் நீங்கள் வேறெந்தப் பத்திரிகைக்கும் கதையோ, கட்டுரையோ எழுதக் கூடாது என்ற விஷயம் உங்களுக்குத் தெரியாதா?'' என்று தமக்கே உரித்தான கம்பீரத்துடன் அவர்கள் கேட்டார்கள்.

''தெரியும்!'' என்றேன் நான்.

''சரி இந்தப் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் தொடர் கதை யாருடைய தொடர்கதை?''

''தெரியாது!''

''உங்களுடைய தொடர்கதை என்று பலர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்களே, அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?''

''அவர்கள் ஒரு வேளை என்னுடைய விரோதிகளாயிருக்கலாம்''

இல்லை; உங்களுடைய அபிமானிகள்தாம் அப்படி எழுதியிருக் கிறார்கள். அத்துடன் 'கல்கி'யில் ஏன் அவர் தொடர் கதை எழுதக் கூடாது என்றும் கேட்டிருக்கிறார்கள்''

''அவர்கள் நாசமாய்ப் போகட்டும்!'' என்று மனத்துக்குள் சபித்துக் கொண்டே நான் பலிபீடத்தில் நிற்கும் ஆடுபோல் நின்றேன்

''அதற்குப் பின் ஆசிரியர் அவர்கள் என்ன நினைத்தார்களோ, என்னமோ சரி, ''போய் வாருங்கள்!'' என்று என்னை அனுப்பி விட்டார். வீட்டுக்கல்ல; காரியாலயத்துக்குத்தான். அதன் விளைவே 'கல்கி'யில் தொடராக வெளியாகி, உங்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த 'பாலும் பாவையும்' ஆகும்.''

இக் கதை தொடராக வெளிவந்த போதே பிரபல நாடகக் கலைஞர்களான டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகமாகத் தயாரிக்க முனைந்து, பின்னால் அந்த முயற்சியைக் கைவிட்டனர். ஏனெனில், அக்காலத்தில் எழுத்தாளர்களுக்கு டி.கே.எஸ். சகோதரர்கள் அளித்த மதிப்பும் மரியாதையும் பெரியதாக இருந்த போதிலும், பண விஷயத்தில் அவர்கள் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் அதை விடவும் பெரியதாக இருந்ததனால், விந்தனுக்கு அவர்களோடு ஒத்துப்போக முடியவில்லை; அதனால் நாடகமும் அரங்கேறவில்லை.

அதே காலத்தில் ஏ.வி. மெய்யப்ப செட்டியார் இக் கதையைத் திரைப்படமாக்கத் திட்டமிட்டு 'கல்கி' பத்திரிகையிலிருந்து விந்தனை விலகச் செய்து, சிவாஜி கணேசன் - பத்மினியை வைதது்ச் சில காட்சிகளைப் படமாக்கிய போது, ஏவி.எம். நிறுவனத்தாரின் சினிமாத் தனங்கள் விந்தனின் சுயமரியாதைக்கும், சுயசிந்தனைக்கும் பாதிக்கும்படியாக இருந்ததனால் அந்த முயற்சியும் கைவிடப்பட்டது!

இந்த நிகழ்ச்சிகள் நடந்து பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, என்னுடைய சுய முயற்சியினால் 15.07.1964 அன்று டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் இராஜா அண்ணாமலை மன்றத்தில் பாலும் பாவையும் நாடகமாக அரங்கேறியது.

பின்னர் 1967-இல் அகில இந்திய வானொலியில் அனைத்து மொழிகளிலும் ஒரு மணி நேரம் ஒலிபரப்பப்பட்டது. மேலும், கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் நூலாக வெளி வந்துள்ளது. 'இராணி முத்து' மாத இதழ் ஓர் இலட்சம் பிரதியும், பல பதிப்பகங்கள் சார்பில் இருபது பதிப்புகளும் வெளிவந்து விந்தன் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றது.

அதோ! நமக்காகப் 'பாலும் பாவையும்' காத்திருக்கிறது. நேரத்தோடு சுவைப்போம்; நிசங்களையே பேசுவோம்.

**கதைச் சுருக்கம்**

தருமமிகு சென்னை - கந்தகோட்டத்தில் புத்தகக் கடை ஒன்றில் வேலை பார்த்து வந்த கனகலிங்கம், புத்தக விற்பனைக்காகக்

கலைஞானபுரத்தில் நடைபெற விருக்கும் அகஸ்தியர் விழாவிற்குச் சில புத்தகங்களுடன் போகிறான்

கலைஞானபுரத்தில் விடுதி ஒன்றில் தங்க நேர்ந்தபோது, இந்திரன் என்பவனால் காதலித்துக் கைவிடப்பட்ட அகல்யா என்கிற பெணணைச் சந்திக்கிறான், அவள் கதையைக் கேட்டு அனுதாப்படுகிறான்

அந்த அனுதாபத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட அந்தப் பெண், ''அந்தக் காதகன் '' கடவுள் உன்னைக் காப்பாற்றட்டும்!' என்று கடவுளை எனக்குத் துணையாக்கி விட்டுக் கம்பி நீட்டி விட்டான்

''நீங்கள்தான் நான் கண்ட முதல் கடவுள்! இனி நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று வெறும் பேச்சோடு நில்லாமல், ஒவ்வொரு நிமிசமும் குழைந்து குழைந்து பேசி, குமுறிக் குமுறி அழுது, வெடிக்க வெடிக்கத் தன் வேதனைகளைக் கொட்டி அவன் இதயத்தில் இடம் பெற முயல்கிறாள்

'எதற்கும் காசு வேண்டுமே!' என்ற உண்மையைத் தெரிந்து வைத்திருந்த கனகலிங்கம், தன் நிலைமைகளை உடைத்துச் சொல்லியும், யதார்த்த வாழ்க்கையை எடுத்து எடுத்துக் கூறியும் அவள் சமாதானம் அடையாததால், ''நான் உன்னைக் காதலிக்காமல் கொல்வதைவிடக் காதலித்தே கொன்று விடுகிறேன்!'' என்னும் முடிவோடு அவளைச் சென்னைக்கு அழைத்து வருகிறான்

சென்னை எழும்பூர் இரயில் நிலையத்தில் கனகலிங்கமும், அகல்யாவும் ரயிலை விட்டு இறங்கும்போது, யாரையோ வரவேற்க வந்திருந்த அவன் முதலாளி பரமசிவம் அவனைக் கண்டதும் 'வா, வா!' என்றவர் உடன் வந்த அகல்யாவைக் கண்டதும் கண் சிவக்க வாய்மூடி நிற்கிறார். அடுத்த கணமே கனகலிங்கத்தின் கணக்கைத் தீர்த்து அவன் சீட்டைக் கிழித்து விடுகிறார்.

விவரம் புரியாமல் கனகலிங்கம் விழித்தபோது, ''உங்கள் முதலாளிதான் என் சித்தப்பா!'' என்ற விவரத்தைச் சொல்லி அகல்யா அவனுக்காக அனுதாபப்படுகிறாள்

கனகலிங்கம் தனக்கு வேலை தேடும் முயற்சியோடு அகல்யாவைச் 'சேவாசனத்'தில் சேர்த்து விடவும் முயல்கிறான் இந் நிலையில் அகல்யா தன் சிநேகிதி வீட்டிற்குப் போகிறாள்

தம் மனத்துக்குப் பிடித்தமான வேலையைத் தேடிக் கனகலிங்கம் அலைந்து கொண்டிருந்தபோது, கார் ஒன்று அவன் மேல் மோதி அவன் உயிரைக் குடித்து விடுகிறது!

''என்னைக் கடவுள் கைவிட்டாலும், கனகலிங்கம் கைவிட மாட்டார்!'' என்னும் நம்பிக்கையோடு இருநத அகல்யா,

கனகலிங்கத்தின் முடிவைக் கேட்டுக கதறுகிறாள், துடிககிறாள் சித்தம் கலங்கியவள் போல் எங்குப் போகிறோம என்று புரியாமல போய்க் கொண்டிருநதாள்

வழியில் சித்தப்பாவின் வீட்டை நெருங்கியபோது ஏதோ பாசத்தால் உந்தப்பட்டவள் உணர்வு பெற்றுச் சாளரத்தின் வழியே நோக்குகிறாள் அங்கே

அகல்யாவின் அப்பாவும், சித்தப்பாவும் பேசிக் கொண்டிருப்பதை ஒட்டுக் கேட்கிறாள் கனகலிங்கம்தான் அகல்யாவைக் கடத்திக் கொண்டு போனான் என்று ஆத்திரப்பட்ட முதலாளி பரமசிவம், ஆயிரம் ரூபாய் செலவழித்து ஒரு காரோட்டியின் துணையுடன் கனகலிங்கத்தின் வாழ்க்கையை முடித்துவிட்டதாக ஆறுதல் அடைந்தபோது, ''நம்ம அகல்யாவோடு ஓடிப்போனவன் இந்திரன் அல்லவா?'' என்று அவளின் அப்பா சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அகல்யா, 'அடப் பாவிகளா!' என்றவாறு நடக்க முடியாமல் நடக்கிறாள்

வழியில் தசரதகுமாரனைச் சந்திக்கிறாள் அவன், 'யார் உன்னைக் கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிடமாட்டேன்!' என வாக்களித்த போது அவனைப் பின் தொடர்கிறாள்

தசரதகுமாரன் வீட்டை அடைந்தபோது, ''சார்! ரொம்ப நேரம் கழித்து வந்திருக்கிறீர்களே! - பால் கெட்டுப் போய் விட்டதே!'' என்று சமையற்காரன் சொன்னதைப் பெரிய தத்துவமாக நம்பியவன் சிறிதும் தாமதிக்காமல் அகல்யாவை வெளியே தள்ளிக் கதவைச் சாத்துகிறான்!

அடுத்த கணம் .. இந்த மனிதர்களைவிட இந்தச் சமூகத்தைவிட ஆயிரமாயிரம் பங்கு பெரியதும் பரந்து விரிந்ததுமான கடல், யார் கைவிட்டாலும் அது தன்னைக் கைவிடாது; யார் கதவைச் சாத்தினாலும் அது கதவைச் சாத்தாது என்கிற எண்ணம் அகல்யாவிற்குப் பளிச்சிடவே அவள் கடலை நோக்கி ஓடுகிறாள்

கடல், 'கெட்டுப் போனவள்' என்று நெட்டித் தள்ளவில்லை; 'ஓடிப் போனவள், என்று ஒதுக்கிடவில்லை, பழியைச் சுமந்தவள், பாதிக்கப் பட்டவள்' என்னும் பரிவோடும் பாசத்தோடும் வங்கக் கடல் அகல்யாவை வாரியணைத்துக் கொண்டது!

## திறனாய்வு

இலங்கைப் பல்கலைப் பேராசிரியர் கலாநிதி கைலாசபதி அகலிகை பற்றிய ஆய்வ நூலில் பாலும் பாவையும் பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார் அதில் சில பகுதிகள்

''விந்தன், வ ரா , பாரதியார் ஆகியோரின மரபையொட்டி, 'இழுக்கை ஒழிக்கவும், ஒழுக்கத்தை வளர்க்கவும் நமக்கும் நாட்டுக்கும்

நன்மை பயக்கவும் குறிக்கோளோடு எழுதியவர் இது காரணமாகவே அவரை பிரசார நாவலாசிரியர் பிரிவிற் சேர்த்து விடுகிறார் அகிலன்''

'பாலும் பாவையும்' ஆசிரியர் வேண்டுமென்றே இராமயண பாத்திரங்களையும் கதா சம்பவங்களையும் குறிப்பிடுகிறார் இதனால் இதிகாசமும் நவீன கதையும் ஒன்றையொன்று ஒட்டவும் வெட்டவும் வாய்ப்பு ஏறப்டுகிறது ஆசிரியர் பழைய கருத்துக்கள் கொள்ளும் போதும், தள்ளும்போதும் நின்று நின்று நாம் கவனிக்குமாறு இசைவுப் பொருத்தங்களை உணர்த்திக் கொள்கிறார் வேறொரு நூலுக்கு கி சந்திரசேகரன் எழுதியுள்ள முகவுரையில் கூறுவது இவ்விடத்தில் பொருத்தமாகக் கூறப்படுகிறது ஆழ்ந்த மனச் சுழல்களில் நம்மைச் செருக்கும் தன்மை பெற்றவை இங்குள்ள கதைகள் சில ஒருமுறைக்கு இருமுறையாக அவற்றின் கருத்து நம்மைத் துழாவ வைப்பதற்குக் காரணம் அதுவே அபிப்பிராயத்தின் விஷேசம் சில வேளைகளில் நம் உள்ளங்களைத் தொட்டு விடுகிறது சில சமயம் உலுக்கியும் விடுகிறது (அடியும் முடியும் 1970)

''பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் பற்றியே பெரும்பாலும் கதை எழுதிக் கொண்டு வந்த தாங்கள், காதலைப் பற்றி ஏன் எழுத வேண்டும்?'' என்று வாசகச் சகோதரி ஒருவர் கேட்டிருந்த கேள்விக்கு, ''காதல் தோல்வியுறுவதற்குக் கூடக் காரணம் பொருளாதார நிலைதான், அதைத்தான் இந்தக் கதையில் வரும் கனகலிங்கம் அகல்யாவுக்குச் சுட்டிக் காட்டுகிறான், நமக்கும் சுட்டிக் காட்டுகிறான்!'' என்று விந்தன் முன்னுரையில் சொல்லியிருப்பது, ஏதோ சமாதானத்திற்காகச் சொன்னது போல் இல்லாமல் மிகுந்த பொறுப்புடனும் சமூக நோக்குடனும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதனையே இந் நாவல் உணர்த்துகிறது

மேலும், ''பெண்குலத்தை மாசுபடுத்துவதற்காக நான் இந்தக் கதையை எழுதவில்லை; தூய்மைப்படுத்துவதற்காகவே எழுதி யிருக்கிறேன் இந்தக் கதையில் வரும் அகல்யாவிடம் எவ்வித வெறுப்பும் எனக்கு இல்லை அவள் பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவள் என்று குறிப்பிடும் போது மட்டும் எனக்கு அந்த இனத்தின் மேல் இயற்கையாக உள்ள வெறுப்பை ஓரளவு காட்டியிருக்கிறேன் - அவ்வளவுதான்!''

இத்தகைய அழுத்தமானக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு இந் நாவல் எழுதப்பட்டிருந்த போதிலும், இதனூடே தேசியத் தன்மை வாய்ந்தக் கருத்தொன்றையும் கதை முழுவதும் சித்திரித்துக் காட்டி நமது இலக்கிய நோக்கை வெளிப்படுத்தியுள்ளார் விந்தன்

ஆம் ''வகுப்பு வெறியின் காரணமாகக் கற்பழிக்கப்பட்ட பெண்களை ஆண்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்!'' எனறு தேசத்தந்தை மகாத்மா காந்தி விடுத்த வேண்டுகோளை மதித்து, அத்தகைய அவலத்துக்கு ஆளான பெண்களைச் சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை மக்கள் முன் எடுத்துச் சொல்லவதற்கு முன்வந்த இந்திய முற்போக்கு எழுத்தாளர்களில் விந்தனே முன்னோடி என்று கருதுகிறேன், அதிலும் தமிழில் முதல் முதலாகச் சொனனவர் விந்தன்தான் என்றும் நம்புகிறேன்

''பொன்னுக்கும் பொருளுக்கும் உள்ள மதிப்பு இந்தக் காலத்தில் பெண்ணுக்கு - ஏன், அவள் கற்புக்குக் கூட இல்லை!'' என்பதைச் சரியாகப் புரிந்து கொண்டிருந்த விந்தன், ஒருவனால் கைவிடப்பட்ட - கற்பிழந்த அகல்யாவிற்காகப் பெரிய சமூகம் புரட்சி ஒன்றை நடத்திக் காட்டுகிறார்; கனகலிங்கம் என்னும் கதை மாந்தனின் துணையோடு!

ஆசிரியர் தொடங்குகின்ற போராட்டமும் அவர் தொடுக்கின்ற கணைகளும் எதிரியைத் தாக்கி வீழ்த்துகிறதா என்றால் அதுதான் இல்லை! ஏன்? அதுதான் இந்தப் போராட்டத்தின் சிறப்பு சமூகத்தின் யதார்த்த நிலை

பொதுவாகவே சமூகத்தின் யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு போராடுகிறவனைவிட, புரிந்து கொள்ளாமல் போராடுகிறவனே புத்திசாலியென்று மதிக்கப்படும் சமூகத்தில், உண்மையான போராட்டங்களுக்குக் கிடைக்கும் தோல்விகள் எவ்வளவுதான் பெரியதாக இருந்தபோதிலும் அவைகள் வெற்றியின் தொடக்கம் என்றே கொள்ள வேண்டும் ஏனெனில், நடத்தப்படுகின்ற போராட்டங்கள் வலிமையும் - வசதியுமுடைய மனித எதிரிகளை நோக்கி, பெண்ணடிமைத்தனமும் பழைமைப் போக்குகளும் மலிந்த சாதியும் சமயமும் சார்ந்த சமூகத்தை எதிர்த்து, இன்னும் தெளிவாகச் சொன்னால் இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் நடக்கும் போராட்டம் என்பதே உண்மையாகும்!

## அன்பு அலறுகிறது

1957-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'அமுத சுரபி' இதழில் 'அன்பு அலறுகிறது' என்கிற தொடர்கதையை விந்தன எழுதத் தொடங்கினார் இத் தொடரைப் படித்த எழுத்தாளர் அகிலன் ''என்னுடைய 'சிநேகிதி' என்கிற நாவலின் கதைக் கருத்தை விந்தன் திருடிவிட்டார்!'' என்று 'அமுத சுரபி' நிர்வாகத்துக்கு வழக்கறிஞர் மூலம் தெரிவித்தார் அவர்களும் பதில் அளிக்கும் வகையில் விவகாரத்தைப் பிரபல வழக்கறிஞரும் கலைஞருமான காலஞ்சென்ற வி சி கோபாலரத்தினம் அவர்களிடம் கொண்டு சென்றனர் வி சி ஜி. அவர்களோ

விவகாரத்திற்கு ரொமபவும் சாதாரணமாகத் தீர்ப்புச சொல்லி விட்டார், அகிலன் எழுதியுள்ள 'சிநேகிதி' நாவலின் கதையே ஆங்கில நாவல ஒன்றின் தழுவல் என்று!

ஆனால், அகிலனின் இரசிகர்களும், நண்பர்களாக இருந்த சில பிரமுகர்களும் 'அமுத சுரபி' இதழ் வெளிவருவதற்கும், வந்த இதழ்களை விற்பனை செய்வதற்கும் பலவிதமான இடையூறுகளையும், பயமுறுத்தல்களையும் தமிழகமெங்கும் சில மாதங்கள்வரைத் தொடர்ச்சியாக நடத்தி வந்தார்கள்

இத்தகைய இடையூறுகளால் ஏற்பட்ட இழப்புகளையும், விரோதங்களையும் பெரிது படுத்தாமல் தம்முடைய பத்திரிகையின் இலக்கிய சேவைக்கும், விந்தனின் எழுத்தாற்றலுக்கும் கிடைத்த வெற்றியெனக் கருதி 'அமுத சுரபி' இதழில் 'அன்பு அலறுகிறது' தொடர்கதையைத் தொடர்ந்து வெளியிட்டனர் நிர்வாகத்தினர்.

எதிர்ப்புகளே தம் எழுத்துக்குக கிடைக்கும் சிறந்த வெற்றிகள் என்கிற எண்ணமுடைய விந்தனும் தொடர்ந்து எழுதினார் அந்த தருணத்தில் அகிலன் விந்தனுக்கு உருக்கமாக எழுதிய கடிதத்தைப் படித்து மனம் நெகிழ்ந்தவர் தொடர் கதையின் சீற்றத்தை ஒருவாறு தணித்து அத்துடன் தொடர்கதையை முடித்துக் கொண்டார் எனினும், அகிலனின் இரசிகர்களும் நண்பர்களும் விந்தனுக்குப் பல வழிகளில் பாதிப்புகளை உண்டாக்கினார்கள்; அதில் ஒரு பகுதியே 'அன்பு அலறுகிறது' நாவல் ஒரே பதிப்போடு மறைக்கப்பட்டது!

***

1951-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அகிலன் 'சிநேகிதி' என்கிற நாவலைப் புத்தமாக வெளியிட்டுள்ளார் அந்த நாவலில் சொல்லப்பட்டிருக்கும் கருத்தைப் பாராட்டியும், ஆசிரியரை வாழ்த்தியும் முன்னுரை வழங்கியுள்ளார் டாக்டர் மு.வ அவர்கள்

'சிநேகிதி' நாவலைப் படித்த விந்தன், அகிலன் சொல்லியிருந்த கருத்தின் மேல் எவ்வளவு கொதிப்பும் கோபமும் அடைந்தார் என்பதை, 'ஓர் இலக்கிய வாதியின் கலை உலக அனுபவங்கள்' என்ற நூலில் ஜெயகாந்தன் கூறுகிறார்

'நண்பர் விந்தன் ஒரு நாள் திரு அகிலன் எழுதிய 'சிநேகிதி' என்ற நாவலைக் கொண்டு வந்து முன்பெல்லாம் 'தமிழ் ஒளி' செய்வாரே அதுமாதிரிப் பிய்த்து உதறி விமர்சனம் செய்து கொண்டிருந்தார்

''பிடிக்காத நாவலை நீங்கள் ஏன் படிக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்

''எழுதுபவன் தன் காலத்தில் எழுதப்படுகிற எழுத்துக்களைப் படிக்க வேண்டியது ஒரு சமுதாயக் கடமை என்றார் விந்தன்!''

இவ்வாறு அகிலன் எழுதிய 'சிநேகிதி' நாவலில் சொல்லப்பட்டிருந்த கருத்தின் மேல் மிகுந்த கோபம் கொண்டிருந்த விந்தன், அந்த நாவலுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் 'அன்பு அலறுகிறது' என்கிற முழு நாவலையே எழுதத் துணிந்தார்

விந்தனின் மறுப்புக் கதையைக் கண்டு சகோதர எழுத்தாளர்களும், சில பிரமுகர்களும் விந்தன் பேரில் கொதிப்பும் கோபமும் கொண்டிருந்த போதிலும் எவரும் அதை வெளிப்படுத்தாமல், சிரித்துச் சிரித்துப் பேசியே ஓர் இலக்கியவாதியின் வளர்ச்சிக்கும், வாழ்க்கைப் போராட்டங்களுக்கும் குழிபறித்துக் கொண்டிருந்தார்கள்; அதுவே 'சிறந்த தமிழ்ப்பண்பு' என்றும் தயங்காமல் சொன்னார்கள்

ஆனால், விந்தனோ எதற்கும் அஞ்சாமல் அவர்களின் கொள்கைகளை, போலியான தமிழ்ப் பண்பாட்டைத் தோலுரித்துக் காட்டிச் சிரித்தவர்களையெல்லாம் சிந்திக்கும்படி செய்து, மறுப்புச் சிந்தனையே மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு நல்ல அடையாளம் என அறிவித்து அடுத்தடுத்துப் பலரின் கருத்துகளுக்கு எதிர்ப்புகளை எழுதிக்காட்டினார்

நாவல் இலக்கியத்தில் இத்தகைய மெய்யான விமர்சனப் போக்குகள், எதிர்காலத்தில் முற்போக்கு இலக்கியத்திற்கு மிகுந்த வலிவையும், வளர்ச்சியையும் உண்டாக்கும் என்று நம்பினார் நாமும் அந்த நம்பிக்கையோடு 'அன்பு அலறுகிறது' கதையின் நோக்கையும் போக்கையும் கவனிப்போம்!

**கதைச் சுருக்கம்**

''பிறர்மனை நோக்காத பேராண்மை - சான்றோர்க்கு அறனன்றோ ஆன்ற ஒழுக்கு'' என்னும் குறளைக் கேட்டும் படித்தும் அறியாத பாமரர்கள் - ஏழை எளியவர்கள் 'பிறர்மனை நோக்காத பேராண்மை' யாளர்களாக வாழ்ந்து வந்த போதிலும், படித்தவர்கள் அதிலும் தமிழைப் படித்தவர்கள் குறளுக்குப் புதிய புதிய உரைகளைக் கண்டு பிடித்தார்கள்! எப்படி? 'பிறர்மனை நோக்குதலே பேராண்மை!' என்னும் போக்கில்!

இத்தகைய புதுமைகளும் புரட்சிகளும் புற்றீசல்கள் போல் பெருகி வளர்ந்து தமிழர்களின் வாழ்க்கையைப் பண்பாட்டைச் சீர்திருத்தம் என்கிற பேரால் சீரழிந்துக் கொண்டிருந்த காலகட்டத்தில்தான், இருபது வயது நிறைந்த லலிதாவுக்கும், அறுபது வயது நிறைந்த பணக்காரருக்கும் திருமணம் நடக்கிறது; அதுவும் இரண்டாம் தாரம் என்கிற சமூக முத்திரையோடு

தாய் - தந்தையை இழந்து அத்தையின் ஆதரவில் வளர்ந்த லலிதா, தனக்கு வாய்த்த இரண்டாந்தாரத் திருமணத்தை மிகவும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறாள்

இவளின் திருமணத்தையும், வயோதிகக் கணவரையும் கண்டு அனுதாபப்பட்ட 'சிநேகிதி'களுக்காக இவள் ரொம்பவும் அனுதாபப் படுகிறாள்! ஏனெனில், வாழ்க்கைக்கு உயிர்போன்ற அன்பே பெரிதென்றும், அத்தகைய அன்பு எங்குக் கிடைத்தாலும் சரி அதற்கு வாலிபம், வயோதிகம் என்கிற வேறுபாடு கிடையாது என்றும் மெய்யாகவும் நம்புகிறாள் ஆம், அந்த அளவிற்கு வயோதிகக் கணவர் அவள் பேரில் அன்பைப் பொழிகிறார்; அந்தரங்கச் சுத்தியோடு நடந்துகொள்கிறார்.

ஆனால், முதலிரவோடு அந்த முழு நிலவுக் காட்சி முடிந்து விடுகிறது! அடுத்து ஒரே இருட்டு. எதிர்பாராமல் ஏற்படுகிறது. ஒரு விபத்து! அந்த விபத்தில், 'ஆண்மை'யை இழந்து விடுகிறார் வயோதிகர்; அத்துடன் அவள் மெய்யாக நம்பிய 'அன்பு அலறுகிறது!''

எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்தில் தன் கணவர் 'ஆண்மை'யை மட்டுந்தான் இழந்தார் என்று அவள் நினைத்தாள். ஆனால் அவரோ சகல பண்புகளையும் இழந்து மிச்சச் சொச்சம் ஏதும் இல்லாதவராய்ப் பேச ஆரம்பித்தார். அதற்கு முன்னுதாரணமாகத் தம் மனைவியை எவனுக்காவது தாரை வார்த்துக் கொடுத்திட வேண்டும் என்கிற முடிவுதான்!

இந்தப் 'புரட்சி'கரமான முடிவிற்கு எழுத்தாளன் ஒருவன் துணை சேர்கிறான்; அவளுக்கு அத்தான் முறையான மற்றொருவனும் அவளைச் சுற்றிச் சுற்றி வருகிறான் கடைசியில் அந்தப் பணக்கார வயோதிகள் தன் மனைவியை எழுத்தாளனுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு வெளிநாட்டிற்குப் பயணமாகி விடுகிறார்!

கணவனின் முடிவைக் கேட்டு அவள் உள்ளம் அலறுகிறது! எழுத்தாளனும், அத்தானும் ஒவ்வொரு நிமிசமும் போட்டி போட்டுக் கொண்டு அவளை அடைவதற்கும், அந்தஸ்தை அனுபவிப்பதற்கும் 'தெருச் சண்டை' போட்டுக் கொள்வதைக் காணப் பொறுக்க முடியாமல ஊருக்குப் புறப்பட்டுப் போகிறாள்.

முடிவில் 'பிறமனை நோக்குதலே பேராண்மை . !' என்னும் வெறியோடு வாழும் மனிதர்களை வெறுத்து, அவர்கள் எதைச் செய்தாலும் 'அன்பு' என்றும் பண்பு என்றும் மூடிமறைக்கும் சமூகத்தைத் துறந்து, தன் உயிரை முடித்துக் கொள்ளத் துணிகிறாள் அதற்கு முன் எவரும் 'அன்புப் பணி' செய்யாமல் அமைதியாகயிருப்பவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் பரிசு அளிப்பதாகவும், அதற்குத் தன்னுடைய

ஆஸ்தியைப் பயன்படுத்த வேண்டுமென்றும் தன் விருப்பத்தைத் தெரிவித்து இவ்வுலகத்தை விட்டு விடுதலை பெறுகிறாள் அவளுடைய முடிவைக் கண்டு 'சிநேகிதி' அலறுகிறாள், அன்பு அலறுவது போல்!

## திறனாய்வு

திரு அகிலன் எழுதிய 'சிநேகிதி' நாவலைப் படித்து விந்தன் ஏன் கொதிப்பும் கோபமும் அடைந்தார் என்பதற்கான பதிலை ஒரு கொள்கையின் அடிப்படையில் தருவதே இந்த நாவலின் நோக்கம், வேறுவிதமான நோக்குக்கோ - காழ்ப்புக்கோ இதில் இடம் இருப்பதாகத் தெரியவில்லை

எனினும், 'சிநேகிதி'க்கு ஒரு 'சிநேகித'னாக இருந்துவிட்டு எல்லோருடைய 'சிநேகித'த்தையும் பெற்று இருக்கலாமே என்று சிலர் நினைக்கலாம். ஆனால், 'சிநேகிதியை'யை அறிந்த அளவிற்குச் 'சிநேகித'னையும் அறிந்துள்ள தமிழர்கள் இந்தப் புதிய 'சிநேகித'த்தை எப்படி வரவேற்பார்கள். அல்லது வாழ்த்துவார்கள்? அதனால் வழக்கம் போல் 'சிநேகிதி'யைப் படித்துச் சிந்திக்க ஆரம்பித்தார் அகிலன் கூட "இந்த நாவலை நான் சிந்திக்கத் தெரிந்தவர்களுக்காகவும், சிந்திக்க விரும்புகிறவர்களுக்காகவும் எழுதுகிறேன்!" என்றல்லவா முன்னுரையில் சொல்லியிருக்கிறார் விந்தன் கூட அதைத்தானே செய்தார்?

அகிலன் எந்தமாதிரி சிந்திப்பவர்களுக்காக எழுதினாரோ, எப்படிச் சிந்திக்க வேண்டும் என்று விரும்பினாரோ என்பதெல்லாம் நமக்குத் தெரியாது ஆனால், விந்தன் சரியாகவும் மிகுந்த பண்போடும் - அதிலும் தமிழ்ப்பண்போடும் சிந்தித்திருப்பதாகவே தெரிகிறது. அதனால்தான் நாமும் அவரோடு சேர்ந்து சிந்திப்பதற்கு விரும்புகிறோம்.

இந்தத் திறனாய்வில் விந்தனின் நோக்குகளையும், போக்கு களையும் விமர்சிப்பதே நமது நோக்கமாயினும், இந்த நாவலைப் பொறுத்த வரையில் அகிலனையும் சேர்த்து விமர்சிக்கும்படியான வேலையும் நமக்குச் சேர்த்து விடுகிறது, 'சிநேகிதி'யை அறிமுகப் படுத்தியவர் அவரே என்பதால்

விமர்சனத்திற்கொரு விமர்சனம் என்பார்களே அதைபோல் அன்று இது. சமுகப் பொறுப்போடும், மனிதநேயத்தோடும் கூடிய இலக்கிய விமர்சனமாகும்

## மனிதன் மாறவில்லை

"எதை எழுதினாலும் அதை நாலு பேர் போற்றவாவது வேண்டும்;

அல்லது தூற்றவாவது வேண்டும் இரண்டு மில்லையென்றால் எழுதுவதை விட எழுதாமல் இருந்து விடலாம்!'' என்பது பேராசிரியர் 'கல்கி'யின் கருத்து

இந்தக் கருத்தை எழுதத் தொடங்கிய நாளிலிருந்து தனது இலக்கிய கொள்கையாகக் கொண்டுள்ள விந்தன், எத்தனையோ பேருடைய போற்றதலுக்கும், தூற்றதலுக்கும் உள்ளான போதிலும், வாழ்க்கை வசதிகளைக் கருதி வழிமாறிப் போனதில்லை; உதாரணத்திற்கு இந்த நாவல் ஒன்றே போதும்!

தனது சுயமான - சுதந்திரமான கருத்துகளைச் சொல்லுவதற்கு 'மனிதன்' என்னும் மாத இதழைச் சொந்தத்தில் நடத்தி அது பத்து இதழோடு மரணம் அடைந்ததற்குப் பிறகு விந்தன், இராஜாஜி எழுதிய 'பஜகோவிந்தம்' என்கிற நூலுக்கு மாறாகப் 'பசிகோவிந்தம்' என்னும் நூலை எழுதிப் பலரின் போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் உள்ளானார். அகிலன் எழுதிய 'சிநேகிதி'க்கு மாறாக 'அன்பு அலறுகிறது' என்னும் நாவலை எழுதிப் பலரின் போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் உள்ளானார்; மனிதன் மாறவில்லை என்னும் தொடரை எழுதிப் பலரின் போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் உள்ளானார்! ஏனெனில், இத்தொடர் இழை நக்கி நூலாடை நெய்த வள்ளுவரின் பெயரைச் சொல்லி வளமாக வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பேராசிரியர் ஒருவரின் நிச வாழ்க்கையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது என்பதால்!

1961 டிசம்பர் மாதம் 'அமுதசுரபி' இதழில் 'மனிதன் மாறவில்லை' என்னும் தொடரை விந்தன் எழுதத் தொடங்கியபோது, ஒரு தமிழ்ப் பேராசிரியரின் மாணவர்களும், இரசிகர்களும் நண்பர்களும் பகைவர்களும் ''விந்தன் மிகவும் துணிச்சலுடன் தமிழ்ப் பேராசிரியரின் 'பண்பு'களை அதுவும் 'தமிழ்ப்பண்பு'களைப் பச்சையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்!'' என்று சம்மன் இல்லாமலேயே சாட்சிகளாக மாறினார்கள்; இலைமறை காயாக இருந்த விவகாரத்தை எடுத்து எடுத்துச் சொன்னார்கள்; ஒளிவு மறைவு இல்லாமல் உடைத்து உடைத்துச் சொன்னார்கள்.

ஆனால், இராஜாஜியின் தொண்டர்களும், அகிலனின் இரசிகர் களும், பேராசிரியரின் மாணவர்களும் மூலவர்களை முழுவதுமாக நம்பி மூலதனமாகக் கொண்டு ஆதாயம் தேட அலைந்தபோது, இராஜாஜி அவர்கள், விந்தன் எழுதிய 'பசி கோவிந்தம்' என்னும் சிறு நூலைத் தமது நூலகத்தில் பலரின் பார்வையில் பளிச்சென்று தெரியும் வண்ணம் வைத்துத் தன்னைக் காணவரும் இலக்கிய அன்பர்களிடம் விந்தனைப் பற்றி பேசுவாராம்! அகிலனோ, வழக்குத் தொடுத்ததோடு அந்த விவகாரத்தை மறந்து விட்டார் 'எல்லோருக்கும் நல்லவராக - வல்லவராக, அதோடு எங்கும் எதிலும் உணர்ச்சிக்கு இடம்

கொடுக்காதவராக வாழ்வதே தமது இலட்சியம்!' என்று வாழ்ந்த தமிழ்ப் பேராசிரியர் வாயே திறக்கவில்லை

**கதைச் சுருக்கம்**

பேராசிரியர் நெடுமாறனாரின் புகழ் - அதாவது கல்வியில், இலக்கியத்தில் அவர் அடைந்துள்ள புகழ் எவ்வளவு பெரியதோ அதைவிடப் பெரியது காதல் துறையில் அவர் அடைந்துள்ள புகழ்!

கதைகளைக் கவிதைகளைப் படித்து அனுபவித்துப் பிறகு அவற்றை மாணவர்கட்குச் சிபார்சு செய்வதுபோல், கன்னிப் பெண்ணொருத்தியைக் காதலித்து, அதற்குப் பரிசாகக் குழந்தையையும் கண்ட பின்னர், அந்தப் பெண்ணை ஒரு மாணவன் தலையில் கட்டிவிட முயலும் டாக்டர் நெடுமாறனாரைச் சுற்றி ஓர் உலகமே இயங்குகிறது!

ஆம், உடன் பணியாற்றும் தமிழ்ப் பேராசிரியை கல்யாணமான கண்ணகி அம்மையாரைத் தம்முடைய காதல் வலையில் சிக்கவைத்து விடுகிறார் நெடுமாறனார். தன் மனைவி மாற்றான் ஒருவனுடன் தவறான நட்பு கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்து தற்கொலை செய்து கொள்கிறார் கண்ணகி அம்மையாரின் கணவர்

தன் கணவரின் மரணத்துக்கு நெடுமாறனார்தான் காரணம் என்று கண்ணகி அம்மையார் குற்றஞ்சாட்ட, மனம் குலைந்த நெடுமாறனார் அமைதிக்காக மது அருந்துகிறார்; நாளடைவில் கண்ணகி அம்மை யாரையும் அதற்கு அடிமையாக்கி விடுகிறார்

மதுவின் மயக்கத்தில் இருவரும் அறிவிழந்து முறை தவறி நடந்து கொள்கின்றனர். அதன் விளைவால் ஒருவரைக் கண்டு ஒருவர் பயந்து, அந்தப் பயத்தால் 'யாரை, யார் முதலில் ஒழிப்பது?' என்னும் நிலைக்கு வந்து விடுகின்றனர். அத்தருணத்தில்தான் அவர்கள் வாழ்க்கையில் நறுமணம் குறுக்கிடுகிறாள்.

தாயை இழந்த நறுமணம், தன் தந்தை இரண்டாவது திருமணம் செய்துகொண்டு தனக்காகவும் தன் அண்ணனுக்காகவும் இரண்டாவது மனைவியிடம் தன் தந்தை துன்பப்படுவதைக் கண்டு பொறுக்க முடியாமல், ஒரு விடுமுறையின்போது அண்ணன் தம்பியுடன் பெங்களூரில் வாழும் தாய் மாமன் வீட்டிற்குப் போகிறாள். மீண்டும் வரக்கூடாது என்னும் முடிவோடு.

பெங்களூரில் தாய்மாமன் வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த நறுமணம், ஒரு விடுமுறையின்போது ஓய்வுக்காக டாக்டர் நெடுமாறனார் நந்திமலைக்கு வந்திருப்பதை அறிந்து அவரின் இரசிகை என்னும் பெருமிதத்துடன் அவரை நேரில் காணச் செல்கிறாள் அங்கே டாக்டர் நெடுமாறனார் கண்ணகி அம்மையாருடன் மது

அருந்திக் கொண்டிருப்பதை அறிந்து மனவேதனையுற்று மீண்டும் அவரைச் சந்திக்கக் கூடாது என்னும் முடிவோடு வீடு திரும்புகிறாள் நறுமணம்.

பெண்கள் விஷயத்தில் ஆண்கள் மிகவும் பலவீனமானவர்கள் என்பதை நறுமணத்தின் தாய்மாமன் வெளிப்படுத்தி விடுகிறார்! அதனால் அங்கிருந்து எப்படியாவது வெளியேறி விடவேண்டும் என்கிற முடிவுடன் நறுமணமும் நம்பியும் புறப்படத் தயாராயிருக்கும் நிலையில், 'அப்பா இறந்து விட்டார்!' என்று செய்தி வரவே எல்லோரும் புறப்பட்டுச் சென்னைக்கு வருகின்றனர்

''உணர்ச்சி வசப்படக்கூடாது; உணர்ச்சி வசப்படக்கூடாது!'' என்று ஊருக்கு உபதேசம் செய்துவந்த டாக்டர் நெடுமாறனார் உணர்ச்சி வசப்பட்டு, 'அம்மாவுக்கு அப்பாவுக்கு, ஆட்டுக் குட்டிக்கு, பூனைக்குட்டிக்கு!' எனப் புற்றீசல் போல் எழுதிக் குவித்த அவரின் நூல்களை முற்போக்குச் சிந்தனையுடன் விமர்சனம் செய்திருந்த நம்பியை நேரில் காண வந்தவர் அவனோடு ஆவேசமாகப் பேசிவிட்டு, பத்திரிகையைக் கிழித்துயெறிந்துவிட்டுப் போகும் சமயத்தில் நறுமணத்தைக் கண்டு 'நீயா?' என் வியந்தவாறு பல்லிளித்து நிற்கிறார்

புற வாழ்க்கையில் சிரித்துச் சிரித்துப் பேசியே சாதனைகளைக் கண்டவர். அக வாழ்க்கையில் நீலிக் கண்ணீர் வடித்துப் பல பெண்களின் நிம்மதியைக் குலைத்தவர், டாக்டர் நெடுமாறனார். இவரைக் கண்டதும் நறுமணத்திற்கு நந்தி மலையில் கண்ட காட்சி நினைவுக்கு வருகிறது; டாக்டருக்கும் அவ்வாறு நினைவுக்கு வரவே, அதை மூடிமறைக்கும் வகையிலும், நறுமணத்தின் சகோதரன் நம்பி ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியர் என்பதை அறிந்தும் அவன் முன் ஓர் அபலைப் பெண்ணைப் போல் விம்மி விம்மி அழுது, ''என் மேல் கொண்ட காதலினால் கண்ணகி அம்மையார் தன் கணவனைக் கொலை செய்தாள்; அந்த வேதனையைத் தாளமுடியாமல் தவித்த எனக்குக் குடிக்க வழி காட்டினாள்; பல வழிகளில் என்னை ஆட்டி படைத்தவள் கடைசியில் ஆற்றில் விழுந்து இறந்தாள் இப்பொழுது நான் நிம்மதியோடு இருக்கிறேன்!'' என்று உருக்கமாகக் கூறி நறுமணம், நம்பி ஆகிய இருவரின் அன்பையும் அனுதாபத்தையும் பெறுகிறார்.

அன்று முதல் ஏதாவது காரணத்தை வைத்துக் கொண்டு நறுமணத்தின் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார் டாக்டர் நெடுமாறனார், முதலில் 'ஏன் வருகிறார்?' என்று நினைத்தவள் பின்னர் 'ஏன் வருவதில்லை?' என்று நினைக்கிறாள் நறுமணம்

டாக்டர் நெடுமாறனார் வருகையை நறுமணத்தின் அண்ணன் ஒருவாறு புரிந்து கொண்டபோதிலும், ''என்ன இருந்தாலும் ஆண் ஆண்தான்!'' என்று அவள் பாட்டி எச்சரிக்கத் தவறவில்லை

யார் எப்படி எச்சரித்த போதிலும், எது நடக்கக் கூடாது என்று நினைத்தார்களோ அது நடந்து விடுகிறது! நடப்பதற்கு முன் சிரித்தவள் நடந்த பின் அழுகிறாள் அவளின் அழுகையைக் கண்டு 'அழாதே! இதெல்லாம் இயற்கையின் நியதி!'' என்று தமிழப் பேராசிரியர் - 'அன்னைக்கு' 'தங்கைக்கு' என நூல் எழுதிய நூலாசிரியர் டாக்டர் நெடுமாறனார் அமைதியாக ஆறுதல் கூறி அவசர வேலை இருப்பதாகச் சொல்லிப் போகிறார்; அத்துடன் போயே விடுகிறார்!

**திறனாய்வு**

''இலக்கியம் கற்பனையிலிருந்து பிறக்கவில்லை, வாழ்க்கையி லிருந்துதான் பிறக்கிறது!''

''கற்பனையிலிருந்து நான் கதைகளை மட்டும் சிருஷ்டித்தால் போதுமானது; அவற்றைப் படிப்பதற்கு வாசகர்களையும் கற்பனை யிலிருந்தே சிருஷ்டிக்க வேண்டும் - என்னால் முடியாதய்யா, என்னால் முடியாது!''

இதுதான் விந்தனின் இலக்கிய நோக்கு. இந்த நோக்கு அவர் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்தே இருந்து வருகிறது

மேலும் 'வாழ்க்கை' என்னும் பேரால் நடந்து முடிந்த கதைகளை எடுத்துக்கொண்டு அதற்கு இல்லாத 'பண்பு'கள் எல்லாம் இருப்பதாகச் சொல்லி யாரையும் ஏமாற்றுவதில்லை; தன்னையும் ஏமாற்றிக் கொள்வதில்லை. மாறாக நடந்து கொண்டிருக்கின்ற கதைகளை - வாழ்க்கையை எடுத்துக் கொண்டு அதில் காணப்படும் பண்பு குறைவான - அதிலும் 'தமிழ்ப்பண்பு' குறைவான செயல்களைக் கொஞ்சம் அஞ்சாமல் எடுத்துச் சொல்லிப் பலரின் தூற்றதலுக்கு உள்ளாகிப் பாதிக்கப்பட்ட போதிலும், விந்தன் தன் பண்பை, பழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை என்பதற்கு மிகுந்த சான்றாக உள்ளது 'மனிதன் மாறவில்லை' நாவல்!

பெரும்பாலும் விந்தன் படைக்கும் கதை மாந்தர்கள் நம்முடன் வாழ்பவர்களாகவும், அன்றாடம் நாம் சந்திப்பவர்களாகவும் இருப்பதால் அவர்களைப் பட்டென்று வாசகர்கள் அடையாளம் கண்டு, அவர்கள் பேரில் அனுதாபம் கொள்ள வேண்டியிருந்தால் அனுதாபம் கொள்கிறார்கள்; ஆத்திரப்பட வேண்டியிருந்தால் ஆத்திரப் படுகிறார்கள் இதன் மூலம் விந்தனின் கதை மாந்தர்கள் எந்த அளவிற்கு வாசகனைச் சிந்திக்கத் தூண்டுகிறார்கள் என்று அறியலாம்

## காதலும் கல்யாணமும்

''முற்போக்குச் சிந்தனையுடைய விந்தன், எநத முற்போக்கு இயக்கத்தோடு அதைச் சார்ந்து இருக்கும் இலக்கிய நிறுவனத்தோடும் இதழ்களோடும் தொடர்பு கொள்ளாமல் தனித்து இயங்கியதால், அண்மையில் வெளிவந்த இலக்கிய மதிப்பீடுகளில் விந்தன் பெயர் இடம் பெறவில்லை!' என்று கருதும் சில முற்போக்கு ஆய்வாளர்கள், விந்தன் எழுத்துகள் மக்கள் மனத்தில் இடம் பெற்றிருக்கின்றன என்பதை ஏனோ மறந்து விடுகிறார்கள்; அல்லது மறைத்து விடுகிறார்கள்

இவ்வாறு 'முற்போக்காளர்கள்' என்று சிலரால் மட்டுமே நம்பப் படுகிறவர்களால் விந்தன் மறைக்கப்பட்ட போதிலும் வேறு நற் போக்குள்ளவர்களால் விந்தன் மனிதாபிமானத்தோடு மதிக்கப் பட்டார் என்பது கவனிக்கத் தக்கது

ஆம், 'வாழ்க்கையின் பிரச்சனைகளுக்குகிடையே பிறந்தும் வளர முடியாத என் நாவல்களை சர்வ வல்லமையுள்ள காசால் தான் காப்பாற்ற முடியுமா? கடவுளே உன்னால் காப்பாற்ற முடியாதா?' என்று விந்தன் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் 'தினந்தந்தி' நிறுவனத்தார் அவர்களின் 'வாராந்திர இராணி' இதழில் விந்தனை நெடுங்கதை எழுதும்படி தூண்டினர்

'தினந்தந்தி' நிறுவனத்தின் கொள்கை வேறு வகையாக இருந்தபோதிலும் தன் கொள்கைப் படியே 'இராணி' இதழில் 'கனவிலே வந்த கன்னி' என்னும் தலைப்பில் தொடர்கதையை எழுதினார். அக்கதையை 'காதலும் கல்யாணமும்' என்னும் தலைப்பில் க.நா. சுப்பிரமணியம் முன்னுரையுடன் காவேரி புத்தக நிலையம் 1965-இல் புத்தகமாக வெளியிட்டது.

பல பிரச்சனைகளுக்கிடையே பிறந்த இந்த நாவல், சமூகத்தில் உள்ள சீர்கேடுகளை மனிதர்களின் குணக்கேடுகளை அதிலும் அந்தஸ்துள்ள மனிதர்களின் சமூக விரோதச் செயல்களை எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகிறது என்பதைக் காண்போம்!

## கதைச் சுருக்கம்

அரசு நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு எத்தனையோ விதமான அதிகாரங்கள், ஆதாயங்கள் அவரவர் தகுதிக்கு ஏற்ப வாய்த்திருந்த போதிலும், வாரத்தில் இரண்டு நாள் கிடைக்கும் விடுமுறை பெரிய வாய்ப்பாகும்!

அந்த விடுமுறையை வாலிபர்கள் கனவு காண்பதற்கும், காதலிப்பதற்கும் இன்னும் வேறு எதுயெதற்கோ பயன்படுத்துகிறார்கள்.

அந்த விடுமுறையில் வயோதிகர்கள் மனைவி மக்களுடன் ஊர் சுற்றுகிறார்கள்; அல்லது அவர்களோடு போராடிக் கொண்டிருக் கிறார்கள்

பொதுவாக இத்தகைய விடுமுறைகள் பணம் இருப்பவர்களுக்குக் கொண்டாட்டம்; இல்லாதவர்களுக்குத் திண்டாட்டம்!

வாலிபர்கள் கனவு கண்டால் அது அவர்களின் வருங்கால மனைவிமார்களைப் பற்றிய வண்ணமயமான கனவுகளாத் தான் இருக்கும் என்பதை எல்லோரும் அறிவார்கள் அத்தகைய வண்ண மயமான கனவைத்தான் இந்தக் கதையின் நாயகன் மோகன் காண்கிறான்; அதுவும் ஒரு விடுமுறை நாளில் பகலில் காண்கிறான் அது பலித்துவிடுகிறது!

கனவிலே வந்த கன்னி அழகு காட்டினால் சரோஜாதேவியாகவும், காட்டாவிட்டால் தேவிகாகவாகவும் இருந்ததில் மோகனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. மேலும் கனவிலே வந்த கன்னி தன்னுடன் பணியாற்றும் பாமாவாக இருந்ததில் பல மடங்கு மகிழ்ச்சி!

மோகன் - பாமா காதல் அரசாங்கத்தின் திட்டங்களைப் போல் பொறுமையாகவே வளர்கிறது!

ஒரு நாள் மோகனும் பாமாவும் கடற்கரையில் அமர்ந்திருந்த போது, ஒருவன் பாமாவின் பக்கத்தில் அமர்ந்து "நானும் கொஞ்ச நேரம் இவளோடு உட்கார்ந்து கொள்கிறேன்!" என்று சொல்வதைக் கேட்டு மோகன் "போலீஸ்; போலீஸ்!" என்று கத்தியவாறு ஓடுகிறான்; பாமாவைத் தனியாக விட்டுவிட்டு அத்தருணத்தில் அங்கு வந்த மோகனின் நண்பன் மணி அந்த முரடனைச் செம்மையாக உதைத்து விரட்டுகிறான்

மணியின் வீரத்தைக் கண்டு வியந்த பாமா, அவனையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ட மோகன், 'இவள் நம்மை மறந்து விட்டாளோ?' என்னும் கலக்கத்துடன் "இதெல்லாம் இந்த மணியின் வேலைதான்!" என்று மணியின் பேரில் பழியைப் போடுகிறான் எனினும், பாமா மணியை உயர்வாகவே நினைக்கிறாள்.

மோகன் - பாமா காதல் பாமாவின் சகோதரி இராதாவிற்குத் தெரிந்து விடுகிறது; பேராசிரியை மீனாட்சி அம்மை மூலமாக, அதன் பொருட்டு அவர்கள் மோகனை அழைத்து வரும்படி வற்புறுத்த பாமா ஒருநாள் அவனை வீட்டுக்கு அழைத்துப் போகிறாள் அங்கே அவன் சகோதரி அருணா இருப்பதைக் கண்டு எவரிடமும் ஏதும் பேசாமல் திரும்பி விடுகிறான்! இது எல்லோருக்கும் எதையேதையோ நினைக்கும்படி உண்டாக்குகிறது.

இவர்களைப் போலவே கல்லூரியில் படிக்கும் அருணாவும் சுநதரும் காதலிக்கின்றனர் ஒரு விடுமுறை நாளில் மாமல்லபுரம் போவதாகப் பெற்றோர்களிடம் சொல்லிவிட்டு அருணா, சுந்தருடன் ஒரு ஓட்டல் அறையில் தங்குகிறாள். அங்கே சுந்தர் அருணாவைக் கற்பழிக்க முயல்வதை அவளின் அலறலை அடுத்த அறையில் இருந்த கவனித்த மணி, அடுத்த அறையின் கதவை உடைத்து உள்ளே நுழைந்து சுந்தரை அடி அடியென்று அடித்து விட்டு அலறலுக்குரிய பெண்ணைப் பார்த்து 'நீயா' என்றவாறு தலை குனிந்த வண்ணம் வெளியில் வந்து விடுகிறான்

மணியிடம் அடிவாங்கி அவமானத்துக்கு ஆளான சுந்தர் எப்படியாவது மணியைப் பழிவாங்க வேண்டும் என்கிற எண்ணத்தில் ஒரு கள்ளக் கடத்தல் விவகாரத்தில் மணியைச் சிக்க வைக்க முயல்கிறான் எதிர்பாராமல் அந்த விவகாரத்தில் மோகன் மாட்டிக் கொள்கிறான்!

இந்தச் செய்தியை மோகனின் தந்தையும் முன்னாள் போலீஸ் அதிகாரியுமான ஆபத்சகாயத்திடம் மணி தெரிவித்த போது அவர் எந்த விதமான பதட்டமும் அடையாமல் மணியை மகிழ்ச்சியுடன வரவேற்கிறார், ''நீங்கள் எத்தனை நாட்களாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறீர்கள்?'' என்று கள்ளக் கடத்தல் தொடர்பான விவரங்களையெல்லாம் கேட்கிறார் ஏனெனில், தற்போது அவர் கள்ளக் கடத்தல்காரர்கள், கொள்ளைக்காரர்கள் போன்றவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து ஆயிரமாயிரமாகச் சம்பாதித்துக் கொண்டிருக்கும் அனுபவத்தில்.

ஆபத்சகாயம் முன்னாள் ஒரு போலீஸ் அதிகாரியெனபதை மணி மறந்து விட்டபோதிலும், இந்நாளில் அவர் ஒரு சமூக விரோதி என்பதை மறக்கவில்லை; அதனாலேயே அவரைப் பின்தொடர்கிறான்

அதிகாரம் இருந்த காலத்தில் ஆயிரமாயிரமாகச் சம்பாதித்து அனுபவித்த ஆபத்சகாயம், அது இல்லாத காலத்திலும் பழைய குற்றவாளிகள் - சமூகவிரோதிகள் ஆகியவர்களுக்குப் பாதுகாப்பு அளித்துப் பணம் சம்பாதித்த போதிலும் அவருக்கு வாழ்க்கை சுவைக்கவில்லை அதனால் நகரப் பிரமுகர்களில் ஒருவரும், கள்ளக் கடத்தல் மன்னனுமான அவரது நண்பர் சுகானந்தத்திற்கு ஏற்கெனவே பல மனைவிமார்களுக்குத் துணைவராக இருந்தவருக்கு அருணாவைக் காதலித்துக் கற்பழிக்க முயன்ற சுந்தரின் தந்தைக்குத் தமது அருமை மகள் அருணாவைத் திருமணம் செய்து வைத்து வாழ்க்கையைப் பல வகையாக அனுபவிக்க ஆசைப்படுகிறார்

தந்தையின் தகாத ஆசையைப் புரிந்துக் கொண்ட அருணா அதற்கு இணங்க மறுத்துத் தான் அணிந்திருந்த நகைகளைக் கழற்றி அப்பாவுக்கு

பார்சலில் அனுப்பிவிட்டு, கடிதம் எழுதிக் கடற்கரையில் வைத்து விட்டுக் கடலில் குதித்து விடுகிறாள்!

கடற்கரையில் கடிதத்தைக் கண்ட மணியும், மோகனும் அருணாவைத தேடுவதில் தீவிரமாக இருக்கின்றனர்

எதிர்பாராத விதமாக உயிர் தப்பிய அருணாவை மோகனின் அலுவலக அதிகாரி காப்பாற்றுகிறார், அடைக்கலம் தருகிறார், திருமணம் ஆகாத அவர் அருணாவைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்

'பணத்தாசையால் மகளைப் பறிகொடுதது விட்டோமே!' என்று ஆபத்சகாயம் மனம் வருந்தியபோது, சுகாநந்தர் இறந்து விட்டார் எனற செய்தி கேட்டுப் பதறுகிறார் அதோடு 'சுகாநநதர் இயற்கையாக இறந்து இருக்கமாட்டார், அவர் மகன்தான் அவரைக் கொன்றிருப்பான்!' என்னும் முடிவோடு நண்பருக்கு இறுதி மரியாதை செலுத்தச செல்கிறார் ஆபத்சகாயம்

அங்கே, எல்லோரையும கண்டு அழுதது போல ஆபத் சகாயத்தையும் கண்டவுடன் அழுகிறான் சுந்தர் அவனது அழுகையைக் கண்டு மனம் நெகிழாத ஆபத்சகாயம் அவனைத் தனியே அழைத்து

''உண்மையைச் சொல்; நீதானே அவரை நஞ்சிட்டுக் கொன்றாய்?'' என்று அவன் குரல் வளையைப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கியபோது, அவன் உண்மையைச் சொல்ல மறுத்த போதிலும் அடுத்த கணம் அவர் காலடியில் நூறு ரூபாய் நோட்டுகளை வைத்து ''எனனைக் காப்பாற்றுங்கள்!'' என்று அழுகிறான்; அவர் பழைய ஆபத்சகாயம் என்கிற நினைப்பில்!

ஆனால், அவர் முன்னாள் பொறுப்புள்ள ஒரு போலீஸ் அதிகாரி என்பதைப் புரியவைக்கும் வகையில் பணத்தைக் தொடமறுத்ததைக் கண்டு திடுக்கிட்டு, அவரைத் தீர்த்துக்கட்ட சுந்தர் துப்பாக்கியைப் பயன்படுத்துகையில், அங்கு அவர் ஏற்கெனவே செய்து வைத்திருந்த ஏற்பாட்டின்படி போலீஸார் வந்து சுந்தரைக் கைது செய்கின்றனர்

தன் வாழ்நாளிலேயே முதன் முறையாகச் செய்த ஒரே ஒரு நல்ல காரியத்தை - அதாவது சுந்தரைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்படைத்ததை நினைத்து ஆபத்சகாயம் ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்தபோது, ''மன்னிக்க வேண்டும்!'' என்று தயக்கத்துடன் மணி உள்ளே நுழைய அவனுக்குப் பின்னால் சொக்கலிங்கனார், மீனாட்சியம்மாள், இராதா, பார்வதி தம்பதிகள், பரந்தாமனின் தாயார் ஆகியோர் வந்து கொண்டிருக்க, ''வாழ்த்துங்கள்!'' என்று சொல்லாமல் - வெளியில் சொல்லாமல் மனத்தால் சொல்லிக் கொண்டு பரந்தாமனும் அருணாவும் மோகனும் - பாமாவும் வந்து கொண்டிருந்தனர்

இந்தக் காட்சிகளைக் கண்டு மனம் பூரித்து மணமக்களை வாழ்த்திய ஆபத்சகாயம், ''உன்னுடைய மனத்தோடு இதுவரை எந்த மனமும் ஒன்றுபடவில்லையா?'' என்று மணியிடம் கேட்க, ''காதலையும் கல்யாணத்தையும் வாழ்க்கையில் ஒரு பிரச்னையாக - இலட்சியமாகக் கருதவில்லை!'' என்றவாறு போய்க் கொண்டிருந்தான் மணி எல்லோரும் அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; குறிப்பாக பாமாவும், அருணாவும் கண் கலங்கப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்!

## திறனாய்வு

''கலைஞன் என்பவன் தன் நாட்டைப் பற்றியும், தன்னுடைய சமுதாயத்தின் செவியாகக் கண்ணாக, நெஞ்சமாக விளங்குபவன் தான் வாழும் காலத்தின் உண்மைகளை எடுத்துக் கூறுபவன்தான் கலைஞன்''

மார்க்சிம் கார்க்கியின் இத்தகைய மணிவாசகத்தில் மிகுந்த ஈடுபாடும் நேசமும் கொண்டிருந்த விந்தன், தான் வாழும் காலத்தின் உண்மைகளை - அதை மூடி மறைக்க நடந்த போராட்டங்களை எப்போதும் தம் எழுத்துகளில் எடுத்துச் சொல்ல தயங்கியதில்லை என்பதற்கு இந்த நாவலும் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

ஒரு காலகட்டத்தில் படைப்பாளிகளுக்கும், வெகு ஜனப்பத்திரிகை களுக்கும் நடந்த போராட்டத்தில் சில எழுத்தாளர்கள் பங்கு பெற அஞ்சி, ஓடி ஒளிந்தபோது, வாழ்க்கையே ஒரு போராட்டமாக அமைந்த விந்தன் எத்தகைய பாதிப்புகளைக் கண்டும் அஞ்சாமல் தம் எழுத்துப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

''வாழ்க்கையின் பலப் பிரச்சனைகளுக்கிடையே பிறந்தும் வளர முடியாத என் நாவல்களை சர்வ வல்லமையுள்ள காசால் தான் காப்பாற்ற முடியுமா? கடவுளே உன்னால் காப்பாற்ற முடியாதா?'' என்று விந்தன் கவலைப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் எழுதப்பட்ட இந்நாவலில், சர்வ வல்லமை உள்ள காசால்தான் எதையும் சாதிக்கவும் மூடி மறைக்கவும் முடியும் என்பதை மிகவும் ஆதாரபூர்வமாகச் சுட்டிக் காட்டுகிறார்.

தமது கொள்கைகளையும், இலட்சியங்களையும் மூலையில் மூட்டைகட்டி வைத்துவிட்டு, எழுதுகிற பத்திரிகைக்கு ஏற்றவாறு எழுதும் மரபை என்றுமே பெற்றிறாத விந்தன், களம் எதுவாயினும் கருத்துக்கே முதலிடம் என்கிற நோக்கில் தம் கருத்துகளை வெளிப் படுத்தியுள்ளார்.

பொதுவாகவே விந்தன் பழைய மரபுகளை மீறுகின்றவர், புதிய மரபுகளையும், மனிதனையும் விரும்புகின்றவர் அதனாலேயே ''போலீஸ்காரன் திருடமாட்டான் நமது நண்பர், பேராசிரியர் கொலை

செய்ய மாட்டார், திருக்குறள் படித்தவர்'' என்பதையெல்லாம் நம்பாமல் ஒவ்வொரு மனிதனின் மறுபக்கத்தையும் காண கவனமாக இருந்தவர்.

இக்கதையில் பலருடைய மறுபக்கங்களை எழுதிக் காட்டியுள்ளார்; அவர்களில் முன்னாள் போலீஸ் அதிகாரி ஆபத்சகாயம் குறிப்பிடத்தக்கவர்

## சுயம்வரம்

### கதைச் சுருக்கம்

பெரியோர்கள் நிச்சயித்த வண்ணம் நடைபெறும் திருமணங்கள் பழமை என்பதாலோ என்னவோ, ஒரே அலுவலகத்தில் பணியாற்றும் மாதவனும் மதனாவும் நிச்சயித்த வண்ணம் திருநீர்மலையில் திருமணம் நடைபெறுகிறது

மாதவன் நிச்சயித்த வண்ணம் நடைபெற்ற திருமணத்தைக் கண்டு கொதிப்பும் கோபமும் கொண்ட அவன் பெற்றோர்கள் கிராமத்திற்குப் புறப்படக் கிராமத்திலிருக்கும் மாமா மகாலிங்கம் டிசம்பர் சீசனுக்காக சென்னை வருகிறார் குடும்பத்துடன்.

மாமாவின் வரவால் மனம் கலங்கிய மாதவன், மதனாவை ஓர் அறையில் மறைத்து வைத்து மறுநாள் காலையில் அவள் சிநேகிதி அருணாவின் அறைக்கு அனுப்பி வைக்கிறான்

அருணா மாதவனைக் காதலித்தாள். அந்தக் காதல் தோல்வியில் முடிந்ததால், மாதவனை மதனாவிடமிருந்தும்; மதனாவை மாதவனிட மிருந்தும் பிரித்திட சினிமாவில் வரும் 'வில்லி'யைப் போல் சாகசங்கள், சூழ்ச்சிகள் புரிந்து இறுதியில் 'பாவம் அருணா!' என்று அனுதாபப் படும்படி ஆகிவிடுகிறாள்

இவளைப்போலவே ஆனந்தன், இவன் மதனாவைக் காதலித்தாள். அந்தக் காதல் கைகூடாத போது வேதனையுற்று மாதவன் மதனா உறவை முறித்திடக் கீழ்த்தரமான சில முயற்சிகளில் ஈடபட்டு முடிவில் தோல்விகளையே தழுவி அனுதாபத்துக்குரிய ஆனந்தனாகி விடுகிறான்

மாதவன் - மதனா, ஆனந்தன், அருணா இவர்கள் அனைவரும் ஒரே அலுவலகத்தில் பணியாற்றும் நண்பர்கள், நண்பிகள். இவர்களில் ஆனந்தனும், அருணாவும் மாதவனுக்கு எவ்வளவுதான் துரோகம் நினைத்த போதிலும், மாதவன் மட்டும் அவர்களை நண்பர்களாகவே நேசிக்கிறான்; நாளடைவில் திருந்துவார்கள் என்று எதிர்பார்க்கிறான்.

இத்தகைய நல்லெண்ணத்தினால்தான், தமது முதலிரவுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் வந்து சேர்ந்த மாமா மகாலிங்கத்தைக் கோபாவேசமாகப் பேசித் திருப்பி அனுப்பாமல் குழைந்து குழைந்து

பேசி வரவேற்கிறான், மாமா மகள் நீலாவைக் காதலிக்க முடியாமலும் கைவிட முடியாமலும் தடுமாறுகிறான, மணமாகாதவன் போல் நடிக்கிறான்

மாதவனின் நடிப்பை ஆனநதனும், அருணாவும் நன்கு பயன்படுத்தி மதனாவின் மனத்தைத் திசை திருப்ப முயல்கின்றனர் எனினும், மதனா மாதவனைத் திடமாக நம்புகிறாள் பின்னர் மாதவனும், மதனாவும் சந்திக்கிறபோது அருணாவும், ஆனந்தனும் அதுவரை ஆடிய நாடகம் அம்பலமாகிறது இருவரும் மாதவனின் தாக்குதலுக்குப் பயந்து ஓடுகின்றனர்

மாமன் மகள் நீலாவிடம் எவ்வளவுதான் மாதவன் நடித்த போதிலும் ஒருநாள் உண்மை வெளிபட்டு விடுகிறது! ஆம், அச்சிட்ட மாதவன் - மதனா திருமண அழைப்பிதழை நீலா காட்டியபோது எல்லாம் வெளிப்பட்டு விடுகிறது.

அப்பொழுது மாதவன் ‘நீ என்னை நினைத்துக் கொண்டிருந்த அளவுக்கு நான் உன்னை நினைத்தக் கொண்டிருக்கவில்லை!’ என்று ஒரே வரியில் உண்மையை உடைத்துச் சொல்லி விடுகிறான்

உண்மையைத் தெரிந்துகொண்ட பின்னர் ஊருக்குப் புறப்பட ஆயத்தமானார் மாமா மகாலிங்கம் அத்தருணத்தில் கண்கலங்கிய மாதவனைக் கண்ட நீலா ஆறுதல் கூறுகிறாள் அப்பொழுது கிராமத்தி லிருந்த மாதவனின் பெற்றோர்கள் வந்து சேருகின்றனர், ‘மாதவன் ஸ்கூட்டரில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறான்!’ என்று செய்தியோடு அவசரத் தந்தி வந்தது.

அவசரத் தந்திகள் கொடுப்பதிலும், மொட்டைக் கடிதங்கள் எழுதுவதிலும் கை தேர்ந்தவன் ‘அப்கோர்ஸ்’ ஆனந்தன் என்பதை நன்கு அறிந்தவனான மாதவன், ஆனந்தனைத் தேடிப் பிடித்து ஓர் உலுக்கு உலுக்கியபோது, உண்மையை ஒப்புக் கொள்கிறான்; அருணாதான் தந்தி அடிக்கச் சொன்னார்கள் என்னும் உண்மையை ஒப்புக் கொள்கிறான்.

ஆத்திரம் அடைந்த மாதவன் ஆனந்தனை அடி அடியென்று அடிப்பதைத் தூரத்திலிருந்து கவனித்துக் கொண்டிருந்த அருணா, ஆனந்தனுக்காக ஒரு டாக்சியை நிறுத்தி வைத்திருக்கிறாள் அவன் அடி தாளாமல் திரும்பியபோது அருணா ஆனந்தனை டாக்சியில் அழைத்துக் கொண்டு போகிறாள்.

மாதவனை எந்த விதத்திலாவது பழிவாங்க நினைத்த அருணா, ஆனந்தனின் யோசனையுடன் மதனாவை இரவு விடுதி ஒன்றுக்குக் கடத்திச் செல்கையில் கண்டுவிட்ட மாதவன் அவர்களைப் பின் தொடர்கிறான்; தற்செயலாக அவர்கள் செல்லும் விலாச அட்டை கிடைக்கிறது அவனுக்கு

அருணாவும், மதனாவும் சென்ற இடம் முன்னாள் நீதிபதி ஒருவரின் இல்லம் என்பதையும், அங்கு இரவு விடுதி நடபபதையும் அறிந்து திடுக்கிட்ட மாதவன், அந்த அநீதியைத் தொலைபேசி மூலம் காவல் துறைக்குத் தெரிவிக்கிறான் அதே நேரத்தில் மதனாவையும் சந்திக்கிறான்

மதனாவை அழைத்துக்கொண்டு மாதவன் இந்த இல்லத்திலிருந்து வெளிவரும் நேரத்தில் காவற் துறையினர் உள்ளே நுழைகின்றனர்

வீடு நோக்கி வரும் வழியில் மாதவனும், மதனாவும், அருணா, ஆனந்தன், நீலா ஆகியவர்களை நினைத்துப் பார்க்கின்றனர் ஆனந்தனும், அருணாவும் செய்த தீமைகளை மறநது அவர்கள் செயத நன்மைகளையே நினைத்துப் பார்க்கின்றனர், இதற்கெல்லாம் மேலாக நீலாவின் திருமுகமே தெய்வத் திருமுகமாக அவர்கள் முன் காட்சியளிக்கிறது!

## திறனாய்வு

இன்று எழுத்தாளர்களுக்கு எத்தனையோ கவர்ச்சிகள், சிலருக்கு அரசியல் கவர்ச்சி; சிலருக்குச் சினிமா கவர்ச்சி; வேறு சிலருக்கு வேறு ஏதேதோ கவர்ச்சிகள்! ஆனால், விந்தனுக்கு 'எழுத்துக் கவர்ச்சி'யைத் தவிர வேறு எந்தக் கவர்ச்சியும் இல்லை என்பதை எல்லாரும் அறிவார்கள்.

ஒரு காலகட்டத்தில் கலையும், இலக்கியமும் ஆளும் வர்க்கத்தை அறிமுகப்படுத்துவதற்கும், ஆனந்தப்படுவதற்கும் பெரிதும் பயன் பட்டன. அதற்கு ஆதரவாக இருந்த கலைஞனும், இலக்கியவாதியுமே சிறந்த படைப்பாளிகள் என்று நாட்டுமக்கள் நம்பினர்!

இத்தருணத்தில் அந்த 'ஆமாசாமி'களை அடையாளம் காட்ட முனைந்து மக்கள் கலைஞர்கள் முதலில் ஆளும் வர்க்கத்தையே அடையாளம் காட்டினார்கள்! எப்படி? கேலியும் கிண்டலுமாகப் பழித்துக்கூறிப் பரிகசிக்கும் முறையில்; சித்திரங்கள் தீட்டியும், சொற் சித்திரங்கள் புனைந்தும் மக்களைச் சிந்திக்கத் தூண்டினார்கள். அதன் பிறகே கலை, கலைக்காகவே என்ற மாயை மறைந்து, மக்களுக்காகக் கலையும் இலக்கியமும் மலர்ந்தன. இந்த மறுமலர்ச்சிக்கு முன்னோடி யாக இருந்தவர்களில் மக்கள் எழுத்தாளர் விந்தனும் ஒருவராவார்!

இந்தச் 'சுயம்வரம்' நாவலை விந்தன் வேறு பெயரில், வேறு தலைப்பில் 'தினமணிக் கதிர்' வார இதழில் தொடர் கதையாக எழுதினார். பின்னர் 'இராணி முத்து' மாத இதழ் இலட்சக்கணக்கிலும், ஸ்டார் பிரசுரம் ஆயிரக்கணக்கிலும் வெளியிட்டனர் அந்த வகையில் இந்த நாவல் மக்களிடையே விரிவான முறையில் விளம்பரமாகி

இருக்கிறது என்பதை நம்மால் அறியமுடிகிறது இந்த நாவலின் முன்னுரையில் விந்தன் கூறுகிறார்

''இது 'டீன் ஏஜர்'களுக்காக எழுதப்பட்ட நாவல்தான் என்றாலும், இதில் வரும் 'ஆனந்த'னைப் போலவோ, 'அருணா'வைப் போலவோ வேறு யாரும் ஆகிவிடக்கூடாது என்பதே என் விருப்பம் உங்கள் விருப்பமும் அதுவாகத்தான் இப்போதும் இருக்கும் என்பது என் நம்பிக்கை.

''பெண்களைப் பல வகையிலும் 'தெய்வமாகப் போற்றி வந்தது இந்த நாடு; 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம்!' என்று பாரதியைப் பொங்கியெழுந்து பாடச் செய்தது இந்த நாடு. அப்படிப்பட்ட நாட்டில் பெண்களை வெறும் 'போகப் பொருள்'களாகக் கருதி, அவர்களுடைய பெயர்களுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டும், ஒளிந்து கொள்ளாமலும் சில ஆண்கள் கவர்ச்சிகரமாக, வயிற்றுப் பிழைப்புக்காக எழுதும் கதைகள் அவற்றைக் கூசாமல் வெளியிடும் ஏடுகள் - கண்ணராவி, கண்ணராவி!

அந்த ரகத்தில் சேராத இந்த நாவலை அவர்கள் சொல்லும் 'டீன்ஏஜர்'சாரும் படிக்கலாம்!''

இன்று பலரால் எழுதப்படும் 'டீன் ஏஜ்' நாவல்களை யார் படிக்கிறார்களோ இல்லையோ, எழுதுபவர்களின் குடும்பங்களில் உள்ள மனைவி மக்கள்கூட படிக்க முடியாதபடி பல கதைகளில் கேவலமாகப் பெண்களைப்பற்றி எழுதப்படும் நிலையில், ''இந்நாவலை எல்லோரும் படிக்கலாம்!'' என்று விந்தன் தெளிவாகவும், தைரியமாகவும் சொல்லுகிறபோது அவர் எழுத்தில் நமக்கு மரியாதையும் மதிப்பும் ஏற்படுகிறது.

# 4
# புதிய வடிவங்கள்

கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதியுள்ள விந்தன் சோதனை முயற்சியாக சில புதிய வடிவங்களையும் எழுதியுள்ளார் அவற்றில் குட்டிக்கதைகள், ஓ மனிதா!, மிஸ்டர் விக்கிரமாதித்யன் போன்றவை அடங்கும்

தமிழில் ஏராளமான குட்டிக் கதைகள் இறக்குமதி ஆகியுள்ளன, கலில் ஜிப்ரன் முதல் காண்டேகர் வரையில், அதனால் விந்தன் 'அள்ளவில்லை போடுகிறேன்' என்று பல குட்டி கதைகளை எழுதியுள்ளார்

விந்தன் குட்டிக் கதைகள் கவிதைகள் போல சுருக்கமானவை, சுவையானவை, சிந்தனையைத் தூண்டுபவை உதாரணத்துக்கு சில கதைகள்

''பஞ்சத்தின் மேல் ஏறி 'பசி' ஊர்வலம் வந்து கொண்டிருந்தது''

''இனி எனக்கு இங்கே இடமில்லை என்கிறது அன்பு''.

''எனக்கும் அதே கதிதான் என்றது பண்பு, வெட்கம் இனி என்னை யார் பொருட்படுத்தப் போகிறார்கள் என்றது வேதனையுடன். வேட்கை, ரொம்ப நல்லதாய் போயிற்று என்றது. நீ என்று தொலைகிறாயோ அன்று தான் எனக்கு நிம்மதி என்றது மகிழ்ச்சியுடன் இதைக் கேட்டுக் கொண்டே வந்த மானம், மனிதன் போகிற போக்கைப் பார்த்தால் என்னைக் கூட துறந்து விடுவான் போலிருக்கிறது என்றது பெருமூச்சுடன்.

உனக்கே அந்தக் கதி என்றால் எனக்கு என்ன கதி என்றது மரியாதை

அப்போது ஈகை தலைகுனிந்தபடி அங்கே வர உன்னுடைய நிலையும் அதே நிலைதானா? என்று கேட்டது இரக்கம்.

அதில் வேறு சந்தேகமா என்றது பொய் இல்லை அப்பனே, இல்லை என்னைப் பொறுத்தவரை அதில் எனக்கு சந்தேகமே இல்லை. ஏனெனில் பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பது எனக்குத் தெரியும் என்றது

இந்தச் சமயத்தில் யாரோ கலகலவென்று நகைக்கவே, ''யார் அது!'' என்று கேட்டுக்கொண்டே திரும்பிப் பார்ததது ஊக்கம் கவலை வேண்டாம், உங்கள் அனைவரையும் காப்பாற்ற நான் இருககிறேன் என்றது சடடம்

''பூ நீ தானா எங்களை காப்பாற்றுவது ஒரு பக்கம் இருக்கட்டும், முதலில் உன்னை நீயே காப்பாற்றிக் கொள்ள முடிகிறதா பார்! என்றது அது

''அதோ பார்! அந்தப் பட்டினியை! அரிசி வைத்துக் கொண்டே இல்லை என்று சொன்னதற்கு அது ஒரு வியாபாரியைக் குத்தி கொன்று விட்டது'' என்றது ஊக்கம்

'' இவ்வளவுதானே இதோ பார் அந்தப் பட்டினியை நான் என்ன செய்கிறேன் என்று கூறி உரைத்துக் கொண்டே விரைந்தது சட்டம் அதற்குள் அந்தப் பட்டினி தன்னையும் குத்திக் கொன்று விடவே 'இப்போது அதை உன்னால் என்ன செய்ய முடியும், என்று கேட்டது ஊக்கம்

ஒன்றும் செய்ய முடியாது அப்பனே ஒன்றும் செய்ய முடியாது! என்று தன் தோல்வியை ஒப்புக் கொண்டது சட்டம்

பசி, பட்டினியால் மக்கள் படும் துன்பத்தை அரிசி, இல்லை என்று சொன்னவனை கொலை செய்துவிட்டு தன்னையும் மாய்த்துக் கொள்ளும் அவலத்தை, சமூகச் சிந்தனையோடு சித்தரிக்கிறது 'சட்டம்' என்ற கதை

''தனித்து வாழுங்கள்; தன்மானம் பெறுங்கள்''

''கூடி வாழ்வது கோழைத்தனம்'' என்று தத்துவம் பேசும் ஓநாய் (ஒருமைப்பாடு)

''நாய் வாலை ஆட்டி பிழைக்கிறது,

மனிதன் தலை ஆட்டி, பிழைக்கிறான்'' என்றது பூனை (வாலும் தலையும்)

குப்பையில் கொட்டப்பட்ட இரண்டு பழங்கள் பேசிக் கொண்டன

''நாசமாப் போச்சு! வாழும்போது இல்லாத சமதர்மம் சாகும்போது எதற்காம்? என்றது

ஆரஞ்சு ''ஸ் பேசாதே! மனிதர்களுக்குச் சமதர்மம் சுடுகாட்டில் கிடடுவதுபோல் நமக்குக் குப்பைத் தொட்டியிலாவது கிட்டட்டும் என்று சொலலி அதன வாயை அடக்கிறது திராடசை (சமதர்மம்)

கடடடம் சிரித்தது, ஏன் சிரிக்கிறாய் எனறு கேட்டது சாரம்

ஒனறும் இல்லை பிறர் கணணில் படாமல் மறைக்கப்படடும் கூட அஸ்திவாரம் தன்னைப்பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லிக்

கொள்ளாமல இருக்கிறதே அதைப்பற்றித்தான் சிரிக்கிறேன் என்றது கட்டடம் (அறியாமை)

திருவள்ளுவரின் குறள்போல் அரிய பெரிய செய்திகள் உள்ளடக்கி உயர்ந்து நிற்கின்றன ஒவ்வொரு கதையும்

கதைகளில் வெளிப்படும் கருத்துக்கள் மனிதன் சமூகத்தை உயர்த்தும் கருத்துக்கள் இத்தகைய படைப்பின் மூலம் விந்தனும் இலக்கிய உலகில் தகுதியான இடத்தைப் பெறுகிறார்

விந்தனின் குட்டி கதைகள் வையத்தில் வாழ்வாங்கு வாழும் வள்ளுவரின் குறள்கள் போல் வாழும் வகை பெற்றவை! எதையும் மூடி மறைத்து பேசும் மனிதனை விட எதையும் வெளிப்படையாக உண்மையாக பேசும் விலங்கினங்களே மேலானது என்கிற எண்ணத்தில் 17 கதைகளில் ஆடு, மாடு, குரங்கு, கிளி ஆகியவை களைக் கொண்டு பேச வைத்திருக்கிறார்

ஆறறிவு படைத்த மனிதனைவிட ஐந்து அறிவு படைத்த விலங்கினங்களின் பேச்சை காது கொடுத்து கேட்க முடியவில்லை அவ்வளவு தெளிவாக சமூகச் சிந்தனையோடு பேசுகின்றன உதாரணத்துக்கு மாடு பேசுவதை கேளுங்கள்; அதுவும் பசு மாடு பேசுவதைக் கேளுங்கள்

''வெள்ளைக்காரன் ஆதிக்கத்திலிருந்து உப்பை மீட்க வேண்டு மென்று நினைத்தார் மகாத்மா அதற்காக அவர் எங்கே சத்தியாக்கிரகம் செய்தார்? - கடற்கரையில்''

''அந்நிய நாட்டுத்துணிகளின் பிடியிலிருந்து உள்நாட்டுத் துணி களைக் காக்க வேண்டுமென்று நினைத்தார் - காந்திஜி அதற்காக அவர் எங்கே சத்தியாக்கிரகம் செய்தார்! - அந்நியத்துணிகள் விற்கும் கடைகளில் ''

''மதுவரக்கனிடமிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தார் மகாத்மா அதற்காக அவர் எங்கே சத்தியாகிரகம் செய்தார்! - கள்ளுக்கடைகளில் ''

''என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைப்பதாகச் சொல்லிக் கொள்ளும் நீங்கள் எங்கே சத்தியாக்கிரகம் செய்கிறீர்கள்? மாடடிக்கும் தொட்டியிலா? இல்லை, பாராளுமன்றக் கட்டடத்தில் ஒரு காலத்தில் தெய்வத்தின் பேரால் எத்தனையோ யாகங்கள் நடந்து கொண்டிருந்தன அந்த யாகங்களில் ஆயிரமாயிரம் ஆடுகள் பலியிடப் பட்டு வந்தன அந்த யாகங்களிலிருந்து ஆடுகளை காப்பாற்ற நினைத்த புத்தர் என்ன செய்தார்? ஆட்டை நோக்கி வந்த கத்திக்கு கீழே தன் கழுத்தை நீட்டினார் அதனால் என்ன நடந்தது? ஆடும் பிழைத்தது, அவரோடு தருமம் பிழைத்தது ''

''என் கவலை என்ன தெரியுமா? பால் மறந்த மாட்டை வாங்க அடிமாட்டுக்காரன் என்று ஒருவன் இருப்பது போல, வயசாகிப் போன உங்களை வாங்க அப்படி ஒருவன் இல்லையே 'என்பது தான் ஓ, மனிதா எப்படி இந்தப் பிள்ளை மனம்? சுதந்திரம் உன்னுடைய 'பிறப்புரிமை'யாக இருக்கலாம் ஆனால் சொத்துரிமை உன்னுடைய பிறப்புரிமை அல்ல; அது இயற்கையின் பிறப்புரிமை அந்த உரிமையை நீ இயற்கையிடமிருந்து அபகரித்தாலும் - அதன் பலனை நீ இப்போது நன்றாக அனுபவிக்கிறாய்''

''சொத்துரிமை வேண்டுமானால் நிம்மதியை விடு; நிம்மதி வேண்டுமானால் சொத்துரிமையை விடு'' (சிட்டுக்குருவி கேட்கிறது)

சலவைத்தொழிலை மேற்கொண்டு ''ஜாதிக்கு ஒரு தொழில் இல்லை'' என்பதை நிரூபிக்க ஒரு சர்மாவோ சாஸ்திரியோ எங்கே துணியப் போகிறார்?'' என்னை 'ஆகாயத் தோட்டி' என்று இடித்துரைக்கும் மனிதனே! உங்களிடையே உங்களில் ஒருவனாக நடமாடும் தோட்டியை நீ நகர சுத்தித் தொழிலாளி என்று சொல்லி விட்டால் சமூகத்தில் அவனுக்குள்ள இழிவு அவனை விட்டு போய் விடுமா?

ஒரு நாளும் போகாது

அதனால்தான் 'வைசிய'ரான மகாத்மா தாமே தோட்டி வேலை செய்து கூட்டினார் அவரையே டாக்டர் அம்பேத்கர் கேட்டார்

''அரிஜனங்கள் கடவுளின் குழந்தை என்றால் மற்றவர்கள் யாருடைய குழந்தைகள். இதிலிருந்து என்ன தெரிகிறது? புறப்புரட்சி மூலம் யாரும் எதையும் சாதிக்க முடியாது அகப் புரட்சி மூலமே சாதிக்க முடியும் என்று தெரியவில்லை?''

அந்த அகப்புரட்சியை நீ எப்போது செய்யப் போகிறாய்? (காகம் கேட்கிறது)

மனிதனோடு இரண்டறக் கலந்து வாழும் காகம், குருவி, கிளி போன்றவை அவனுடைய பலங்களை - பலவீனங்களை நன்கு அறிந்தவை அவன் பேசும் அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடுவுடையவை. அதனால்தான் காகம் அம்பேத்காருக்கும் மகாத்மாவுக்கும் நடந்த அரிஜன் பிரச்சனை பற்றி பேசுகிறது' சொத்துரிமையைப் பற்றி சிட்டுக்குருவி பேசுகிறது இப்படி 'வாய்' இல்லாத பூச்சிகள் பேசும் சமூகப் பிரச்சனைகளைக் கேட்டு 'வாய்' உள்ள மனிதன் வாயை அகலத்திறந்து பார்க்கிறான் அதற்குத் துணையாகவும் தூண்டு கோலாகவும் உள்ளார் விந்தன்.

# 5
# விந்தனின் கவிதை உலகம்

ஆரம்ப காலத்தில் விந்தன் கவிதைகள் தான் எழுதினார். பின்னர் கவிதை எழுதுவதை கைவிட்டு கதைகள் எழுத ஆரம்பித்தார்

ஒரு கால கட்டத்தில் நாட்டில் அரிசி பஞ்சம் ஏற்பட்டபோது 'அரிசி' என்ற பெயரில் குமுதம் பத்திரிகையில் கவிதை ஒன்று எழுதி அதை பலரும் படித்துப் பாராட்டினார்கள்.

1950 பின்னர் சினிமாவுக்குப் போன விந்தன் சினிமாவில் பாடல்கள் எழுதினார் ஏழு படங்களுக்கு வசனம் எழுதியுள்ள விந்தன் ஆறு பாடல்கள் எழுதியுள்ளார். அதில் மூன்று பாடல்கள் பிரபலமானவை

'அன்பு' என்ற படத்தில் ஒலிக்கும் பாடல்·

**சுத்தாத இடமில்லை கேட்காத பேரில்லே**
**சோத்துக்கு வழிகாட்ட ஆளில்லே**
**செத்தபின்பு சிவலோகம் செல்ல வழிகாட்டும்**
**பித்தர் ஏனிந்த நாட்டிலே**
**ஒண்ணும் புரியவில்லை தம்பி எனக்கு**
**ஒண்ணும் புரியவில்லை தம்பி**
**கண்ணு ரெண்டும் சுத்துது காதை அடைக்குது**
**கஞ்சி கஞ்சி என்று வயிறு கெஞ்சிக் கெஞ்சி கேட்குது**

கூண்டுக்கிளி படத்தில்

**கொஞ்சுங் கிளியான பெண்ணைக்**
**கூண்டுக்கிளி ஆக்கிவிட்டுக்**
**கெட்டி மேளம் கொட்டுவது**
**சரியா? தப்பா?**

குலேபகாவலி

**மயக்கும் மாலைப்பொழுதே நீ போ, போ!**
**இனிக்கும் இன்ப இரவே நீ வா, வா!**
**பன்னீர்த் தெளிக்க பனி பெய்யுமே!**
**பசும்புல் படுக்கப்பாய் போடுமே!**

திரை உலகில் இன்றும் சினிமா ரசிகர்களால் ரசித்துப் பாடப் படுகின்ற இப்பாடல்கள் விந்தனுக்குப் புகழ் சேர்த்த பாடல்கள்.

1956இல் விந்தன் 'பசி கோவிந்தம்' என்ற சிறுநூல் எழுதினார் அந்த நூலைப பறறி டாகடர் ஆ ரா வெஙகடாசலபதி, புலவர் த கோவேநதன் எழுதிய புதுநாநூறு என்ற நூலுக்கு எழுதியுள்ள முன்னோடடத்தில் குறிப்பிடுகிறார்

''இராஜாஜியின பஜகோவிந்தத்தை நையாண்டி செய்து விந்தன் 'பசி கோவிந்தம்' எழுதினார் இராஜாஜி அரசியல் தலைவராகவும் இந்தியாவின் நடுவன் ஆளுநராகவும் இருந்ததால் அவருக்கு இலக்கிய பீடத்தில் இடம் கிடைத்துவிட்டது அவருடைய பஜகோவிந்தத்தை வாங்கு வாங்கு எனறு வாங்குகிறார் இயல்பாகவே விந்தன் ஒரு சிறுகதையோ நாவலையோ எழுதும் போதுகூட ஆசிரியர் கூற்றாகப பகுதிக்கு ஒரு வரியேனும் எழுதி சமூக இழிவுகளையும் ஒழுக்கங் களையும் நையாண்டி செய்யாமல் விந்தனுக்கு கதையை நடத்திச் செல்லத் தெரியாது அப்படி இருக்கையில் நையாண்டி செய்வதற் காகவே எழுதப்பட்ட 'பகடி' நூலில் கேட்க வேண்டுமா? தன்னுடைய நூலைப் புடை நூல் என்று குறிப்பிட்டாலும் குறிப்பிட்டார் 'புடை புடை' என்று புடைத்து விடுகிறார் விந்தன்''

'பசி கோவிந்தத்தில் முப்பத்தியொரு பாடல்கள் இருக்கின்றன உதாரணத்துக்கு சில பாடல்கள்

**பசிகோவிந்தம் பசிகோவிந்தம்**
**பசிகோவிந்தம் பாடு**
**பரலோகத்தில் இடந்தேடலாம்**
**பசிகோவிந்தம் பாடு!**
**படிக்காதிரு படிக்காதிரு**
**படிக்காதிரு பயலே!**
**படித்தால் எமன் வரும்போதுனைப்**
**பகவான் கைவிடுவார்**

**பணமேனடா பணமேனடா**
**பணமேனடா பயலே?**
**பணத்தாசை வளர்ந்தாலது**
**பணக்காரர் மேல் பாயும்!**
**படுவாய் தினம் படுவாய் தினம்**
**படுவாய் தினம் பாடுபடுவாய்**
**பசித்தாலது பகவான் செயல்**
**பஜகோவிந்தம் பாடு!**

''வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடும் பெருங்கடல் வாலிபம்; பசிமிக்க பாரதத்தில் வறுமைமிக்கோர் அதைக் கடப்பது கடினம், ஆயினும் வயலில் சிறு வாய்க்காலைத் தாண்டுவதுபோல வாழ்க்கை யில் சிலர் வாலிபக் கடலைத் தாண்டி விடுகின்றனர் அதற்கேற்ற

வசதியும் அவர்களுக்குப் பரம்பரை பரம்பரையாகவே இருந்து வருகிறது சுவாதீனத்தால் சோம்பேறித்தனத்தையும் சுகானுபவத்தால் சொர்க்கலோக இச்சையையும் வளர்தது வரும அவர்களுடைய பரம்பரை சொத்துகளையும் பாராதீனப்படுத்தி பசிக்குப் பலியாகும் கோடானுகோடி மக்களைப் பாதுகாக்க ஏதாவது செய்ய வேணடுமே என்கிற நோக்கத்தால் எழுந்ததே இந்தப் பசிகோவிந்தம் பாடடு!

**''பாரதம் வாழி பாரதம் வாழி**
**பசிகோவிந்தம் பாட பசிதந்த**
**பாரதம் வாழி!''**

'தினமணி கதிர்' ஏட்டில் மகாபாரதக் கதையை 'பாட்டினில் பாரதம்' என்ற பெயரில் காவியமாக எழுதினார் அதைப் படித்த சிலர் காவியம் எழுதும் அளவுக்கு விந்தனுக்கு தமிழில் புலமை உள்ளதா என்று வினாயெழுப்பினர். ஆனால், புலவர் த கோவேந்தன் போன்றவர்கள், உரைநடையை எளிமையாக எழுதியது போலவே காவியத்தையும் எளிமையாக இலக்கணம் பிறழாமல் எழுதுகிறார் என்று பாராட்டினர்

'கதிர்' ஏட்டில் 'பாட்டினில் பாரதம்' தொடர் வந்து கொண்டிருந்தபோது ஆசிரியர் ஏ என் சிவராமன் விந்தனைப் பார்க்கும்பொழுதெல்லாம் தொடரை பாராட்டுவதோடு ''தொடர்ந்து எழுதுங்கள்!'' என்று உற்சாகமூட்டி பாராட்டுவார்

பலரின் பாராட்டுக்குரிய 'பாட்டினில் பாரதம்' இன்னும் நூலாக வரவில்லை

# 6
# கட்டுரைகள்

விந்தன் கதைகள் எழுதிய அளவு கட்டுரைகள் எழுதியதில்லை 1947இல் தொழிலாளர் பிரச்சனையை முன் வைத்து 'வேலை நிறுத்தம் ஏன்?' என்னும் சிறு நூலை ஒரே இரவில் எழுதி வெளியிட்டார் அந்த நூல் இன்னும் தொழிலாளர்களின் பிரச்சனைக்கு ஏற்றதாகவும் போராடுவதற்குத் தூண்டுதலாகவும் இருப்பதால் அந்நூலை ஆசிரியரின் அனுமதியின்றியே அச்சிட்டு தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறார்கள் தொழிற்சங்க தலைவர்கள்.

சென்னை மாநகராட்சியை தி மு க கைப்பற்றிய காலத்தில் சுதேசமித்திரன் ஏட்டில் 'சேரிகள் நிறைந்த சென்னை மாநகரம்' என்கிற தலைப்பில் தொடர் கட்டுரையை எழுதினார் அச்சமயத்தில் விந்தன் சேரியில் வாழும் ஏழை எளியவர்களை சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டு பத்திரிகையில் எழுதினார் அதன் மூலமே சென்னையில் எத்தனை சேரிகள் உள்ளன என்பதனையும் அவரகளின் அவலநிலைமையும் அறிந்தார் விந்தன் (அந்தக் கட்டுரைகள் இன்னும் நூலாக வெளிவரவில்லை) விந்தன் அவ்வப்போது பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள், அவரின் நூலுக்கு எழுதிய முன்னுரைகள் அனைத்தையும் தொகுத்துத் தந்தேன். ''விந்தன் கட்டுரைகள்'' என்ற தலைப்பில் 1998ல் கிறிஸ்துவ இலக்கிய சங்கம் வெளியிட்டார்கள் .

விந்தன் கட்டுரைகள் சிலவற்றை பார்க்கலாம்

''உலகத்தில் மனிதன் இறப்பதற்கு எத்தனையோ வழிகளை கையாள்கிறான் விஷம் குடிப்பது. வெந்தணலில் வீழ்வது, குளத்தில் மூழ்குவது கோபுரத்தின் உச்சியிலிருந்து குதிப்பது, தூக்குப் போட்டுக்கொள்வது, நாக்கைப் பிடுங்கிக் கொள்வது, கத்தியின் துணையை நாடுவது, காரிலோ ரயிலிலோ மாட்டிக் கொள்வது இப்படி எத்தனையோ வழிகள்.

புதுமைப் பித்தன் இறப்பதற்கு இந்த வழிகளையெல்லாம் கையாளவில்லை. அவர் எழுதினார்

ஆம், வாழ்வதற்காக எழுதவில்லை, சாவதற்காக எழுதினார் எனக்குத் தெரிந்தவரை அவர் செத்து போவதற்கு காரணம் இதுதான்!

புதுமைப்பித்தன் புகையிலையை, புகையாகவும், காரமாகவும் பயன்படுத்தினார். அதுதான் அவரின் உயிரைக் குடித்து விட்டது என்றார்கள் கவி-பாரதியார் இறந்ததற்கு காரணம் 'கஞ்சா' என்று சொல்லவில்லை? அந்த மாதிரி.

*(புதுமைப்பித்தனும் புகையிலையும் - பொன்னி - 1951)*

***

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'குடும்ப விளக்'கான திருமதி பழனியம்மாளுடன் ஓர் உரையாடல்.

''உங்கள் கணவர் தாம் எழுதிய குடும்ப விளக்கை உங்களுக்குப் படித்துக் காண்பித்தாரா? அதில் வரும் முதியோர் காதலைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''நினைக்கிறதென்ன? வாழ்க்கையில் உள்ளதைத்தானே எழுதியிருக்கிறாரு குடும்பவிளக்கு மட்டுமல்ல, சினிமாவுக்கு வசனம் எழுதினாக்கூட அதை எங்களுக்குப் படிச்சுக் காண்பிப்பாரு. நாங்க ரசிக்கிறோமா கதை எங்களுக்கு விளங்குகிறதா என்று கேட்பாரு''

''ரொம்பக் கோபக்காரரான அவர் உங்களிடம் எடுத்ததெற்கெல்லாம் கோபப்படுவாரா?''

''அப்படி ஒண்ணுமில்லே. கோபக்காரர்னு பேரு ஆனா குழந்தை மாதிரி பழகுவாரு அதனால்தான் இத்தனைபேரு புகழ் ஏற்பட்டதுன்னு நினைக்கிறேன் அவரின் கடைசி காலத்தைப் பற்றி அந்தக் கதையை ஏன் கேட்கிறீங்க, மெட்ராசிலே பாரதியார் கதையையும், பாண்டியன் பரிசையும் படமாக்க அவரு கம்பெனி ஆரம்பிச்சாரு ஏறக்குறைய அறுபது நாளு ராவும் பகலா உட்கார்ந்து எழுதி முடிச்சாரு அதனாலே மார்வலிகூட வந்துட்டுது. அந்த வலியிலேயும் எடுத்த காரியத்தை நிறைவேற்ற படாதபாடு பட்டாரு. அவரை யாரும் கவனிக்கவில்லை. கை கொடுக்கவும் இல்லே. அதுக்குள்ளே மார்வலி அதிகமாப் போச்சு. ஆஸ்பத்திரியிலே சேர்த்தோம். அங்கேயே காலமாயிட்டாரு'' (தினமணி கதிர்)

புதுமைப் பித்தனும், பாரதிதாசனும் எழுதி எழுதியே கவனிப்பாரின்றி மரணம் அடைந்தார்கள் என்பதை இக்கட்டுரைகள் நமக்கு காட்டுகின்றன.

விந்தன் விரும்பி படித்த புத்தகங்களில் மார்க்சிம் கார்க்கியின் 'தாய்' ஒன்று அதைப்பற்றி சில தகவல்கள்.

'' .இமயமலை வீழ்ந்தது போல் என்று எக்காளத்தோடு பாடினானே பாரதி அந்த - அரசின் வீழ்ச்சிக்குக் கார்ல் மார்க்கம்

வித்திடிருக்கலாம் ஆனால் அதைக் கட்டி வளர்த்த ரஷ்ய எழுத்தாளர் களில் முக்கியமானவன் முதன்மையானவன் மாக்சிம் கார்க்கி-அவன் சொன்னான்

'மனிதன்' ஆகா அவனுடைய பெயர்தான் எவ்வளவு கம்பீரமாக ஒலிக்கிறது சர்வ வல்லமை பொருந்திய அவனுக்கு மேலாக ஒருவனை வேறு எதையும் என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை

ஆம், மனிதாபிமானம் மிக்க மார்க்சிம் கார்க்கியின் 'தாய்க்கு' மேலாக வேறு ஒரு நாவலை என்னாலும் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லைதான். (*ஆனந்தவிகடன் - 1961*)

விந்தனிடம் ''நாவல் எப்படி பிறக்கிறது?'' என்று கேட்டதற்கு அவர் பதில் இதோ.

''என்னைப் பொருத்தவரை நாவல் பிறந்த கதையை நான் சொல்லப் போவதில்லை நாவல் பிறக்கும் கதையைச் சொல்லப் போகிறேன்.

''அதோ, நாற்பது வருட காலம் இரவும் பகலுமாக மாறி மாறி உழைத்த பிறகு, ஓய்வு பெற்று வருகிறான் ஒரு மில் தொழிலாளி யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பது போல் அவனுக்கு முன்னால் 'லொக் லொக்' என்ற இருமல் ஓசை வருகிறது அவனை நோக்கிக் குடிசையின் வாசலில் நின்ற அவன் மனைவி வரும்போது சும்மா வரமாட்டார் ஆயிரமோ இரண்டாயிரமோ கொண்டு வருவார், கல்யாணத்துக்குத் தயாராகப் பத்து வருடங்களாகக் காத்திருக்கும் பெண்ணுக்கு கல்யாணம் செய்து வைத்துவிடலாம். பையன்களில் யாரையாவது பத்து வகுப்பு வரையிலாவது படிக்க வைக்கலாம். குடிசையைப் பிரித்து கட்டலாம் மாற்றிக் கட்டிக் கொள்ள மறுசேலை வாங்கலாம். மாடும் இரண்டு பிடித்து கொள்ளலாம் என்றெல்லாம் எண்ணமிட்டாள்.''

அவன் அவளை நெருங்கினான்

'லொக் லொக்'

கொஞ்சம் வெந்நீர் கொண்டு வரட்டுமா என்று கேட்கிறாள் அவள். கொண்டு வா என்றான்

வெந்நீர் வருகிறது

அதற்குமேல் ஆவலை அடக்கமுடியவில்லை அவளால்.

''என்ன கிடைத்தது?'' என்கிறாள் அவள்

'டிபி ' என்கிறான் அவன்

அப்பொழுது அவள் விடுகிறாளே பெருமூச்சு அந்த மூச்சிலிருந்து என் நாவல பிறக்கிறது''

இவ்வாறு ஏழை எளியவர்கள், துன்பப்படுவோர் விடும் பெருமூச்சில் இருந்து என் நாவல் பிறக்கிறது என்கிறார் விந்தன் (*கல்கி - 1961*)

இவ்வாறு கட்டுரைகள் அனைத்தும் கருத்தோவியங்களாகத் திகழ்கின்றன.

# 6
# பத்திரிகை உலகில் புரட்சி

இளம் வயதில் நண்பர் ராஜாபாதர் அச்சுக்கோர்க்கவும் தாம் ஆசிரியராகவும் இருந்து 'வீரசக்தி' என்ற வார இதழை வெளியிட்டார் விந்தன் அந்த முயற்சி 1954 ஆகஸ்டில் மனிதன் என்னும் மாத இதழை வெளியிட முன்னுதாரணமாகும். (கல்கி இதழும் ஆகஸ்ட் மாதம்தான் வெளியிடப்பட்டது)

விந்தனின் மனிதன் பத்திரிகை உலகில் ஒரு புரட்சிகரமான ஏடாக இருந்தது. அதில் வெளியான செய்திகளிலும் சித்திரங்களிலும் புதுமையும் புரட்சியும் இணைந்து வெளிப்பட்டன.

டாக்டர் மு.வரதராசனார், பன்மொழிப்புலவர் கா. அப்பா துரையார், கவிஞர் தமிழ்ஒளி, எம்.எல். சபரிராஜன், ஜெயகாந்தன், விந்தன் போன்றவர்களின் எழுத்துக்கள் பத்திரிகையை சிறப்பாக்கின.

இதோ ஒரு சுயமரியாதைக்காரர்!, கடவுளைப் படைத்த மனிதன், தெரு விளக்கு, போன்ற பகுதிகள் பத்திரிகையின் தரத்தை நோக்கத்தை வெளிப்படுத்தின 'மனிதன்' பத்திரிகையைப் பற்றி 'கல்கி' எழுதுகிறார்.

''மனிதன்'' வாழ்க!

தமிழர் பண்பாட்டில் உயர்நிலை எந்த பாடல் வரியிலாவது இருக்கிறது என்றால் அது ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் கவிதை வரிதான் இந்த அமுத வாக்கியத்தை இலட்சியமாக அமைத்துக் கொண்டு தோன்றியிருக்கும் 'மனிதன்' மாதப்பத்திரிகைக்கு வரவேற்பு அளித்து வாழ்த்து கூறுகிறோம்.

'மனிதன் எதனால் உயர்கிறான்?' என்ற கேள்வியைத் தலைப்பாகக் கொண்டு இப்பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்று நேயர்களின் கவனத்தில் இருக்கலாம்.

மனிதன் உழைப்பினால் உயர்கிறான்; ஊக்கத்தினால் உயர்கிறான்; ஒழுக்கத்தினால் உயர்கிறான்; அன்பினால் உயர்கிறான்; அறிவினால் உயர்கிறான் என்றெல்லாம் பதிலும் தரப்பட்டிருக்கிறது. மனிதன் உயர்வதற்கு உரிய இந்த நற்பண்புகளையெல்லாம் மனிதன் பத்திரிகை பெற்று வெளி வந்திருக்கிறது என்பதைப் பார்க்க மிக்க மகிழ்ச்சி உண்டாகிறது.

உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் உயர்ந்தவரான ஸ்ரீ.வி.கோவிந்தன் (விந்தன்) இப்பத்திரிகையின் ஆசிரியராவார் அவருடைய பண்புகள் பத்திரிகையிலும் மலர்ந்து திகழ்கின்றன

ஏதேனும் ஒரு துறையில் ஒருவர் புதிய பாதை வகுத்து அதில் வெற்றி கண்டால் அதே பாதையில் இன்னும் பலர் போக முயற்சிப்பது உலக இயல்பு. அது தமிழ்நாட்டில் இருக்கத்தான் செய்யும் ஆனால் ஆசிரியர் 'விந்தன்' ஆரம்பித்து நடத்தும் இந்தப் பத்திரிகை பழைய பாதை எதையும் பின்பற்றாமல் தனக்கென்று புதிய பாதை ஒன்றை வகுத்துக் கொண்டிருக்கிறது

கட்டுரைகள், கதைகள் குறிப்புகள், படங்கள் முதலிய எல்லா 'அம்சங்க'ளிலும் தனிச் சிறப்பு காணப்படுகிறது.

முக்கியமாக 'இதோ ஒரு சுயமரியாதைக்காரர்' என்னும் தலைப்பை உடைய பகுதி பத்திரிகை உலகத்துக்கே ஒரு புதுமை என்று சொல்லும்படி இருக்கின்றது

இளம் பிராயத்தில் ஒரு காலை இழந்துவிட்ட ஒரு மனிதர் வாழ்க்கையில் நிராசை அடைந்து விடாமலும் பிறரை அண்டிப் பிழைக்காமலும் சுயமாகத் தொழில் செய்து சுயமரியாதையை நிலைநாட்டிக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வருகிறார். இந்த உண்மை வாழ்க்கைக் குறிப்பு உயர்தரமான பத்திரிகை அம்சமாகும். மனித குலத்தை எப்படி உயர்த்தலாம் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

உள்ளே ஒரு ஹாஸ்யத்துணுக்கு இரண்டு ஆபீஸ் குமாஸ்தாக்கள் ஒரு பெரிய கட்டடத்தைப் பார்த்து பேசிக் கொள்கிறார்கள் இவ்வளவு பெரிய கட்டடத்தை கட்டுவதற்கு எவ்வளவு குமாஸ்தாக்களின் எலும்பை நொறுக்கி அஸ்திவாரம் போட்டிருக்க வேண்டும் என்று வியப்படை கிறார்கள்.

இதிலிருந்து பத்திரிகையின் கொள்கையும் போக்கும் எப்படி இருக்கும் என்று ஒருவாறு யூகிக்கலாம். உழைப்பாளிகளின் கட்சியை வன்மையாக எடுத்துச் சொல்வதற்கு மனிதன் ஒரு சிறந்த சாதனமாக விளங்கும் என்று எதிர்பாக்கலாம். (*கல்கி 1.10.1954*)

விந்தன் எழுத்துக்களை அங்கீகரித்து பாராட்டியது போலவே மனிதன் இதழையும் பாராட்டினார் இதற்கெல்லாம் நன்றியாக,

என்னை மனிதனாக்கிய 'மனிதன்' என்று பேராசிரியர் 'கல்கி'க்கு மனிதன் இதழை காணிக்கை ஆக்கினார் விந்தன்

# 7
# திரையுலக நாயகர்கள்

**வாழ்க்கை வரலாறு**

பத்து ஆண்டு சினிமா வாழ்க்கையில் பெரிதும் பாதிக்கப்பட்ட விந்தன் சினிமாவை மறந்து மீண்டும் பத்திரிகை துறைக்கு போனபோது ஏழிசை மன்னர் எம் கே.டி. பாகவதரைப் பற்றி எழுதுமாறு பணித்தபோது சற்று தயங்கினார். எனினும், எம்.கே.டி. பாகவதரின் சாதனைகளை எண்ணிப் பார்த்து எழுத ஆரம்பித்தார். எம் கே.டி பாகவதரின் பல சாதனைகளை சுவைபட சொல்லும் இந்த நூலில் இருந்து சில பகுதிகள்.

எம் கே.டி.பாகவதரைப் பற்றி விந்தன் தான் முதன் முதலில் எழுதினார்.எம்.கே.டி பாகவதரின் படங்களில் துணை நடிகராக நடித்தவரும் பிற்காலத்தில் தமிழகத்தில் முதல் அமைச்சராக வளர்ந்தவருமான திரு. எம்.ஜி.ராமசந்திரன் ஒரு சுவையான நிகழ்ச்சியை இங்கு விளக்குகிறார்

''பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் திருமதி. டி.ஆர். ராஜகுமாரி அவர்களின் புதுமனை புகுவிழா அன்று சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. திரு சி.எஸ். ஜெயராமன் பாடிக் கொண்டிருந்தார் மக்கள் வெள்ளம் திரண்டிருந்தார்கள். 'கார்த்திகை விளக்குகள்' வைப்பது போல சுற்றிலும் மின்சார விளக்குகள் போடப் பட்டிருந்தன. மூலை முடுக்குகளில் உள்ளவர்கள் முகங்கள் எல்லாம் தெரியும்படியாக அமைக்கப்பட்டிருந்தன. நானும் உட்கார்ந்திருந்தேன். என்னை மற்றவர்கள் கவனிக்கும் அளவுக்கு நான் விளம்பரம் பெறவில்லை. ஆனால் மற்றவர்களின் செயலை, ஆற்றலை கண்டு சிந்திக்கும் மனப்பக்குவம் பெற்றிருந்தேன்

சி எஸ் ஜெயராமன் நன்றாகப் பாடிக் கொண்டிருந்தார், மக்களும் வெகுவாக ரசித்து அவ்வப்போது கை தட்டித் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். திடீரென்று கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது என்ன குழப்பம்? என்று திரும்பி பார்த்தேன். கை தட்டல்கள் ஒலித்தன ஆமாம், பாகவதர் கூட்டத்தில் ஒரு பக்கத்தில் வந்து கொண்டிருந்தார்கள்!

அவரைச் சுற்றி ஏதோ ஒரு ஒளி வீசிக் கொண்டிருந்ததாக நான் அப்போது உணர்ந்தேன்.

மேடைக்கு அருகில் அவருக்காக நாற்காலி போடப்பட்டிருந்தது சி எஸ் ஜே தொடர்ந்து பாடிக்கொண்டிருந்தார்

பாகவதர் அவர்கள் எங்கெங்கே தலையாட்டினார்களோ ரசித்தார்களோ அங்கெல்லாம் மக்களும் தலையாட்டி ரசித்தார்கள். சொல்லப்போனால் பாகவதர் ஆமோதிக்கிறார் ரசிக்கிறார் நாமும் ஆமோதிப்போம் ரசிப்போம் என்பது போல இருந்தது

இரண்டொரு பாடலைக் கேட்டு ரசித்த பிறகு மக்களின் நெருக்கடியிலிருந்து தப்பிச் செல்வதற்காக பாகவதர் எழுந்து போனார்கள் அப்பொழுது நான் என்ன நினைத்தேனோ அதை அப்படியே எழுதுகிறேன். அங்கே எத்தனையோ விளக்குகள் போடப் பட்டிருந்தாலும், பாகவதர் அந்த இடத்தை விட்டு அகன்றதும் ஏதோ ஒரு இருள் கப்பிக் கொண்டது போல் தோன்றியது எனக்கு மட்டுமல்ல அங்கிருந்த அத்தனை பேருக்கும் அப்படித்தான் தோன்றியது

பொன் நிறமான மேனி, பொன் நிறமான சட்டை, கழுத்தைச் சுற்றி சரிகை மட்டும் தெரியும் மேல் வேட்டி, காதுகளிலும் கைகளிலும் மின்னும் வைரங்கள், நெற்றியில் சவ்வாதுப் பொட்டு! தலையில் அழகான சுருட்டை முடி, இவை அனைத்தும் தங்கத்தால் வார்த்து எடுக்கப்பட்ட ஓர் உருவத்தில் வைரங்கள் பதித்தது போல காட்சி யளித்தன சுருங்கச் சொல்லப்போனால் தங்கத்தால் ஆன ஓர் உருவம் உயிர்பெற்று வருவது போல இருந்தது அது!

பாகவதர் அந்த இடத்தை விட்டுப்போனதும் அந்த இடத்திலும் தங்கள் மனத்தாலும் இருள் கூப்பியது போல மக்கள் உணர்ந்தார்கள். இப்படி பாகவதரின் அழகைப் பற்றி, அறிவைப்பற்றி, அவருடைய ஆற்றலைப் பற்றிப் பல தகவல்கள் அடங்கியுள்ளன இந்நூலில்

***

நடிகவேள் எம்.ஆர் ராதாவைப்பற்றியும் விந்தன் எழுதி யிருக்கிறார் ராதா பற்றி முதன் முதலில் எழுதப்பட்ட வாழ்க்கை வரலாறு இதுதான், ஏனெனில், ராதா அவர்களின் வாக்குமூலத்தை வைத்துக் கொண்டு எழுதப்பட்ட முதல் நூல் என்பதால்,

1962-இல் எம் ஜி.ஆரை, எம் ஆர் ராதா சுட்ட விவகாரம் பத்திரிகையில் பரபரப்பாக எழுதப்பட்டும் பேசப்பட்டதும் உண்டு. அனைத்தும் அடங்கி அமைதியான காலத்தில் எம் ஆர் ராதா சிறையில் இருந்து விடுதலை பெற்று வெளியில் வந்த காலத்தில் எழுதப்பட்டது இத்தொடர்

தினமணி கதிர் பத்திரிகையில் இத்தொடர் வெளிவந்த போது காஞ்சி பெரியவர் சந்திரசேகர சுவாமிகள் தொடரைப் படித்து, 'இராதாவின் இவ்வளவு உண்மைகள் நன்றாக எழுதப்படுகிறது!' என்று

பாராட்டியதோடு ராதாவையும் விந்தனையும் பார்க்க விரும்பினார் இதை அறிந்த ராதா அவர்கள் ''அவர் ரொம்பப் பெரியவர்'' என்று சொல்லியதோடு சரி, பெரியவரைப் பார்க்கவே இல்லை

பள்ளிக்கூடமே போகாத எம்.ஆர் ராதா தம் அறிவாலும், ஆற்றலாலும் அரசியலில், கலைத்துறையில் பல பிரமுகர்களின் நட்பை பெற்றதுண்டு.

ராதாவின் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று

செங்கற்பட்டு அடுத்த பாலாற்றில் டி.வி.எஸ்.வேன் ஒன்று நகர முடியாமல் சிக்கிக் கொண்டது. அவ்வழியே வந்த ராதா, தம் அறிவை பயன்படுத்தி எளிமையாக வேனை வெளியில் எடுத்து விட்டார். அடுத்த நாள் காலையில் ராதாவின் வீட்டு வாசலில் பெரிய கார் ஒன்று நின்றது அதைப் பற்றி விசாரித்தபோது டி.வி சுந்தரம் அய்யங்கார் அனுப்பியதாகவும் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக கொடுங்கள் எனச் சொன்னார் என்றும் கூறப்பட்டது.

இப்படி டி.வி.சுந்தரம் அய்யங்கார், ஜி.டி.நாயுடு, டாக்டர், ரங்காச்சாரி, நீதிபதி கணேசய்யர் போன்றவர்கள் ராதாவிற்கு நண்பர்களாகவும் ஆபத்தில் ஆதரிப்பவர்களாகவும் இருந்தார்கள். சிறப்பாக கம்யூனிஸ்ட் தலைவர் ப.ஜீவானந்தம் - பத்மாவதி காதல் விவகாரத்தில் அவருக்கு பங்கும் உண்டு.

இந்நூலில் எம் ஆர். ராதா வெறும் நடிகர் என்ற நிலையிலிருந்து மாறி அன்புக்கும் பண்புக்கும் உரியவராக, சீர்திருத்த செம்மலாக, தலைவனே தவறு செய்தாலும் தட்டி கேட்கும் தன்மானச் சிங்கமாக உயர்ந்து நிற்கிறார் சிறந்து விளங்குகிறார்

# 8
# மனிதனைத் தின்ற எழுத்துக்கள்!

"**எ**தை எழுதினாலும் அதை நாலு பேர் பாராட்டவாவது வேண்டும்! அல்லது திட்டவாவது வேண்டும்; இரண்டும் இல்லையென்றால் எழுதுவதை விட எழுதாமல் இருப்பது நன்று"

அமரர் கல்கி அவர்கள் விந்தனுக்கு வழங்கிய அறிவுரை இது.

இந்தக் கருத்தை இங்கே எடுத்துக் காட்டுவதின் நோக்கம்

விந்தன் எழுதி எழுதியே பாராட்டுகளை திட்டுகளை அதிகம் பெற்றவர். திட்டியவர்கள் யார்?

ஏழை எளியவர்களைப் பற்றி எழுதியபோது பணக்காரர்கள் திட்டினார்கள்; உழைப்பவர்களின் உண்மையான கஷ்டங்களைப் பற்றி எழுதியபோது முதலாளிகள் திட்டினார்கள்; மனித நேயத்தைப் பற்றி எழுதியபோது மனித நேயமற்றவர்கள் திட்டினார்கள், அரசியல் தில்லுமுல்லுகளைப் பற்றி எழுதியபோது அரசியல்வாதிகள் திட்டினார்கள்

இவ்வாறு நியாயங்களை நிலைநாட்ட எழுதியபோது அநியாயக்காரர்கள் ஆர்ப்பரித்தார்கள். ஆனால் விந்தன் எதற்கும் அஞ்சாமல் தம் கருத்தை எடுத்துச் சொன்னார். அதன் பொருட்டே எழுதி எழுதியே துன்பத் துயரங்களை அனுபவித்தார்.

இறுதி காலத்தில் விந்தன் தம் ஆசைகளை ஆதங்கங்களை வெளிப்படையாகச் சொன்னார்:

"என் வாழ்க்கையில் 1946 - ஆம் ஆண்டை நான் சிறப்பான ஆண்டு என்று சொல்லவேண்டும். அந்த ஆண்டில்தான் தமிழ்நாடு அரசினர் முதன் முதலாக அளிக்க முன் வந்த சிறுகதைகளுக்கான பரிசை நான் முதன் முதலாகப் பெற்றேன். அதைத் தொடர்ந்து வெளியான 'பாலும் பாவையும்' என்ற நாவல் மக்களின் பேராதரவைப் பெற்று, அந்த ஆதரவு வேறு எந்த நாவலுக்கும் இல்லாத அளவுக்கு இன்றுவரை நீடித்து நின்று வருகிறது.

அந்த நாவல் வெளியான காலம் 'சாகித்ய அகாதெமி' என்ற ஓர் அமைப்பு தோன்றாத காலம் தோன்றி இருந்தால் 'பாலும் பாவையும்' அந்த நாளிலேயே அது அளிக்கும் பரிசைப் பெறும் தகுதியை முதன் முதலில் பெற்றிருக்கலாம்

''மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்று சொல்லப்படுவது உண்மையானால் அதன் தீர்ப்பு மட்டும் வேறு விதமாக இருந்திருக்கப் போகிறது?

அது மட்டுமல்ல, ''திறமையான புலமை எனில், அதை வெளி நாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்'' என்று சொல்லி விட்டுப்போனான் பாரதி அந்தப் புலமையை என் கதைகளிலும் கண்டதால்தானோ என்னவோ அவற்றில் பல இந்திய திராவிட மொழிகளில் மட்டுமல்ல, உலகமெங்கும் உள்ள பல முற்போக்கு நாடுகளில் பல அயல்நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன

இந்த நிலையில் 'பாலும் பாவையும்' என்ற நாவலைத் தொடர்ந்து பல நாவல்கள் சிறுகதைகள் பல கட்டுரைகள் திரட்டுகள் வெளி வந்திருக்க வேண்டும். வரவில்லை ஏன்?

காரணம் வேறு யாருமல்ல நானே!

'ஏதோ ஏதோ ஒரு மயக்கம்!' என்கிறார்களே சினிமாவில் வரும் காதலர்கள், அப்படி ஒரு மயக்கம் அடியேனையும் அந்நாளில் ஆட்கொண்டது. அதன் காரணமாகவே பல வகைகளில் எனக்குக் கற்பகத்தருவாக இருந்து வந்த கல்கி அலுவலகத்தை விட்டு கல்கி அவர்கள் எச்சரித்தும் கேளாமல் விலகினேன்

நடக்கக்கூடாத இது நடந்தது 1951 - ஆம் ஆண்டில்.

அப்போது சுந்த சுயமரியாதை வீரனாக இருந்து வந்த நான் இப்போது சில இடங்களில் சில விஷயங்களில் 'அட்ஜஸ்ட்' செய்து கொண்டு போவது போல் போயிருந்தால் நானும் மற்றவர்களைப் போல் சினிமா உலகிலும் பிரகாசித்து இருக்கலாம் அந்த புத்தி அப்போது இல்லாததால் அதிலிருந்தும் விலகி சுதந்தர எழுத்தாளனாக இருந்து சுடர்விட முயன்றேன். நான் விட முயன்றாலும் என்னைவிட விரும்பாத சுயமரியாதையோ அற்கும் குறுக்கே நின்று தொலைத்தது.

'இதெல்லாம் எதற்கு, சொந்தமாகவே ஒரு பத்திரிகையே நடத்தி பார்த்து விடுவோமே?' என்று 1954ஆம் ஆண்டில் 'மனிதனை' ஆரம்பித்தேன் மக்கள் ஆதரவு அதற்கு அமோகமாக இருந்தாலும் விற்பனையாளர்கள் செய்த சத்திய சோதனையாலும் அந்த சத்திய சோதனையிலிருந்து அவ்வப்போது மீள்வதற்கு வேண்டிய பொருளாதார வசதியோ மீட்பதற்கு வேண்டிய நண்பர்களோ

இல்லாததாலும் அதுவும் பிறந்த ஓராண்டு காலத்திற்குள்ளேயே பிராணனை விட்டுவிட்டது. இதனால் எனக்கு ஏற்பட்ட இழப்பு மிகப்பெரியது''

விந்தன் வாழ்க்கையில் எத்தனையோ இழப்புகளை கண்டிருக்கிறார் ஆனால் 'பசிகோவிந்தம்' 'அன்பு அலறுகிறது' 'மனிதன் மாறவில்லை' 'தெரு விளக்கு' ஆகிய நான்கு புத்தகங்களை எழுதியதால் ஏற்பட்ட இழப்பு மிகப்பெரியது அவர் வாழ்க்கையில் அவ்வப்போது அந்தப் புத்தகங்கள் அவரை மிரட்டின; துன்புறுத்தின, சிரித்து சிரித்தே பழித்தன, இலக்கிய உலகில் இருட்டடிப்பு செய்தன

அந்தப் புத்தகங்களில் சம்பந்தப்பட்டவர்கள் அமைதியாக இருந்தார்கள் ஆனால், ஆதரவாளர்கள் தமிழ்நாடு முழுவதும் எதிர்ப்பு குரல் கொடுத்தனர். ஆனாலும் விந்தனின் எழுத்தில் மதிப்பு வைத்திருந்த ஒரு சிலரின் ஆதரவால்தான் அவர் சில காலம் வாழ முடிந்தது.

விந்தன் சொல்வார்.

**''வாழ்ந்தாலும் 'லோ சர்க்கி'ளோடு வாழ்வேன்;**
**செத்தாலும் 'லோ சர்க்கி'ளோடு சாவேன்!''**

அவ்வாறே அவர் மரணம் நிகழ்ந்தது.

# பின்னிணைப்புகள்

## விந்தன் எழுதிய நூல்கள்

**விந்தன் கதைகள்**

இரண்டு பாகம் (92 கதைகள் உள)

**நாவல்கள்**

கண் திறக்குமா?

பாலும் பாவையும்

அன்பு அலறுகிறது

மனிதன் மாறவில்லை

காதலும் கல்யாணமும்

சுயம்வரம்

**கட்டுரைகள்**

வேலை நிறுத்தம் ஏன்?

விந்தன் கட்டுரைகள்

**கவிதை**

பாட்டினில் பாரதம்

**புதிய வார்ப்புகள்**

குட்டிக் கதைகள்

பசி கோவிந்தம்

ஓ, மனிதா!

மிஸ்டர் விக்கிரமாதித்தன்!

**வாழ்க்கை வரலாறுகள்**

எம்.கே.டி. பாகவதர் கதை

சிறைச்சாலை சிந்தனைகள்

(எம்.ஆர்.ராதா வரலாறு)

**திரைப்படங்கள்**

வாழப் பிறந்தவள்

| | |
|---|---|
| அன்பு | 1953 |
| கூண்டுக்கிளி | 1954 |
| மணமாலை | 1958 |
| குழந்தைகள் கண்ட குடியரசு | 1960 |
| பார்த்திபன் கனவு | 1960 |
| சொல்லு தம்பி சொல்லு | 1960 |

*(ஏழு படங்களுக்கு வசனம் எழுதியுள்ளார்)*

**ஆதார நூல்கள்**


| | |
|---|---|
| தாமரை - எஸ். தோத்தாத்ரி எம் ஏ. | 1978 |
| சிறுகதைச் செல்வம் -முனைவர் சாலை இளந்திரையன் | 1978 |
| கல்கி | 1961 |
| ஆனந்த விகடன் | 1961 |
| பொன்னி | 1951 |
| விந்தனும் விமர்சனமும் | 1982 |
| அடியும் முடியும் கலாநிதி கைலாசபதி | 1970 |


**மு. பரமசிவம் எழுதிய விந்தன் பற்றிய நூல்கள்**


| | |
|---|---|
| விந்தனும் விமர்சனமும் | 1982 |
| மக்கள் எழுத்தாளர் விந்தன் | 1983 |
| விந்தன் நாவல்கள் (ஆய்வு) | 1987 |
| திரையுலகில் விந்தன் | 2001 |

டாக்டர். வீ.அரசு. விந்தன் சிறுகதைகள் (எம்.பில். ஆய்வு)



**விந்தன்** இவருடைய படைப்புகள் வித்தியாசமானவை தமிழில் ஏழை எளியவர்களை-உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தினரைப் பற்றிச் சிந்தித்து சிறுகதைகளை எழுதியவர் 1946 இல் தமிழக அரசு - தமிழ் வளர்ச்சி கழகம் முதல் பரிசினை விந்தனின் **முல்லைக் கொடியாள்** படைப்புக்கு அளித்துச் சிறப்பித்தது கல்கி பத்திரிகையில் பணியாறறியபோது இவர் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார் அதில் **பாலும் பாவையும்** என்ற நாவல் மேடை நாடகமாகவும், வானொலியில் அனைத்து இந்திய மொழிகளிலும் ஒலிப்பரப்பப்பட்டது இந்நாவலின் லட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாயின கன்னடத்திலும் மொழிபெயர்த்து வெளி யிடப்பட்டது மேலும் ஆறு நாவல்கள்- ஏழு திரைப்படங்களுக்கு வசனம் - ஒரு சில பாடல்களும் எழுதியுள்ளார் பாட்டில் பாரதம் என்ற காவியத்தைப் படைத்தார் புதுமையான முறையில் 'ஓ மனிதா' போன்ற சிற்றிலக்கியங்கள் எழுதினார் தினமணி பத்திரிகையில் துணை ஆசிரியராக இருந்தபோது இயல் இசை மன்னர், எம்.கே டி பாகவதர் பற்றி முதன்முதலாக வாழ்க்கை வரலாறு எழுதியவரும் இவரே சிறைசாலை சிந்தனை என்ற தலைப்பில் நடிகவேள் எம் ஆர் ராதா பற்றி வாழ்க்கை வரலாறு எழுதியவர்

**மு. பரமசிவம்** சென்னையே பிறப்பிடம் செந்தமிழே தாய்மொழி பள்ளியில் இரண்டு ஆண்டே படித்தவர் **கல்கி** அச்சகத்தில் பணியாற்றிய இவர் கல்கி எழுதிய **சிவகாமி சபதத்தையும்** விந்தனின் **பாலும் பாவையும்** நாவலையும் கையெழுத்துப் பிரதியிலேயே படித்தவர் விந்தனின் இறுதிக்காலம் வரை அவருடன் நெருங்கிய நண்பராகப் பழகியவர் மூன்று நாடகங்கள் - மூன்று தொகுப்பு நூல்கள்- ஆறு வாழ்க்கை வரலாறுகள் - ஒரு நாவல்- ஒரு ஆய்வு நூல் ஆகியவை இவரால் எழுதப்பட்டவை **கற்சிலை** என்ற சிறு பத்திரிகையை நடத்தியவர்

*Vindhan* (Tamil) Rs.25
ISBN-81-260-1246-3

இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும்
சாகித்திய அக்காதெமி, உலகிலேயே மிகப் பெரியவெளியீட்டகம்.